


# 1

பத்திரிகையில் வெளியாகியிருந்த அந்தச் செய்தியைப் பார்த்தவுடனேயே, உச்சந்தலை சூடேறிப்போனது நடிகை தேஜஸ்ரீக்கு...

தான் இப்போது மருத்துவமனையில், டாக்டர் பாலாஜியின் மேற்பார்வையில் இருக்கிறோம் என்கிற நினைப்பை எல்லாம் உதறிவிட்டுக் கத்தினாள்.

''விநாயக்.... எங்கே போய் தொலைஞ்சே... விநாயக்...''

''அடடா... எதுக்கு கத்தறே... டாக்டர் என்ன சொல்லி இருக்காப்பல? இந்த சமயத்துல உணர்ச்சி வசப்படறதோ, கத்தறதோ கூடாதுன்னு சொல்லியிருக்காங்க இல்லே? ரூம் ஏர்கண்டிஷன் சரியாவே ஒர்க் பண்ணலே... இன்னும் கொஞ்ச நேரத்துல வெயில் ஏறிடும். நீ தாங்க மாட்டே.... அதுக்கு வேற கத்துவே... அதான் போய்...''

படுக்கையில் படுத்தபடியே அவனை வெறித்துப் பார்த்தாள் தேஜஸ்ரீ... விழி விளிம்பில் 'வரட்டுமா' எனக் காத்திருக்கும் கண்ணீரில் நிச்சயமாய் கிளிசரின் இல்லை... கையிலிருந்த தினசரியைத் தூக்கி, விநாயக்கின் மீது விசிறியடித்தாள்.

''என்னது?''

''நீயே பாரு...''

''அட, நீதான் சொல்லேன். என் வெள்ளெழுத்துக் கண்ணாடியை வீட்டுலேயே மறந்து வச்சுட்டேன்...''

''மூக்குக் கண்ணாடி போட்டுட்டுப் படிக்கிற அளவுக்கு மேட்டர் ஒண்ணும் பொடிசா வரலே... கொட்டை கொட்டையா...''

இதற்குள் விநாயக், அவளது கோபத்துக்குரிய செய்தியைத் தேடிக் கண்டுபிடித்து விட்டான்.

**'நடிகை தேஜஸ்ரீயின் காதல் இப்போது திசை மாறியுள்ளது. டைரக்டரும், தயாரிப்பாளருமான ரத்னகுமாரும், தேஜஸ்ரீயும் அடுத்த மாதம் திருமணம் செய்வதாக இருந்தது பழைய செய்தியாகி விட்டது. தேஜாவின் புதுக்காதலன் சமீபத்திய வெள்ளி விழா நாயகனான...''**

விநாயக் படித்து முடிக்கும் வரையில், அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த தேஜஸ்ரீ உறுமினாள்.

''பார்த்தியா... அந்தப் புது ஹீரோவுக்கு என்ன வயசு இருக்கும். என்னை விட எட்டு வயசு சின்னவன். இத்தனைக்கும் அந்தப் படத்துல நான் அவனுக்கு அண்ணியா நடிச்சேன். கொஞ்சமாவது விவஸ்தை இருக்கா இவனுங்களுக்கு... ச்சே!''

''அதையேதான் நானும் சொல்றேன்... எத்தனை பணம் கொடுத்தேன் தெரியுமா... இந்த நியூஸ் வர்றதுக்கு. அதுவும் என்ன சொல்லிக் கொடுத்தேன்... 'முடிஞ்சா முதல் பக்கத்துல... இல்லையின்னா ரெண்டாம் பக்கத்துலயே

போட்டுடா ராஜா'ன்னு சொல்லி, மவனை விஸ்கியாலேயே குளுப்பாட்டினேன். கடைசியில என்னமோ இரங்கல் செய்தி மாதிரி ஓரத்துல தள்ளிட்டான். அத்தனை போட்டோ அள்ளிட்டுப் போனானே... எங்கேயிருந்து பிடிச்சான் இந்த ஸ்டாம்பு சைஸ் போட்டோவை... இருக்கட்டும்... 'மண்ணு திண்ணும் பொண்ணு' படம் 'ப்ரிவ்யூ'வுக்கு வந்து, 'அண்ணே'யின்னு தலையைச் சொறிவானில்லே... அப்ப கவனிச்சுக்கறேன்...'

விநாயக், உண்மையான ஆவேசத்துடன் கத்த தேஜஸ்ரீ விக்கித்துப் போனாள்.

"இப்படியொரு செய்திய நீயா கொடுத்தே?"

"பின்னே? உன் மாமியாரா கொடுப்பாங்க...?"

"டேய்... போடா... என் கண் முன்னாடியே நிற்காதே... கெட் அவுட்..."

தேஜஸ்ரீ தன்னை மறந்து கத்த, விநாயக்கும் கொஞ்சம்கூடத் தயங்காமல் பதிலடி கொடுத்தான். ஆனால், இவளைப் போலக் கத்தவில்லை.

"இந்தா... எதுக்காகக் கத்தி ஊரைக் கூட்டறே? இப்ப உனக்கு செஞ்சிருக்கற பிளாஸ்டிக் சர்ஜரிக்கு மட்டும் ரெண்டு லட்சரூபா ஆகியிருக்கு. இன்னும் ரூம் சார்ஜ், பெட் ஜார்ஜ், டாய்லட்டுக்கு உபயோகிக்கற பினாயில் சார்ஜ் இப்படி அது வேற இருக்கு..."

"அத்தனையும் என் பணம்தான்... நீ ஒண்ணும் கைய விட்டுச் செலவழிக்கலே..."

"ஆமா தாயே. ஒத்துக்கறேன். டாக்டர் என்ன சொல்லியிருக்காங்க. 'ஆபரேஷன் செய்யறது பெரிசல்லே... எல்லாம் 'செட்' ஆற வரைக்கும் உணர்ச்சி வசப்படக்கூடாது. கத்தக்கூடாது. முகத்தைக் கோணல் மாணலாச் சுருக்கக் கூடாது'ன்னு சொல்லிட்டுப் போகல்லே? இல்லைன்னா உன்னை எதுக்கு ஆஸ்பிட்டல்லே வச்சிருக்கணும்? வருஷப் பிறப்புக்கு, 'நிறைமாசக்காரி' ரிலீஸ் பண்ணணும். புரடியூசரும், டைரக்டரும், ரெண்டு நாள் 'பேட்ச் அப்' தானுனு விழுந்து சேவிக்கிறாங்க. நான், நீ அவசரமா உங்கம்மாவைப் பார்க்க லண்டன் போயிருக்கறதாப் பொய் சொல்லியிருக்கேன்... அவனவன் சாபம் கொடுக்கறதைப் பார்த்தா ஏழு தலைமுறைக்கு என் வம்சமே நல்லாயிருக்காது... அத்தனையும் தாங்கிட்டு, உன் கூட இத்தனை வருஷமா இருக்கேன் பாரு... அதுக்கு..."

விநாயக், இறுதியில் தன் விழிகளை சிரமப்பட்டு, சட்டை நுனியால் துடைத்து விட்டுக் கொண்டான்.

தேஜஸ்ரீ முகம் முழுக்க பிளாஸ்திரி ஒட்டப்பட்டு, கண், காது, மூக்கு, வாய் மட்டும் உபயோகப்படும் வகையில் கட்டிலில் கிடந்தாலும், அவளது தாடை அசைவிலிருந்து, பற்களைக் கடிப்பது விநாயக்குக்கு தெரிகிறது...

"பல்லைக் கடிக்காதே.. சீனாக்கார டாக்டர்கிட்ட அடுத்தாப்பல போகணும். ஏற்கனவே அவன் கத்துட்டதை எல்லாம் உன்கிட்டத்தான் பிராக்டீஸ் பண்ணிட்டிருக்கான்."

விநாயக், காபியைக் கலந்து, அந்த 'கப்'பில் ஒரு ஸ்ட்ராவைப் போட்டு, அவளது உதட்டில் பொருத்தினான்.

"உறிஞ்சு... இன்னும் ஒரு வாரம்... பொறுத்துக்க..."

"அப்புறம் மட்டும் என்ன... வேணுங்கறதைத் திங்கவா முடியும்? சொல்லு...



இப்படியொரு நியூஸ்... இதைக் கொடுக்க வெட்கமாயில்லே உனக்கு? உன் பொண்டாட்டியப் பத்தி இது மாதிரி வந்தா அப்பத் தெரியுமடா உனக்கு."

"அம்மாடி... என் பொண்டாட்டி மட்டும் உன்னை மாதிரி இருந்திருந்தா நான் இப்படி காபி கலந்துட்டிருக்க மாட்டேன். நானே ஒரு பிரஸ் மீட்டிங்குக்கு அரேஞ்ச் செஞ்சு, அவ எந்தெந்தத் தேதியில எந்தெந்த ஹீரோவோட சுத்தினான்னு ஒரு லிஸ்டே கொடுப்பேன்..."

"சீ த்தூ..."

"அப்படிக் காறித் துப்பாதே... காபியும், ஜூஸும் குடிக்கிறது ஸ்ட்ரா மூலமா... துப்புறதுக்கு மட்டும் உதட்டை உபயோகிக்கலாமா... தப்பு... கன்னம், தொண்டையில எல்லாம் எத்தனை தசை அசையும்? ரெண்டு லட்ச ரூபா ஞாபகம் வச்சுக்க. துப்பணும்னு தோணிச்சுன்னா ஸ்ட்ரா இருக்கு இல்லே... அதாலேயே துப்பு..."

தேஜஸ்ரீ வெறுத்துப் போய் உட்கார்ந்திருந்தாள்.

இன்றா நேற்றா.

பதினேழு வயசில இவன் கையில் சிக்கினாள். இன்று இந்த சினிமா உலகுக்கு வந்து கிட்டத்தட்ட இருபது வருடங்களாகி விட்டது...

இவள் வந்தபோது ரஜினி, கமலுடன் தங்கை வேடம்... வில்லனால் கற்பழிக்கப்பட்டு சாவதற்காகவே படைக்கப்பட்டாற் போல... ஒரு சீட்டிப் பாவாடை - தாவணியும், கிழிந்த ரவிக்கையும், கழுத்தில கருகுமணிச் சரமும், நொறுக்கப்படுவதற்காகக் கண்ணாடி வளையலும்தான் இவளது காஸ்ட்யூம்.

"பாரு... நீ எங்கேயோ போயிட்டப் போறே... அப்ப எல்லாம் இந்த அண்ணனை நினைச்சுப் பார்ப்பியா நீ... ஆமா... உன் குடும்பம் எங்கே இருக்குதுன்னே?"

"ஆந்திராவுல அண்ணே... ஆனா, நாங்க எல்லாம் தமிழ் பேசறவங்கதான். எங்க வூட்டுக்காரர், எங்க நாத்தி புருஷன் எல்லாரும் அங்கேதான் தொழில் செஞ்சிட்டிருக்காங்க..."

"பதினேழு வயசுதான்னு சொன்னே.. கல்யாணமாயிடுச்சா...? சீல் விடறியா?"

"அய்யோ... இல்லேண்ணே... திருப்பதி சாமி அறிய நான் பொய் சொல்லலே அண்ணே. எனக்கு பதிமூணு வயசுலயே கல்யாணமாயிடுச்சு. முறைப் பையன்... அவருக்கு அப்ப முப்பத்தஞ்சு வயசு... கள்ளச்சாராயம் காய்ச்சறதுதான் தொழில்... தினமும் குடிச்சிட்டு வந்து அடிப்பாரண்ணே... எங்க மாமியார் குறுக்கே விழுந்து அடிய வாங்கிக்கும்... அடி தாள முடியாம ஓடி வந்திட்டேன் - ஆறு மாசக் குழந்தைய விட்டுட்டு..."

"பாருடா... ஒவ்வொண்ணா வெளில வருது... புள்ள வேற இருக்கா? பொண்ணா, பையனா?"

"பொண்ணு... சமித்தான்னு ஆசையாப் பேரு வச்சேன் அண்ணே... கண்ணும் மூக்கும் இன்னிக்கெல்லாம் பாத்துட்டே இருக்கலாம்... பாவி நா... 'குழந்தைய விட்டுட்டு ஓடு தாயி'ன்னு மாமியாரு சொன்னாங்க... சரிதான்னு ஓடியாந்துட்டேன்... என் கண்ணு... என் தங்கம்... இன்னும் பால்குடி மறக்கலை அண்ணே..."

அன்றைக்கு இவள் அழுத அழுகை...

இந்த விநாயக் அன்று விநாயக மூர்த்தியாய் ஒரு ஓட்டு வீட்டில், ஒற்றை

அறையில், தன்னைப் பெற்ற தாய் சமைத்துப் போட - சினிமா போஸ்டர்களை ஒட்டும் தொழிலைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கிழவி, மகனை தனியே அழைத்துப் போய் கேட்டாள்:

''ஏண்டா, இந்த தரித்திரத்துக்கும் நான் வடிச்சுக் கொட்டணுமா? மூஞ்சியப் பாத்தா இதை நம்ம பேட்டை ஆளுங்க ரொம்ப நாளைக்கு விட்டு வைக்க மாட்டாங்க போலத் தோணுதேடா... எதுக்கு கருமாந்தரத்தை இழுத்து விட்டுக்கணும்... காலையில நடையக் கட்டச் சொல்லு. நமக்கு வேணாம்...''

''புரியாமப் பேசாதே கிழவி. பொண்ணைப் பாரு. இப்பத்தான் பறிச்ச வெள்ளரிப் பிஞ்சு கணக்கா இருக்கு...''

''அதுக்காக... கட்டிக்கப் போறியா... டேய்... ஆத்தா ஒருத்தி குத்துக் கல்லாட்டம் வூட்டுலே இருக்கறச்சே... எவளோ ஒருத்தி ஏற்கனவே தாலி கட்டி ஒருத்தனுக்கு முந்தானை விரிச்சு, புள்ளையும் பெத்துட்டிருக்கறதா அவ வாயாலேயே ஒத்துக்கறா... அவளை நீ கட்டினியானா... நான் எத்தயாவது அரைச்சு குடிச்சுட்டு செத்துடுவேன்... தெரிஞ்சுக்க...''

''ஆமா போயேன்... இவ பெரிய பண்டாரிபாய்... அமுது மாய்மாலம் செய்யக் கிளம்பிட்டா... இத்தப் பாரு... இவள வச்சு ஏதுனாச்சும் காசு பண்ண முடியுமான்னு பாக்கறேன். கண்ணாலம் பண்றது எல்லாம் இப்ப இல்லே... சோத்தைப் போடு...''

அந்த நேரத்தில் விநாயக மூர்த்திக்குத் தெரிந்ததெல்லாம், தனக்குப் பழக்கமான ஒரு சினிமா கம்பெனி புரடக்ஷன் மானேஜரிடம் பெண்ணை அறிமுகம் செய்து வைத்துவிட்டால் கணிசமாய் நூறோ, இருநூறோ கிடைக்கும் என்பதுதான்.

அந்த மனிதர் கொஞ்சம் சபல சித்தமுள்ளவர்... அது மட்டுமில்லை... தனது ரசனையை, 'பளிச்'சென்று சொல்லவும் செய்வார்.

''என்னடா எக்ஸ்ட்ராக்களை கொண்டாறீங்க... ஒண்ணு ஒட்டடைக் குச்சியா இருக்கு... இல்லே ரோடு ரோலர் கணக்கா இருக்கு... கதாநாயகி கல்லூரி மாணவிடா... இந்த மூகரக் கட்டைங்க முகம் ஒண்ணுலயாவது அறிவுக் களை இருக்கா... எப்படா பிரியாணிப் பொட்டலம் வரும்னு... முழிக்கிற முழியப் பாரேன்... புஸ்தகத்தை எப்படி பிடிக்கணும்னு தெரியுமா?''

அன்று இவளை, அவரிடம் விநாயகமூர்த்தி அழைத்துப் போனபோது கூட, இப்படித்தான் உதவி நடிகைகளை மட்டம் தட்டி அழ வைத்துக் கொண்டிருந்தார்.

''அழுவாதீங்க... பெரியவர்கிட்ட திட்டு வாங்கினவங்க எல்லாம் இப்ப ஹீரோயினாக் கொடி கட்டிப் பறந்துட்டிருக்காங்க... இதுக்கே அழுதா எப்படி? இன்னும் அஸிஸ்டெண்ட் டைரக்டர்கிட்ட திட்டு வாங்கணும், டான்ஸ் மாஸ்டர்கிட்ட திட்டு வாங்கணும். கேமராமேன், லைட்பாய், கடைசியில டைரக்டர்... அவரு சொல்ல முடியாது... கோவத்துல 'பளார்'னு அறைஞ்சாலும் அறைவாரு... அதுக்கெல்லாம் மனசைத் திடம் பண்ணிட்டுத்தான் 'செட்'டுக்குள்ளேயே வரணும்...''

-இது நடிகைகளை சப்ளை செய்யும் மனிதனின் சமாதானம்...

இப்பேர்பட்ட முகூர்த்த நேரத்தில்தான் விநாயகமூர்த்தி... பின்னாலேயே இவள்.

''நீ என்னடா சொல்ல வந்திருக்கே... போஸ்டர் எல்லாம் ஒட்டியாச்சா... இல்லே



பழைய பேப்பர்காரன்கிட்ட போட்டு, தண்ணியடிச்சிட்டியா?''

''அய்யோ... என்னங்க நீங்க... வெளில ஒரு ரவுண்டு போய் பாருங்க... காலையில எனக்கும் இன்னொரு ஆளுக்கும் வெட்டுப் பழி, குத்துப் பழி... நம்ம போஸ்டர் மேல ஒட்ட வந்தான் விடுவேனா... அடிச்ச அடியில உதடு அறுந்து...''

இப்பொழுதுதான் அவர், அவனுக்குப் பின்னால் நின்றவளைப் பார்த்தார்.

''யாருடா இந்தக் குட்டி... ஜோக்கா இருக்கா...''

''நம்ம உறவுமுறைங்க... வீட்டுக்கு வந்திருக்கு... சினிமாப் படம் புடிக்கறதைப் பாக்கணும் அண்ணேயின்னு கெஞ்சிச்சி. எனக்கு உங்க நினைப்புதான் வந்துச்சு... இப்பத்தானுங்க இல்லீங்க... நல்லது எதைப் பார்த்தாலும் எனக்கு உங்க நினைப்புத்தான் வரும்... எனக்கு சோறு போடற தெய்வமாச்சே... அதான்...''

''பேரென்ன...?''

''செல்லாத்தாங்க...''

இதையும் அவனேதான் சொன்னான். அவர், அவளை அப்படியே விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தார்.

''எப்படிடா... ரேட் சொல்லு. 'டெம்பரவரி'யா விடறதா உத்தேசமா... இல்லே 'பெர்மனண்ட்'டா கொடுக்கறியா... எதுக்கு கேட்கறேன்னா... அபூர்வமான பொருள் எல்லாம் அடிக்கடி கை மாறக் கூடாதுடா... மொத்தமா குத்தகைக்கு விட்டுடு... முதல்லே ஒரு வருசத்துக்கு... மூவாயிரம்... சரியா...''

'ஆ' வென வாய் பிளந்து நின்றான் விநாயமூர்த்தி.

செல்லாத்தாவோ, இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றே புரியாதவளாய் பராக்குப்பராக்க விழித்தபடி நின்றாள்.

அந்த நேரம் பார்த்துத்தானா உதவி டைரக்டர் ஓடி வர வேண்டும்?

''சோமு... தங்கச்சி ரோல் பண்ற பொண்ணு எங்கே?''

''இன்னுமா வரல்லே...? எம்பா குமார்... நேத்தே படிச்சுப் படிச்சு சொன்னேனில்லே?''

''இந்நேரம் வந்திருக்கணுமே சார்... நா வேணா ஒரு நடை காரை எடுத்திட்டுப் போய்...''

சோமு, உதவி டைரக்டர் முன்பு எக்ஸ்ட்ரா சப்ளையர் குமாரை எரிந்து விழுந்தார்.

''ஆமா... அந்த மகாராணிய அழைச்சிட்டு வா. இவரு காரு எடுத்திட்டுப் போறாராம். டைரக்டர் பின்னிடுவாரய்யா... இப்ப உன்கிட்ட இருக்கற சரக்குல, சுமாராவாவது எதுவும் தேறாதா... எல்லாம் முத்தலும், சொத்தையுமா...''

உதவி டைரக்டரின் பார்வையில் செல்லாத்தா பட்டது அவளது அதிர்ஷ்டமா -துரதிருஷ்டமா...?

இன்று வரையில் தெரியவில்லை.

செல்லாத்தாவைப் பார்த்த டைரக்டர் வாய் பிளந்தார். ஹீரோ, வைத்த கண்ணை எடுக்கவில்லை. கதாநாயகி பொறாமையில் உஷ்ணமாய் மூச்சு விட்டாள்.

''டைரக்டர் சார், இது எனக்குத் தங்கையா... பேசாம ரோலை மாத்திடுங்க சார்... இவ ஹீரோயினா இருக்கட்டும்...''

கதாநாயகன் கிண்டலடித்தாலும் அதில் உண்மை இருந்தது. அன்றைய செல்லாத்தா அழகிலாகட்டும், நிறத்திலாகட்டும், உடற் கட்டிலாகட்டும் முதல்தரமாக இருந்தாள்.

ஆனால் கதைப்படி அவளுக்கு ஏழை தங்கை வேடம். மிகச்சிரமப்பட்டுத்தான் அவளது தேஜஸைக் குறைக்க வேண்டியிருந்தது.

''மேக்கப் வேண்டாம்பா... ஏற்கனவே ரொம்ப பிரைட்... கண்ணைக் கூசுது... 'டல்' மேக்கப்... சும்மா 'டச்' பண்ணு... போதும்... தலை முடி என்ன... அத்தனையும் ரியல்லா... பியூட்டிஃபுல்... நம்ம வில்லன் சார் என்ன பண்றீங்க... தலைப் பின்னலையே உபயோகிக்க, கழுத்துல சுருக்கி... குட்... அப்படித்தான்.''

என்னது... ஏது... என்று விளங்கும் முன்பே அவள் பளீரிடும் விளக்குகளின் முன்னால் நின்றாள். வில்லன் கட்டித் தழுவிய போதெல்லாம் நிஜமென நினைத்து, 'அண்ணே....அண்ணே' என்று விநாயமூர்த்தியைத் தேடி அலறினாள்... கடைசியில் பின்னலால் கழுத்தில சுருக்கிட்டபோது, உண்மையிலேயே மயங்கி விழுந்தாள். கதாநாயக அண்ணன் ஓடி வந்து அவளைத் தூக்கி, மடி மீது வைத்துக் கதறி, கட்டியணைத்து, கன்னத்தில் முத்தமிட்டு 'தங்கச்சீ' என அழுத போது...

டைரக்டர் திருப்தியுடன் 'கட்' என்றார்.

''சும்மா சொல்லக் கூடாது... பிரமாதமா செஞ்சிட்டீங்க...''

அவர், கதாநாயகனிடம் கூறி, கை குலுக்க, அவனோ, தரையில் மயங்கிக் கிடந்தவளை மறுபடியும் ஒரு முறை வியப்புடன் பார்த்துவிட்டுச் சொன்னான்:

''நான் எங்கே சார் நடிச்சேன்... அந்தப் பொண்ணு இல்லே... ஆமா... புதுசா சார்... இது வரைக்கும் பார்த்ததே இல்லை...''

''புதுசுதான்.-அதுக்கென்ன, அடுத்தாப்பல உங்களை வச்சு நான் எடுக்கப் போற படத்துல செகண்ட் ஹீரோயினாப் போட்டுடறேன்...''

டைரக்டர் புத்திசாலி. அன்றைக்கு கொடி கட்டிப் பறந்த கதாநாயகனின் நோக்கமறிந்து பதில் சொன்னார்.

விநாயகமூர்த்தியோ அவரை விடவும் புத்திசாலியாக இருந்தான். பின் என்ன... இந்த ஒரு சின்ன கதாபாத்திரத்துக்கே செல்லாத்தாவுக்கு ஐயாயிரம் ரூபாய் சம்பளம் கிடைத்து விட்டதே...

திரும்பிப் போகும்போது - புரடக்ஷன் மானேஜர் சோமப்பாவைப் பார்த்து பெரிய கும்பிடாகப் போட்டு விட்டு, செல்லாத்தாவின் கையையும் பிடித்து 'தரதர'வென இழுத்துக் கொண்டு கிளம்பி விட்டான் அவன்...

அன்றைய தினமே அவன் தன் 'பெயரை 'விநாயக்' என்று சுருக்கிக் கொண்டான். செல்லாத்தாவை ஒரு பிளாட்பார ஜோசியரிடம் அழைத்துப் போய் நூறுக்குள் ஒரு நம்பர் சொல்ல வைத்து, தேஜஸ்ரீ என்று பெயர் மாற்றினான்.

அதற்குப் பின் இன்று வரையில்...

தேஜஸ்ரீயைப் பொறுத்த வரையில் காலம்தான் ஓடிக் கொண்டே இருக்கிறதே தவிர அவள் ஏதோ காயகல்பம் சாப்பிட்ட மாதிரி அப்படியேதான் இருக்கிறாள்.



இதுவரையில் அவள் கதாநாயகியாய் நடித்த படமெல்லாம் நூறு நாளைத் தாண்டி ஓடியது மட்டுமில்லாமல், ராசியான நடிகை, நடிப்புத் தெரிந்தவள், பிரச்சினை கொடுக்காதவள் - இப்படிப் பல புகழாரங்களை அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

இவளது உபயத்தில் 'விநாயக்'கும் தன் பங்குக்கு பணத்தை அள்ளிக் குவித்துக் கொண்டே இருக்கிறான்... மனிதனுக்கு உடம்பு முழுவதும் மூளை...

தேஜஸ்ரீயின் இளமை மாறாமல் இருக்க அவளுக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய அமெரிக்காவில் படித்த வந்த டாக்டர் பாவனாவைத் தேடிப் பிடித்ததிலிருந்து தேஜஸ்ரீயின் மார்க்கெட் சரியாமல் இருக்க அவளைப் பற்றி ஏதாவது ஒரு 'கிசுகிசு' அடிக்கடி பத்திரிகையில் அடிபடும் வரையில் எத்தனையோ கவனித்துக் கொள்கிறான் அவன்.

விநாயக்கை மீறி எவனும் தேஜஸ்ரீயின் பக்கத்தில் கூட வந்து விட முடியாது. கண் கொத்திப் பாம்பு போலப் பார்த்துக் கொண்டே இருப்பான்.

அதே சமயத்தில், அவனுக்குத் தெரியாமல் தேஜா ஒரு ஷாப்பிங் கூடப் போய் வர முடியாது.

''உனக்கு என்ன வேணும் தேஜா... வேண்டிய துணி மணிய வீட்டுக்குக் கொண்டு வரச் சொல்றேன். எத்தனை சவரன் வேணும்? எல்லாம் வீடு தேடி வரும். 'செக் புக்' கை மட்டும் எடுக்கவே எடுக்காதே. காசு செலவு இல்லாம காரிலே இருந்து பங்களா வரைக்கும் கேட்டது கிடைக்கும். ஆனா, என் மூலமாத்தான் எல்லாம்...''

விநாயக்குக்கு குடும்பம் என ஒன்றிருந்தாலும், அவனது காபி, சாப்பாடு எல்லாமே தேஜஸ்ரீயுடன்தான்.

''நீ எங்கேயாவது அரை மணி நேரம் என்னை விட்டு ஒழியேன்...''

இப்படி தேஜா கத்தும்போதெல்லாம், புன்னகையுடன் அங்கேயே நிற்பானே தவிர நகர மாட்டான்.

ஆனாலும் ஒரு விஷயத்தில் மட்டும் இவன் அவளுக்குப் பாதுகாப்பு மட்டுமின்றி பயமின்றிப் பழகக் கூடியவனாகவும் இருந்தான்.

சினிமா வட்டாரமே தேஜஸ்ரீயின் அழகில் மெய் மறந்து கிடக்கும்போது இவன் மட்டுமே அவளது கற்புக்கு உத்தரவாதம் தருவது போல நடந்து கொண்டான்.

## 2

வரலட்சுமி, வீட்டுக்குள் நுழையும்போதே, காட்டமாகத்தான் வந்தாள்.

''எங்கே அவ?''

''என்னைக் கேட்டா... என்கிட்ட சொல்லிட்டா அவ வெளில போறா... போய் அந்தக் கிழத்தைக் கேளு...''

இது வரலட்சுமியின் ஒரே மகன் ராஜப்பாவின் பதில், அம்மா, பிள்ளை

இருவரது கடுப்புக்கும் காரணமானவள்-

சுமித்ரா... இன்றைக்கெல்லாம் இருந்தால் இருபது வயசு... கல்லூரிப் படிப்பை சில மாதங்களுக்கு முன்புதான் முடித்திருந்தாள். கல்லூரிக்குச் சென்று வந்தபோதெல்லாம் அவள் நிம்மதியாகத்தான் இருந்தாள். எத்தனையோ வருத்தங்கள் இருந்தாலும் படிப்பு, அவளை எல்லாக் கஷ்டத்திலிருந்தும் காப்பாற்றி வந்தது.

வீட்டிலிருக்கப் போய்தான் பிரச்சினை விஸ்வரூபமெடுத்துள்ளது. சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே வளர்த்து வரும் அத்தை... அவள் புருஷன் அருணகிரி எப்போதும் திண்ணையோடு... பசிக்கும் போது மட்டும் வீட்டுக்குள் வருவான்.

ராஜப்பா கிழம் என்று குறிப்பிட்டது அவனுக்கும், சுமித்ராவுக்கும் பாட்டியான காசிம்மாவை...

அவள் குருட்டு விழிகளோடு, இருட்டுத் தாழ்வாரத்தில்தான் எப்போதும் படுத்திருப்பாள். சுமித்ராவுக்கு ஒரே பாதுகாப்பு இவள்தான்.

அத்தை வரலட்சுமி வீட்டில் இல்லாதபோது - என்றைகருத்தான் அவள் வீட்டில் இருந்திருக்கிறாள் - ராஜப்பா, இரை தேடும் புலியாக வீட்டுக்குள் சுமித்ராவைச் சுற்றிச் சுற்றி வருவான். அனேகமாய் சமையல் வேலை முழுவதும் சுமித்ராவின் தலையிலேயே விழுந்துள்ளதால் அவளால் சமையலையும் கவனிக்க முடியாமல், இவனது மையலில் இருந்து விடுபடவும் முடியாமல் தவியாயத் தவிப்பாள்.

''சுமி... அம்மா எங்கே?''

''உம்... ஏதாவது புடவைக் கடையிலேயோ, நகைக் கடையிலேயோ இருப்பாங்க. அங்கே போய்த் தேடு...''

''நீ, நல்லபடியா நடந்துட்டியானா உனக்கும் புடவை, நகை எல்லாம் வாங்கித் தருவா...''

''ஏன், இப்ப என்ன, நான் கோணலாவா நடந்திட்டிருக்கேன்... ஒழுங்காத்தான் நடக்கறேன்?''

''இந்தக் கிண்டல்தானே வேணாம்கறது... சுமி, நீ மட்டும் நம்ம கல்யாணத்துக்கு சம்மதம்னு சொல்லு, அம்மா, உன்னை வைரத்தாலேயே இழைச்சிடுவா...''

''ஸாரிப்பா... நம்மாலே தாங்க முடியாது... நீ வேற ஆளைப் பாரு. நான் மேல படிக்கணும்... ஆமா... நாலு தடவையா பிளஸ் டூ பரீட்சை எழுதிட்டிருந்தியே... பாஸ் பண்ணிட்டியா?...''

இவளது கேலிப் பேச்சில், ராஜப்பாவின் முகம் நசுங்கிப் போகும்... விழிகளில் குரோதத்தைத் தேக்கி இவளை முறைத்துப் பார்ப்பான்.

சில சமயங்களில் வரம்பு மீறவும் தயங்கியதில்லை இவன். அப்படியொரு சந்தர்ப்பம் நேர வேண்டும் என்றுதானே வரலட்சுமியும் சின்னஞ்சிறுகளை வீட்டில் விட்டு விட்டு, அடிக்கடி வெளியே போகிறாள்?

அப்படிப் போகும் போதே வாசலில் உட்கார்ந்திருக்கும் அருணகிரியின் கையில் நூறு ரூபாய் நோட்டு ஒன்றை அழுத்திவிட்டு, குரலை அடக்கி ஓர் அதட்டல் போட்டுவிட்டுத்தான் நகருவாள்.



''பேசாம, வாசலோடயே கிடங்க...''

''சரி...''

''என்ன இழுக்கறீங்க... உள்ளே நம்ம பையனும், அந்தச் சிறுக்கியும் இருக்கா...''

''.........''

''எக்குத்தப்பான சமயத்துல முந்திரிக் கொட்டை மாதிரி தலைய நீட்ட வேண்டாம். பசிச்சா ஓட்டல்லே போயச் சாப்பிடுங்க. பிராந்தி வேணும்னா ஈசப்பன் கடையில வாங்கிக்குங்க...''

''சரி...''

''குவாட்டருக்கு மேல வேணாம்... ஏற்கனவே டாக்டர், குடலெல்லாம் பொத்தலாயிடுச்சுன்னு சொல்லிட்டாரு... அதிகமாக் குடிச்சு, என் பிராணனை எடுக்க வேணாம். இப்பதான் ஆசாரிகிட்ட ஒரு மாங்கா மாலை சொல்லியிருக்கேன்... போட்டுக்க முடியாம, மண்டையப் போட்டு வைக்காதீங்க... ஆமா... சொல்லிட்டேன்...''

வரலட்சுமி, 'விர்' ரென நடந்து, ஏற்கனவே வாசலில் தயாராக நிற்கும் வாடகைக் காரில் ஏறுவாள். கார் கதவைச் சாத்தியவுடன் தான் பார்வையற்ற தாயின் நினைப்பே வரும்...

ஒரு கணம் இறங்கிப் போய், சுமித்ராவிடம், 'உன் பாட்டிக்கு பகல் ஒரு மணி சுமாருக்கு சோத்தைப் பிசைஞ்சு வெய்' இப்படிச் சொல்லலாமோ என்று தோன்றும். அப்புறம், அதை அப்படியே உதறி விட்டுக் கிளம்பி விடுவாள்.

'இப்ப என்ன... பசிச்சா, கிழவி பேத்தியக் கூப்பிட்டு சோறு போடச் சொல்லிட்டுப் போறா...'

'அது சரி. இந்த ராஜப்பா என்ன இத்தனை அசடா இருக்கான்? வயசு வந்த பொண்ணு - அதுவும் முறைப்பொண்ணு! பக்கத்துலயே வச்சிட்டுப் பார்த்துக்கிட்டிருக்கானே பாவி...'

'ஒவ்வொரு தடவையும், வெளில போயிட்டு வர்றப்ப, 'அத்தை, இவன் என்கிட்ட இப்படி எக்குத்தப்பா நடந்துகிட்டான். நான் என்ன செய்வேன்'னு அழுதிட்டு இந்தப் பொண்ணு ஓடி வரும்னு பார்த்தா கல் குண்டாட்டம் உட்கார்ந்திருக்கு...'

'அடேய், இவளைக் கட்டிட்டாத்தான்டா உனக்கு கோடிக்கணக்குல பணம் வரும். நானும் நிம்மதியா இருக்கலாம்னு படிச்சு, படிச்சு சொல்றேன்... கேட்க மாட்டேங்கறானே...'

'கிழம் மண்டையப் போட்டாலும் இந்தப் பொண்ணுக்கு காரியமா எண்ணைப் போடுவா செல்லாத்தா... எங்கே... ஆயுசு கெட்டி... மலை மாதிரிப் பிள்ளைய வாரிக் கொடுத்துட்டும் திடமா உட்கார்ந்திருக்கு பாரு. நல்ல வேளை... கண் அவிஞ்சதோ... நான் கட்டிக்கற சேலையையும், போட்டுக்கற நகையையும் பார்த்து, கத்தாம இருக்கு..!'

'இந்த சின்னப் பிசாசு ஏதாச்சும் சொல்லுமோ?'

'சொல்லட்டுமே... தலைக்கு மேலப் போயாச்சு...'

வரலட்சுமி தன்னைத்தானே தேற்றிக் கொள்வாள்.

இன்றைக்கு நினைத்தாலும் அவளுக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

கூரை வேய்ந்த வீடு... செம்மண் சுவர்... காடா விளக்கு. ஒரு முறை பலமான மழை பெய்தால் கூட 'பொத பொத'வென அப்படியே சரிந்து விடும் சுவர்... இதுதான் இருபது வருடங்களுக்கு முன் அந்தக் குடும்பத்தின் நிலை...

அப்போதெல்லாம் அவளது தம்பி துரையும், தாய் காசிம்மாவும் அவர்களுடனேயே இருந்தார்கள். துரையும் அருணகிரியும் சாராயம் காய்ச்சப் போவார்கள். தாயும், மகளும் சமைத்து வைத்துவிட்டு, வெளியே போன ஆண் பிள்ளைகள் திரும்பி வருவதற்காகக் காத்திருப்பார்கள்.

தேனெடுத்தவன் புறங்கையை நக்காமல் இருக்க மாட்டான் என்பது போல, துரையும், அருணகிரியும் தாங்கள் காய்ச்சிய சாராயத்தை, ஓரளவு ருசி பார்த்து விட்டுத்தான் வீடு திரும்புவார்கள். அப்போதே துரைக்கும் திருமணமாகி முதல் மனைவி இருந்தாள்.

அருணகிரி குடித்துவிட்டு வந்தால் யாருடனும் பேச மாட்டான். போட்டதைச் சாப்பிட்டு விட்டு, இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கியே போய்விடுவான். வரலட்சுமியாய் போய் எழுப்பினால் கூட அசைந்து கொடுக்க மாட்டான்.

துரை அப்படியில்லை. வரும் போதே கூச்சலும், கலாட்டாவும்தான். குறுக்கே வருபவர் யாராக இருந்தாலும் அவர்கள் தொலைந்தார்கள். வீட்டுக்குள் நுழைந்ததுமே பெண்டாட்டியைத் தேடி, அவளது தலை முடியைப் பிடித்திழுத்து, தரையில் தள்ளி ஏறி மிதிப்பான்... 'நீ அவனைப் பார்த்தே... சிரிச்சே...' என்று ஏதையாவது சொல்லி அடிப்பான். அப்படி ஏதும் காரணமில்லை என்றாலும் விடமாட்டான்.

இப்படியொரு முறை அடித்ததில் இவனது மூத்த மனைவி மூர்ச்சையடைந்து கீழே விழுந்தவள் தான். மறுபடி எழுந்திருக்கவே இல்லை... ஒரேடியாகப் போய் சேர்ந்தாள். காசிம்மா, நெஞ்சிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள்...

இந்தக் குற்றத்துக்காகச் சிறைக்குப் போன துரை ஐந்தாறு வருடங்கள் போல களி தின்று விட்டு, ஓரளவுக்கு ஒழுங்காகத்தான் வீடு திரும்பினான். அக்காக்காரி, தங்களது தூரத்து சொந்தத்தில் அநாதையாய் நின்ற செல்லாத்தாளைக் கொண்டு வந்து, தம்பிக்கு அருமையாக மணமுடித்து வைத்தாள்.

அப்போது செல்லாத்தாவுக்கு பதின்மூன்றே வயசு. துரைக்கு முப்பத்தைந்து...

''இத்தனை சின்னப் பொண்ணை எதுக்கு என் தலையில கட்டறே... இவ என்னிக்குப் பெரியவளாகி... என்னிக்கு எனக்கு பொண்டாட்டி கிடைக்கிறது...''

துரை, தன் தாயையும் தமக்கையையும் பச்சையாகவே திட்டினான். அந்த நேரத்தில் அவன், மீண்டும் தன் தொழிலை கவனிப்பதிலேயே மும்முரமாக இருந்தான்.

செல்லாத்தாவுக்கு இரண்டு வேளை கம்பஞ்சோறும், காலையில் கிடைக்கும் கருப்புக் காப்பியுமே அமிர்தமாக இருந்ததில் வியப்பில்லை. அதற்குக் கூட வக்கில்லாத நிலையில் இருந்தவள்தானே..!

நாத்தி காலால் இட்ட வேலையை தலையால் செய்து கொண்டு, மாமியாரை தெய்வமாய் மதித்து, இரவு வீடு திரும்பும் கணவனுக்கு வெந்நீர் வைத்துக் குளிப்பாட்டி, சுடு சோறும், கீரைக் குழம்புமாய் பரிமாறி, இரவு அவன் தூங்கும்



வரையில் கால் அமுக்கி...

இப்படியே போயிருக்கலாம் அவள் வாழ்க்கை...

திருமணமான ஒரு வருஷத்தில் பருவமடைந்தாள். ஊரைக் கூட்டி விருந்து... வரலட்சுமி கூட, மனசு வந்து தனது ஒரே பட்டுச் சேலையை இவளுக்கு சுற்றி வைத்து மாலை போட்டு பொம்மை மாதிரி உட்கார வைத்தாள்.

விருந்து சாப்பிட்டுப் போனவர்கள் எல்லோரும் சும்மா போகக்கூடாதா...

''ஏலேய், இந்த துரைக்கு வந்த வாழ்வைப் பார்த்தே இல்லே... கிளி மாதிரி பொண்ணு...''

''அட நீ வேற... இப்பவே அவன் குடிச்சு குடிச்சு குடல் வெந்திருக்கான். வயசு வித்யாசம் வேற ஏகப்பட்ட... எத்தனை நாளைக்கு வாழ்வாங்களோ...''

''ப்ச... அந்தப் பொண்ணை நினைச்சாத்தான் பாவமா இருக்கு...''

''பாவம் என்ன பாவம்? வீட்டுலேயே நாதநா புருஷன் இருக்கான். அட... அவனும் குடிகாரன்தானேங்கறியா... நாமெல்லாம் வேற எதுக்காக இருக்கோம்... இத்தனை லட்சணமான பொண்ணைத் தனியா விட்டுடுவோமா?''

''அப்படீங்கறே...''

''அப்படியேதான் மச்சான். பார்த்துட்டே இரு... ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் சரக்கு மலிஞ்சு, சந்தைக்கு வந்துதான் தீரும்...''

இந்த வார்த்தைகள் போதாதா துரைக்கு?

சாந்துக் கருப்பும், கிள்ளியெடுக்க சதையே இல்லாதவளுமான மூத்த மனைவியையே சந்தேகப்பட்டு, ஆட்டுவித்து, அடித்து, உதைத்து, பரலோகத்துக்கு அனுப்பி வைத்தவனாயிற்றே...

இப்பொழுது மறுபடியும் வீட்டில் பழைய கதை ஆரம்பித்து விட்டது. முன்னை விடவும் வேகமாய் ஆவேசமாய்...

செல்லாத்தா பூ மாதிரி... இந்தப் புயல் காற்றின் முன் தாக்குப் பிடிக்க முடியாமல் தவியாய் தவித்தாள். அந்த சமயத்தில் எல்லாம் காசிம்மாதான் அவளுக்கு பாதுகாப்பு. மகன் அடிக்கும் அடியில் பாதியை அவள் தாங்கினாள். அவன் வீட்டில் இல்லாதபோது, வரலட்சுமியைத் திட்டித் தீர்ப்பாள்.

''ஏண்டி, எவளாவது ஏப்பை சாப்பையா ஒருத்தியைக் கொண்டு வந்து உன் தம்பிக்குக் கட்டி வைச்சு மாட்டியா... இது என்னமோ சத்ய பாமா ஆசைப்பட்டாளேன்னு கிருஷ்ண பரமாத்மா தேவலோகத்துல இருந்து கொண்டு வந்த பாரிஜாதப் பூ மாதிரி இருக்கு. இவனோட அடி தாளாம இதுவும் செத்து வச்சதுன்னா அந்தப் பாவம் உன்னை சும்மா விடுமா?''

இரண்டு வருடங்கள் அடி தின்ற செல்லாத்தா மூன்றாவது வருடம் வயிற்றில் துரையின் வாரிசை சுமந்தாள்.

அப்போதும் அவனுக்கு சந்தேகம்தான் - இந்தக் குழந்தை தனக்குப் பிறந்திருக்காது என்று...

அதற்காகவும் சேர்த்து உதை... மட்டமான வசவு.

பிறந்த குழந்தையின் முகச் சாயலில் எங்குமே தன் சாயலைக் காணாததால் அது வேறு சேர்ந்து கொண்டது...

''பொட்டைக் கழுதை... சிவப்புத் தோலும் அதுவுமா... யாருக்குடி

பெத்துப்போட்டே... சொல்லிடு... சொன்னே... அடி வாங்காமத் தப்பிக்கலாம்..."

தூத்தி, தூத்தி அவன் அடித்தபோதுதான் ஒருநாள், காசிம்மா மருமகளை அணைத்து, அழுத கண்களைத் துடைத்து, கலைந்த கூந்தலை ஒதுக்கி, நெற்றியில் முத்தமிட்டு, கையில் ரயில் கட்டணத்துக்கும், சாப்பாட்டுச் செலவுக்குமாய் சில ரூபாய் நோட்டுக்களை அழுத்திச் சொன்னாள்.

"இனிமே இங்கே இருக்க வேணாம் தாயீ... போயிடு..."

"அப்படிச் சொல்லாதீங்க அத்தை... எனக்கு எங்கே போகத் தெரியும்... அதைவிட அவர் அடிச்சே கொன்னுடட்டும்..."

"போடி... பைத்தியக்காரி... இப்ப இந்த சமயத்தை விட்டா அப்புறம் இது போல எல்லாம் சேர்ந்து கிடைக்காது. வரலட்சுமி கூத்து பார்க்கப் போயிருக்கா. உன் புருஷன் வர நேரமாகும்..."

"குழந்தை..?"

"அது என்கிட்ட இருக்கட்டும். அதைப் பத்தி நீ கவலையேபடாதே. நான் பாத்துக்கறேன். நீ போய் எங்கேயாவது நாலு வீட்டு வேலை செஞ்சாவது பிழைச்சுக்க. காலம் இப்படியே போயிடாது. இவனுக்கும் புத்தி மாறும். அதுவரைக்கும் அடி திங்காம, எங்கேயாவது நிம்மதியா இரு தாயீ..."

"இந்த வீட்டு வாசலை விட்டு நான் வெளியே போனதே இல்லையே அத்தை..."

"கவலைப்படாதே. வரலட்சுமி புருஷன் கிட்ட நான், நாலஞ்சு நாள் முந்தியே சொல்லி வச்சிருக்கேன். என்ன பாக்கறே... அவதான் கூறுகெட்டத்தனமாய் பேசுவா. அவ புருஷன் நல்லவன், சாது. குடிக்கறதைத் தவிர ஒரு கெட்ட பழக்கமும் கிடையாது. இன்னும் கொஞ்ச நேரத்துல வருவான். அவனோட புறப்படு. பட்டணத்துக்கு ரயிலேத்தி விட்டுருவான். ஓடிப் போயிடு..."

செல்லாத்தா, காசிம்மாவின் காலில் விழுந்து வணங்கினாள். குழந்தையை வாரியணைத்து முத்தமிட்டு அழுதாள். அதன் வயிறு முட்டப் பால் கொடுத்தாள். விட்டுப்பிரிய மனமின்றிக் கிளம்பினாள்.

குழந்தையை தவிக்க விட்டுவிட்டு தனக்கென ஒரு வாழ்க்கை வேண்டியிருக்கிறதா என அப்பொழுது நினைத்தாலும், அத்தை சொல்வது போல முன்பின் அறிமுகமில்லாத பட்டணத்தில், கையில் குழந்தையையும் வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று செல்லாத்தா அறிவும் இழக்காமல் இல்லை...

அருணகிரிநாதன் அவளை வண்டியேற்றி விட்டான். ரயில் கிளம்பும் வரையில் ஒரு வார்த்தை பேசவில்லை... வண்டி நகர, நகர, சிறிது தூரம் கூடவே ஓடி வந்தான்... கடைசியில் ஓரிடத்தில் நின்று, மேல் துண்டை வீசி, 'ஜாக்கிரதை' என்றான்... அவ்வளவுதான்.

பிறகு திரும்பி வந்து, வழக்கம் போல சாராயத்தைக் குடித்து விட்டு, ஓசையின்றி தூங்கிப் போனான்...

துரைக்கு மனைவியின் தலை மறைவு பெரிய அடி... அதுநாள் வரையில் யாரையோ அவளுடன் இணைத்துப் பேசிக் கொண்டும், அவளை அடித்துப் புரட்டிக் கொண்டும் இருந்தவன் இதற்குப் பிறகு கப் சிப்!

ஊரார் சொன்னது போல குடித்துக் குடித்து சல்லடைக் கண்ணாய் போயிருந்த



அவனது குடல் ஒரு நாள் தன் வேலையைப் 'பொக்' கென நிறுத்திக் கொண்டது.

செல்லாத்தா ஊரை விட்டுப் போய் நாலைந்து மாதங்களுக்குள் இது நடந்திருக்குமா... அவ்வளவு நாட்களதான் ஆகியிருக்கும். காசிம்மா, செத்துப்போன மகனுக்காக அழுததை விடவும் தன் மருமகள் எங்கே சோறுக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாளோ என்று அழுத நேரமே அதிகம்.

"அய்யோ, இவன் 'பொட்டு'ன்னு போயிடப்போறான்னு தெரிஞ்சிருந்தா அந்தப் பொண்ணை விட்டை விட்டு விரட்டியே இருக்க மாட்டேனே நானு..."

இப்படி எப்பொழுதாவது அருணகிரியிடம், வரலட்சுமி இல்லாத நேரத்தில் சொல்வாள்.

"நல்ல வேளை. அனுப்பிச்சோமேன்னு சந்தோசப்படுங்க அத்தை... இல்லையின்னா அந்தச் சின்னப் பொண்ணை சும்மா விடுவீங்களா நீங்க. வெள்ளைச் சீலை கொடுத்து, மூலையில உட்கார வைக்க மாட்டீங்க?"

அருணகிரியும் குரலைத் தழைத்து, ரகசியமாய் சொல்லுவான். ரகசியமாய்த்தான். இன்று வரையில் செல்லாத்தா ஓடிப் போனதற்குத் துணை தன் கணவனும், தாயுந்தான் என்பது வரலட்சுமிக்குத் தெரியாதே!

கிட்டத்தட்ட ஒரு வருடம் போல குழந்தை கவிதா அத்தையின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் நடுவில்தான் வளர்ந்து வந்தாள்.

"சனியன்... தரித்திரம்... பொறந்ததும் அம்மாளைத் தூத்துச்சு, அப்புறம் அப்பனைச் சாப்பிட்டுச்சு..."

"அம்மா, அந்த செல்லாத்தாவுக்கு மட்டும் எப்படி நம்ம குலத்துல இல்லாம, குடும்பத்துல இல்லாம அத்தனை அழகுன்னு நானும் யோசிச்சுகிட்டே இருந்தேன். இப்பத்தான் நம்ம சித்தப்பா சொல்றாரு... அவ அம்மாவுக்கும், மேலத் தெருவுல இருந்த மேட்டுக்குடிக்கும் பொறந்தவளாமே அவ..."

"என்னவோ, நம்ம வீட்டுக்கு வந்து, என் ஒரே தம்பிய சாகடிச்சா... அவ மாத்திரம் ஓடாம இருந்திருந்தா துரை இன்னும் பத்து வருசத்துக்கு மேல இருந்திருப்பான். இந்த அவமானம் தாளாமத்தான் அவன் குடிச்சுக் குடிச்சே செத்தான்..."

இப்படியே சொல்லிக் கொண்டிருந்தவள், ஒரு நாள் அரக்கப் பரக்க ஓடி வந்து தன் தாயிடம் சொன்னாள்.

"அம்மா, பக்கத்து தியேட்டர்லே புதுப்படம் ரிலீசாயிருக்கு. அதுல ஒரு நடிகை... அசப்புல பாத்தா அந்தக் கடங்காரி செல்லாத்தா மாதிரியே இருக்கு..."

"அப்படியும் இருக்குமோ... இது என்ன மானங்கெட்ட பிழைப்பு... என்னை எல்லாரும் கேட்டா, நா என்னன்னு சொல்லுவேன்..."

காசிம்மா எதுவுமே பேசாமல் குழந்தையைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

சரியாய் ஒரு வாரத்தில் அந்த மண் வீட்டு வாசலில், கார் வந்து நின்றது... அதிலிருந்து 'டிப்டாப்' பாக ஓர் இளைஞன் இறங்கினான்.

"இங்கே காசிம்மாங்கறது யாரு?"

"என், எங்கம்மாதான்..."

''அவங்களையும், உங்களையும் குழந்தையோட அழைச்சிட்டு திருப்பதிக்கு வரச் சொல்லி நடிகை தேஜஸ்ரீ என்னை அனுப்பியிருக்காங்க... நான் அவங்களோட செகரட்டரி... பேரு விநாயக்...''

அவன், தன் முன் நீட்டிய விசிட்டிங் கார்டை, படிக்கத் தெரியாத காரணத்தினால், திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு, அவனிடமே கொடுத்தாள் வரலட்சுமி.

''யாரு தேஜஸ்ரீ... இப்ப படத்துல நடிக்கிறாங்களே... அவங்களா..?''

''அவங்களேதான்...''

வரலட்சுமி உள்ளே பாய்ந்தாள். குழந்தையை வாரித் தோளில் போட்டுக் கொண்டாள். தன் மகனையும் ஒரு கையில் பிடித்துக் கொண்டாள். கணவனையும், காசிம்மாவையும் விரட்டி, விரட்டிக் கிளம்பினாள்.

''நான் சொல்லலே? அவதான் இவ. கூப்பிட்டனுப்பியிருக்கா. பிள்சரு வந்து வாசல்லே நிக்குது... கிளம்புங்க...''

**தி**ருப்பதியில்-

யாருக்கும் தெரியாமல் மிக ரகசியமாய் விநாயக் ஏற்பாடு செய்திருந்த பங்களாவில் தேஜஸ்ரீ.

வரலட்சுமியின் கையிலிருந்த குழந்தையைக் கண்டதும் பாய்ந்து பிடுங்கப் போனாள். அது, மிரண்டு அழுதது. காசிம்மாவிடமே ஒட்டிக் கொண்டு, முகத்தை அவளது தோளிலேயே புதைத்துக் கொண்டது...

''பழகினா சரியாப் போயிடும். செல்லாத்தா... நீ உயிரோடதான் இருக்கியா... துணை தான் உன் நினைப்பாவே...''

வரலட்சுமியின் பிலாக்கணத்துக்கு 'சட்'டென முற்றுப்புள்ளி வைத்தான் விநாயக்.

''தேஜா... இன்னிக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு நாம மெட்ராஸ்லே இருக்கணும். மியூசிக் டைரக்டர் பையன் கல்யாணம்...''

தேஜஸ்ரீ, கன்னங்களில் உருளும் கண்ணீரை, கைக்குட்டையினால் ஒற்றிக் கொண்டே, தான் அவர்களை அழைத்ததற்கான காரணத்தைச் சொல்லி முடித்தாள்.

''அந்த ஊரை விட்டு மாறிடுங்க. ஹைதராபாத்லே நல்லதா ஒரு வீடு விலைக்கு வந்தது. வாங்கியிருக்கேன். அங்கே போயிடுங்க. வீட்டுப் பத்திரமெல்லாம் அத்தை பேர்லேதான். குழந்தைக்கு கார்டியன் அதாவது அவளைப் பாதுகாக்கற பொறுப்பும் அத்தை கிட்டதான் ஒப்படைச்சிருக்கேன். மாச மாசம் அத்தை பேருக்குப் பணம் அனுப்பறேன். குழந்தைய நல்லாப் படிக்க வையுங்க... முடிஞ்சப்ப மறுபடி பார்க்கலாம்...''

''அப்ப, நாங்க உங்கூட வந்து இருக்க முடியாதா செல்லாத்தா..?''

வரலட்சுமி ஏக்கத்துடன் கேட்டாள். தேஜா, இதற்கு பதில் கூறாமல் விநாயக்கையே வெறித்தாள்.

''இப்படி தனித்தனியே இருந்தாத்தான் அவங்க சம்பாதிச்சு உங்களுக்கும் நாலு காசு அனுப்ப முடியும். சேர்ந்து இருந்தா ஒட்டு மொத்தமா அலுமினிய வட்டாவை வச்சிட்டு பிச்சைதான் எடுக்க முடியும். எது வசதி?''



விநாயக் சிரித்தபடிதான் கூறினான். வரலட்சுமி உடனே புரிந்து கொண்டாள்.

''புரிஞ்சது தம்பி... தேஜாவுக்கும் எங்களுக்கும் இனிமே சம்பந்தமே இல்லேங்கற மாதிரி நடந்துக்கணும். அவ்வளவுதானே... கவலைய விடு!''

# 3

''**இ**தப் பாரு தேஜா... எதிர்காலத்துல உன் மக, நல்லாயிருக்கணுமா வேணாமா?''

''இது என்ன கேள்வி...''

தேஜா... தனது முகத்தில் பூசியிருந்த மேக்கப்பை ஏதோ ஒரு திரவத்தில் பஞ்சை நனைத்து துடைத்துக் கொண்டே கேட்கிறாள்.

''அதுக்காகத்தானே இந்த வேஷம்... உழைப்பு எல்லாம்?''

''அப்ப எதுக்காக, அவளைப் போய் பார்க்கணும், பாக்கணும்னு அடிக்கடி பேஜார் பண்றே... அவங்களுக்கு வீடு வாங்கித் தாணும்னு சொன்னே... தந்தாச்சு. மாசம் லட்ச ரூபா அனுப்பணும்னு சொன்னே... அதையும் அனுப்...''

''பொய் சொல்லாதே... நீ இருபதாயிரமோ, முப்பதாயிரமோதான் அனுப்பறே... என்கிட்ட ஒரு லட்சம்னு பொய்... நீ நல்லாயிருப்பியா...''

''சரி... வரிசையா சாபம் கொடு... நான், என்னோட தோல் பையைத் திறந்து வச்சுக்கறேன்... உன்னை நான் ஏமாத்துறும்னா இந்த ஒரு லட்சத்துலதான் ஏமாத்தணும்னு இல்லே செல்லாத்தா... கணக்குல அம்பது கையில அம்பது சதவீதம்னு வாங்கறோமில்லே... அதுல, கையில வாங்கற பணத்தை வாங்கி, எப்பம் விட்டுட்டு, புடிபூசா நரவே இல்லேயின்னு நான் உன்கிட்ட சொல்ல எத்தனை நேரமாகும்? இல்லே எத்தனை நேரமாகும்னு கேட்கறேன்... இது நாள் வரைக்கும் ஒரு தடவையாவது அது மாதிரி செஞ்சிருக்கேனா...''

''....................''

''உன் மாமியாரும், நாத்தனாரும் உன் குழந்தைய வளர்க்கறாங்க. இல்லேயின்னு சொல்லலே... அதுக்குத் தேவையானதுக்கு மேலேயே நாம செஞ்சிட்டிருக்கோம்... இங்கே உனக்கு எட்டு கிரவுண்டுல பங்களா, அஞ்சு காரு, இருபது வேலைக்காரங்க. தவிர தோட்டக்காரன், கூர்க்கா, சமையலுக்கு ரெண்டு ஆளு, உடம்பு பிடிக்க விட ஒருத்தி, டச்சப் பொண்ணு... மாசத்துல நாலு பார்ட்டி வைக்கணும்... சினிமா முதலாளி வீட்டுக் கல்யாணத்துல இருந்து கிளாப் அடிக்கற பையனோட தங்கச்சி மஞ்சள் நீராட்டு விழா வரைக்கும் சகலத்துக்கும் மொய் இல்லாட்டி பரிசு வாங்கியாகணும்... தவிர... தோலுக்கு, பல்லுக்கு, முகத்துக்கு, இடுப்புல விழுந்திருக்கற சதைக்குன்னு தனித்தனியா டாக்டர் செலவு... உனக்கு மாசம் ரெண்டு மூணு லட்சத்துக்கு மேலேயே செலவு ஆகும்... ஒத்துக்கவேண்டிய சமாச்சாரம்... ஐதராபாத்துல சொந்த வீடு, மாசம் முப்பதாயிரம் ரூபா செலவுக்கு... அப்பப்ப புடவை, நகை, அவங்க வாடகைக் கார் எடுத்தா அதுக்கு தனிப் பணம், மாமியாருக்கு மருந்து செலவு... இப்படி

எல்லாம் சேர்த்தாக்கூட அம்பதாயிரம் வருமா... எதுக்கு ஒரு லட்சம்? அந்த நாத்தனாக்காரி வாங்கி, தலைப்புல முடிஞ்சுக்கவா...''

தேஜுஸ்ரீ எத்தனைதான் பிடிவாதம் பிடித்தாலும், விநாயக் தான் பிடித்த பிடியிலேயே நிற்பான்.

அவள், தன் மகளுக்காக கார் வாங்கித் தரவேண்டும் என்ற போதும் இப்படித்தான் தடுத்தான்.

''பொண்ணு இன்னும் சின்ன பாப்பா இல்லே தேஜூ.. வளர்ந்துட்டே வர்றா... எதுடா, மாமன்காரன் மொடாக் குடிகாரனா இருக்கான்... வீட்டுல யாரும் சம்பாதிக்கப் போட ஆளில்லே... காரும், பணமும் எங்கேயிருந்துடா வர்றதுன்னு யோசிச்சான்னு வச்சுக்க... ஆபத்து...''

''என்ன ஆபத்து... எப்படியும் நான் வாங்கிச் சேர்த்திருக்கற அத்தனை சொத்தும் அவளுக்குத்தானே...''

''எத்தனைதான் உனக்கு நடிப்பு சொல்லிக் கொடுத்து, நாகரீகம் சொல்லிக் கொடுத்து, தமிழ், இந்தி, தெலுங்கு, இங்கிலீஷ்னு டியூசன் வச்சு தலையில ஏத்தி - நீ, பம்பாய் மாதுங்காவைச் சேர்ந்த அய்யர் வீட்டுப் பொண்ணுன்னு நான ஒவ்வொரு பத்திரிகைக்கும் சேதி கொடுத்தாலும் நீ செம நாட்டுக்கட்டையின்னு அப்பப்ப நிரூபிக்கறேம்மா...''

விநாயக், அவளிடம் தற்சமயம் மகளைச் சந்தித்து, சொத்துக்களைக் கொடுப்பதில் உள்ள அபாயங்களை எல்லாம் கொஞ்சம் மிகையாகவே எடுத்துச் சொல்வான்.

''இப்போதைக்கு அவங்க, அந்தப் பொண்ணுகிட்ட அம்மா எப்பவோ செத்துட்டதாச் சொல்லியிருக்கலாம் தேஜூ. ஓடிப் போயிட்டான்னு தெரிஞ்சா அந்தப் பொண்ணு மனசு அப்படியே நொறுங்கிப் போயிடாதா...''

''..........''

''அட ஓடிப் போனவ ஆத்துல, குளத்துல விழுந்து செத்திருந்தாலும் அந்தப் பொண்ணு, அம்மாவை நினைச்சு ரெண்டு சொட்டுக் கண்ணீராவது சிந்துவா. இன்னிக்கு இருபது வயசுக் குமரன்லே இருந்து அறுபது வயசுக் கிழவன் வரைக்கும் எவ பேரைச் சொன்னா, பைத்தியம் பிடிச்ச மாதிரி அலையறாங்களோ அவதான் தன்னைப் பெத்தவன்னு தெரிஞ்சதுன்னு வச்சுக்க... 'ச்சீ'ன்னு ஆயிடாது? அப்புறம் அம்மாவாவது பொண்ணாவது... யோசி...''

தேஜுஸ்ரீ அப்படியே கண்ணீர் பெருக உட்கார்ந்து விடுவாள்...

இப்போதும் கூட அப்படித்தான் உட்கார்ந்திருந்தாள்.

இது என்ன கொடுமை... பெற்ற மகளைப் பார்த்து பதினெட்டு வருடங்களுக்கு மேலாகிறது. ஹைதராபாத்துக்கு படப்பிடிப்புக்காக எத்தனை தரம் விமானத்தில் பறந்து கொண்டிருக்கிறாள்...

''இதுதானே விநாயக், நம்ம வீடு இருக்கற தெரு...?''

''எந்த வீடு..? ஹைதராபாத்லே மட்டும் உனக்கு மூணு வீடு இருக்கு தேஜூ.. கடைசியா வாங்கினது 'பஞ்சாரா ஹில்ஸ்' பகுதியில... என்.டி.ராமாராவ் வீட்டுக்கு நாலு வீடு தள்ளி...''

''நான் அதைச் சொல்லலே.... நான் முத முதல்லே என் குடும்பத்துக்காக வாங்கின வீடு...''



''அடடா... அதைச் சொல்றியா... ஆமா... இங்கேதான். ஆனா, இப்ப நீ அங்கே இறங்கவே முடியாது தேஜூ.. உனக்கே தெரியுமே... தமிழ் நாட்டு ரசிகர்களைக் காட்டிலும் ஆந்திரா ரசிகர்கள் ரொம்பவும் விசுவாசிகள், நிறைய பேர் வீட்டுல அலமேலு மங்கா தாயாருக்குப் பதிலா நீதான் காலண்டர்லே தொங்கறே...''

''விநாயக்... ப்ளீஸ்... குழந்தை படிக்கிற காலேஜுலே ஏதாவது விழாவுக்கு நான் போற மாதிரி ஏற்பாடு செய்யேன்...''

''லேதும்மா...''

விநாயக் மிகத் தீர்மானமாய் கூறுவான்...

ஆனால்,

இத்தனைக் கறாராக நடந்து கொள்ளும் விநாயக் பணமுள்ள முதலாளிகளிடமும், டைரக்டர்களிடமும், போடுகிற கூழைக் கும்பிடு இருக்கிறதே.. தேஜூவுக்கு எரிச்சல் மண்டும்...

''அந்த ஆளோட என்ன பேச்சு வேண்டிக்கிடக்கு... அதான் அவன் படத்துக்கு 'புக்' பண்ண வரல்லேயின்னு தெரிஞ்சு போச்சில்லே...''

''நோ, நோ... எப்ப, எந்த நேரத்துல எவன் உதவுவான்னு தெரியாது தேஜூ... இப்ப என்ன... அவன் பாட்டுக்கு ஹால்லே சோபாவுல உட்கார்ந்து, உன் தரிசனம் கிடைக்காதான்னு காத்துட்டிருக்கான். ரெண்டு கபி... ஒரு பிரேக் ஃபாஸ்ட் அவன்கிட்ட சொல்லியிருக்கேன்... தேஜூவுக்கு கொடைக்கானல்லே ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு - அதைக் கொஞ்சம் 'ரீமாடல்' செய்யணுமுனு... பாரு, மனுஷன் இப்பவே செல்லுலாலே இன்ஜினியர் கிட்டப் பேசிட்டிருக்கான்...''

''விநாயக்.. என்னை வம்புல மாட்டி விடாதே...''

''யூ டோண்ட் ஒர்ரீ... பாவம்... என்ன, மிஞ்சி மிஞ்சிப் போனா, பார்த்து சிரிச்சு நாலு வார்த்தை... போதும்... அஞ்சு லட்சம் போட்டு, புதுசாவே கட்டித் தர்றேங்கறான்... வர்ற சீதேவிய உதைக்காதே... இன்னிக்கு உன் காட்டுல மழை.. நாளைக்கே புதுசா ஒருத்தி வருவா... கும்மிடிப்பூண்டியில இருந்து... அதனால காத்துள்ள போதே தூற்றிக்கோ...''

இந்தப் பதினைந்து வருட காலத்தில் தேஜுஸ்ரீயைக் காட்டிக் காட்டியே விநாயக் பலரிடம் பணம் பறித்திருக்கிறானே தவிர, அவளை வேறு எந்த ஒரு இக்கட்டிலும் மாட்டி விட்டதில்லை. அவனுமே, அவளைப் படுக்கையில் சந்திக்க வேண்டுமென ஆசைப்பட்டதில்லை.

எத்தனையோ முறை அவனது நண்பர்கள், அவனைக் கேட்டிருக்கிறார்கள்.

''ஏய்... உண்மையச் சொல்லு... தேஜூவுக்கு நீ வெறும் பி.ஏ. மட்டும்தானா... யார் கிட்ட காது குத்தறே?''

''அட போங்கப்பா... யார், எப்படி வேணுமானாலும் நினைச்சுக்குங்க. நம்ம சினி ஃபீல்டுலேயே இவளுக்காக ஒவ்வொருத்தன் நாயாய் பேயாய் அலையறான்.. எனக்கென்னமோ அவளைப் பார்க்கறப்ப எல்லாம், 'சேவ்' பாங்கைப் பார்க்கற மாதிரிதான் இருக்குது...''

''பணம் மட்டும் போதுமாடா... என்ன ஒரு ஃபிகர்...''

''இப்ப சொன்னே பார்த்தியா... என்ன ஒரு ஃபிகர்னு... ஏதனாலே தெரியுமா...

இந்த சினிமா உலகத்துல கொடி கட்டிப் பறந்தும், அவளை வெல்வெட் பெட்டியில வச்சிருக்கற வைர மாலை மாதிரி பாதுகாத்துட்டிருக்கேன்... நாலு கை மாறி, அஞ்சாறு அபார்ஷனும் ஆகியிருந்ததுன்னு வச்சுக்க... நடிப்பாவது ஒண்ணாவது... எவனாவது தொழிலதிபர் - சிங்கப்பூர், பாரிஸ்னு சொல்லி தாலியக் கட்டிட்டு செட்டிலாயிட வேண்டியதுதான்... அதுவாடா நமக்கு முக்கியம்?''

விநாயக்கை தேஜா, தனது அந்தரங்க காரியதரிசியாக இத்தனை காலமும் வைத்திருப்பதன் காரணமே அவனால் வேறு விதத் தொல்லைகள் இருக்காது என்கிற நம்பிக்கையில்தான். அது மட்டுமில்லை... வேறு யார் எப்பேர்ப்பட்ட பணக்காரன் வந்தாலும் தேனொழுகப் பேசி, குறைந்தபட்சம் அன்றைய செலவுக்காவது ஒரு பத்தாயிரத்தைப் பிடுங்கிக் கொண்டுதான் விடுவானே தவிர அவர்களிடம், அவளை பேரம் பேசினதே இல்லை.

ஆனால் ஒவ்வொருத்தரிடமும் அவன் பேசுவதைக் கேட்க வேண்டுமே...

இருபத்திநாலு மணி நேரமும் தேஜா அந்த மனிதனையே நினைத்து உருகிக் கொண்டிருப்பது போலத்தான் பேசுவான்.

''அதுல பாருங்க... வர்ற நாலாம் தேதியில இருந்து இருபது நாளைக்கு கோபியில ஷூட்டிங்... 'பாவம்டா அவரு... என்னமோ சின்னக் குழந்தைய விட்டுட்டுப் போற மாதிரி மனசு பதைக்குது... நாலு பேர் நடுவுல பேசவும் முடியாது.... உடனேயே இந்த பத்திரிகைக்காரங்க எதுனாச்சும் கதை கட்டி விட்டுருவாங்க... அட, என்னை விடு... எனக்கு இதெல்லாம் பழக்கம்தான். ஆனா அவரு... மானஸ்தர்... அக்கா வேற தப்பா நினைச்சுக்கும்'னு... சொன்னா நம்ப மாட்டீங்க சார்... கண்ணுல ஜலம் விட்டு, தேஜா அழுததையே அப்பத்தான் பாத்தேன்...''

''நானும் வேணா கோபிச் செட்டி பாளையத்துக்கு வந்துடட்டுமா விநாயக...''

''அய்யோ... அந்த மாதிரி தப்பெல்லாம் செஞ்சிடாதீங்க. இப்ப என்ன, கிணத்துத் தண்ணிய வெள்ளமா கொண்டு போயிடப் போகுது... இது மாதிரி விஷயத்துல எல்லாம் மனுசனுக்கு நிதானம் தேவை. காய்ஞ்ச மாடு, கம்பங் கொல்லையில விழுந்தா மாதிரி விழக் கூடாது... நீங்க என்ன செய்யறீங்க...வர்ற ஏப்ரல் ஒண்ணாம் தேதி தேஜாவோட பர்த்டே... காலையிலேயே வந்திடுங்க.''

''சரிப்பா...''

''வர்றப்ப ஆளை அசத்தற மாதிரி பரிசுப் பொருளோட வாங்க. நான் ஒரு மடையன், ஒரு வள்ளல் கிட்டப் போய் சொல்றேன் பாருங்க...''

''வைரத்துல ஒரு செட்...''

''நிறைய இருக்கு சார்... பொட்டி, பொட்டியாத் தூங்குது... ஒரு காரியம் செய்யுங்களேன்... 'உன்னை வச்சு புதுப்படம் பூஜை போடப் போறேன்... அதுக்கு, அட்வான்ஸ் ஒரு அஞ்சு லட்சம் கேஷ்... இது கணக்கோட சேர்த்தியில்லே... உன் பொறந்த நாளைக்கு என் சிறிய அன்பளிப்பு'ன்னு சூட்கேஸோட நீட்டுங்களேன். ஆடிப் போயிடுவா. நகை, புடவையின்னா வேண்டாம்னு சொல்லக்கூட சான்ஸ் இருக்கு. படம், அட்வான்ஸ்னா... மறுக்க மாட்டா...''

''கேஷா கேட்கறே?''



''அதுதான் சார் ஒர்த் ஃபுல் கிஃப்ட். நீங்க தைரியமாக் கொண்டாங்க. அப்புறம் நான் ஒருத்தன் எதுக்கு இருக்கேன் பூமிக்குப் பாரமா?''

வெண்ணெயாய் கரையும் பேச்சு, பணம் கை மாறும் வரையில், தான் பிறவி எடுத்திருப்பதே நடிகை தேஜாவையும், இந்தப் பணக்காரரையும் மாலையும் கழுத்துமாய் பார்ப்பதற்கே என்று கையிலடித்து சத்தியம் செய்யாத குறைதான்.

''தேஜா, சாரைத் தெரியுமில்லே? என்ன அப்படிப் பார்க்கறே... எத்தனை நாள் இவரைப் பத்தி நீயும் நானும் பேசியிருப்போம்... பாரு, உன் பொறந்த நாளன்னைக்கு புதுப்படம் பூஜை போடறதுக்காக பணத்தோட வந்திருக்கார்.''

தேஜாஸ்ரீ தவிப்பாள். விநாயக்கை அங்கேயே, அப்பொழுதே கொன்று விடுவது போலப் பார்ப்பாள். எதற்கும் மசிகிற ரகமில்லை அவன்.

''இதப் பாரு... நேரம் நல்லாயிருக்கு. வாங்கிக்க. அப்புறம் டைரக்டர், கதாசிரியரோட வருவார். சார்... அப்ப எல்லாத்தையும் பேசிக்கலாம்... சார், ஒரு நிமிஷம் உட்காருங்க... பால் பாயசம் கொண்டாரச் சொல்றேன்...''

''நான் வந்து... தேஜா கூட... ஒரு நிமிஷம்...''

பெட்டியோடு பணத்தை தேஜா கையில் கொடுத்தவர், தவியாய் தவிப்பார்... ஆனால், விநாயக், அவரது கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வாசற்பக்கம் அழைத்துப் போய் விடுவான்.

''சார், உங்ககிட்ட நான் என்ன சொல்லி அழைச்சிட்டு வந்தேன்?''

''என்ன சொல்லி...''

''சரியாப் போச்சு. அதுக்குள்ள மறந்துட்டீங்களா... இது மாதிரி சமாச்சாரங்கள்லே எல்லாம் கொஞ்சம் நிதானம் தேவையின்னு நான் சொல்லலே?''

''அது சரிப்பா... அஞ்சு லட்சம் கட்டுக் கட்டா பெட்டியில வச்சுக் கொடுத்திருக்கேன்... பொட்டியைத் திறந்து பார்க்கலே, ஒரு 'தாங்க்ஸ்' சொல்லலே...''

''சார், உங்களுக்கு வேணும்னா அஞ்சு லட்சம் பெரிய ஃபிகரா இருக்கலாம். தேஜாவுக்கு அது பாக்கெட் மணி மாதிரி. 'தாங்க்ஸ்' எதுக்கு? யார்கிட்ட சொல்லுவாங்க...? எப்ப அவங்க தாங்க்ஸ் சொல்லலையோ அப்ப நீங்க அவங்களுக்கு ரொம்பம்டக் குளோஸ்னு அர்த்தம் சார்...''

''அப்படியா...''

''அப்படியேதான். நீங்க கொஞ்சம் கூடக் கவலைப்படாம வீட்டுக்குப் போய், நிம்மதியா ஒரு தூக்கம் போடுங்க... இன்னும் ஸ்டோரி டிஸ்கஷன், அது, இதுன்னு உங்களை, தேஜாகிட்ட நெருக்கமாய் பழக வைக்க நானில்லே மூளையக் கசக்கிக்கணும்...''

''நல்லபடியா முடிப்பா... உனக்கு வேண்டியதைத் தர்றேன்...''

பணத்தைக் கொடுத்த ஆசாமி, மண்டியிட்டுக் கெஞ்சாத குறைதான்...

''பார்த்தீங்களா... கடைசியில பணத்தைக் கொடுத்து என்னை வேத்து மனுசனாக்கறீங்களே... இது என் கடமை சார்... இந்த விநாயக்கை நீங்க இன்னும் புரிஞ்சுக்கலே...''

வந்தவருக்கு பட்டை நாமம் சாத்தாத குறைதான். அவர் தலை மறைந்ததுமே ஓடோடிப் போய், தேஜாவின் கையிலிருக்கும் பெட்டியைப் பிடுங்குவான்

"உன்னோட கேள்மாலுக்கு என்னை எதுக்கு இழுக்கறே... வேணுமானா, உன் பொண்டாட்டியைக் காட்டிப் பணம் வாங்கேன்..."

தேஜஸ்ரீயும் நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரிதான் கேட்டாள்.

"நான்தான் சொல்லியிருக்கேனே... இத்தனை அழகும் திறமையும் அவகிட்ட இருந்தா நான் ஏன் இப்படி இருக்கேன். எண்பது கிலோவுக்கு நாலடி நடந்தாலே 'புஸ் புஸ்'ஸுனு மூச்சு வாங்குது... பத்தோ, இருபதோ நான் கொடுக்கற தயார். வெறும் அவளை வாங்கிக்க முன் வர மாட்டேங்கறானே..."

தேஜஸ்ரீ தனக்கென சினிமாவில் ஓர் அந்தஸ்தைப் பிடித்தவுடன், விநாயக செய்த முதல் காரியம், தனது திருமணத்தை விமரிசையாக நடத்திக் கொண்டதுதான்.

அவளை மணந்தவனுக்கும் அழகுக்கும் சம்பந்தமே கிடையாது. அதைப் பற்றியெல்லாம் அவன் கவலைப்பட்டதே கிடையாது.

"எதுக்கு அழகு? வீட்டுல ஒரு அழகி வந்துட்டா அப்புறம், அங்கேயே சுத்தி சுத்தி வரத் தோணும்... வீட்டுல அம்மாவை கவனிக்கக... சோறாக்கிப் போட... பிள்ளை பெத்துக் கொடுக்க... நாம கொண்டு வந்து தர்ற பணத்தைப் பத்திரமாப் பாதுகாக்க... ஒருத்தி இருந்தாப் போதும்... அழகுங்கறது நாலு காசு சம்பாதிக்கத்தான்னா இருக்கணும்..."

'பளிச்'சென சொல்லி விட்டான் அவன்...

இப்போதுகூட தேஜஸ்ரீயை எப்பொழுது டாக்டர் பாவனாவிடம் அழைத்துப் போக வேண்டும்... அவளுக்கு எந்த இடங்களில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்... எந்தப் பகுதியில் சிலிகான் பைகளை வைத்துத் தைக்க வேண்டும்... இதெல்லாம்தான் அவன் கவலை...

"தேஜா, கழுத்துல லேசா சதை போட்டிருக்கு..."

"ப்ச... இருக்கட்டும், பரவாயில்லே..."

"என்ன பரவாயில்லே? அடுத்த படம் யாரோட தெரியுமா... அர்ஜுன் கூட... அதுக்கேத்த மாதிரி நீ உன்னை இன்னும் கொஞ்சம் இளமையாக்கிக்கணும். கழுத்துல வயசு தெரிய ஆரம்பிக்குது... அப்புறம்... 'லோ ஹிப்' கட்டறச்சே இடுப்புல மடிப்பு விழுது... முதல்வன் பட ஹீரோயினைப் பார்த்தே இல்லையா... சும்மா 'சிக்'குனு..."

"விடுடா... இதுல நான் அப்பா அர்ஜுனோட இளமைக் காலக் காதலியா வரப் போறேன்... ஒரு டூயட்... நாலு சீன்லே க்ளோசப் ஷாட்... வில்லன் வச்ச குண்டுலே வெடிச்சு சிதறப் போறேன்... ஒரிஜினல் ஹீரோயின் பம்பாய்லே இருந்து வந்திருக்கற புது முகம்..."

"பம்பாயுமில்லே மண்ணுமில்லே. அது அம்மாப்பேட்டை பொண்ணு... கொஞ்சம் படிச்சிருக்கு... சேலம் காலேஜ்லே... நடிப்பே வரல்லே... நீதான் இதுலயும் பேசப்படப் போறே... அதனால, முதல்லே உன் உடம்பை கவனிக்கணும். டாக்டர் பாவனாகிட்ட அப்பாயின்ட்மென்ட் வாங்கியிருக்கேன். அந்த பாதகலை எடுத்து மாட்டிட்டுக் கிளம்பு..."

"ஏய்... நானென்ன யாடா, மனுஷியா... ஏற்கனவே எனக்கு நாலு தடவை



பிளாஸ்டிக் சர்ஜரி நடத்திருக்கு. டாக்டர் என்ன சொன்னாங்க. 'ஒரு ஸ்டேஜுக்கு அப்புறம் மேல் தோலுக்கும், எலும்புக்கும் நடுவுல இருக்கற தசை சுருங்க ஆரம்பிச்சிடும். சிலிகான் வச்சது வேற பிரச்சினையாகும்... அடிக்கடி சர்ஜரி கூடாது'ன்னு சொல்லலே... எனக்கு இப்பவே வயிறு தசை எல்லாம் லூசாயிடுச்சு. ஓடி ஆடினா இழுத்து தச்ச இடமெல்லாம் வலிக்குது. என்னை விட்டுடேன். சம்பாதிச்சது போதும்..."

அவள் சிறு குழந்தை மாதிரி அழுதாள். அவள், அப்படி அழும்போது, கண்ணத்துச் சதை மட்டும் வெளிதாகக் குலுங்குவதையே அவன் கவலையுடன் பார்த்தான்.

"இதை வேற டாக்டர்கிட்ட சொல்லணும்..."

டாக்டர் பாவனா அமெரிக்காவிலும், லண்டனிலும் படித்துவிட்டு வந்த அழகுக் கலை நிபுணர் மட்டுமின்றி, பிளாஸ்டிக் சர்ஜரியிலும் வித்தைகள் புரிந்தவள். அவளது விரல்களில் அப்படி என்னதான் இருக்கிறதோ... ஒவ்வொரு முறையும் அவளிடம் சிகிச்சைக்குப் போய் வந்த பின் தேஜஸ்ரீயின் அழகு கூடுமே தவிர, குறைந்ததாக சரித்திரமே கிடையாது...

"இதப்பாரு... அந்த ஆள்கிட்ட இருந்து அஞ்சு லட்சம் என் பிடுங்கினேன்னு கேட்டியே... இதோ, இப்ப டாக்டருக்கு கொடுக்க வேணாமா... இன்னும் அஞ்சு வருஷமாவது நீ ஃபீல்டுல நிலைக்க திறக வேண்டாமா? இதுக்கெல்லாம் உழைச்சு சம்பாதிச்ச காசைப் போட்டது முட்டாள்தனம்..."

அவளை ஒரு முறை அதட்டிவிட்டு, அந்தப் பணத்தில் பாதியை எடுத்து, தன் கைப்பையில் போட்டுக் கொண்டு மாடியை விட்டுக் கீழே இறங்கியவன், ஹால் சோபாவில் உட்கார்ந்திருந்த நாற்பதைத்து வயது மதிக்கத்தக்க மனிதரைக் கண்டு ஒருகணம் தடுமாறிப் போகிறான்.

"அடடே... மிஸ்டர் விக்டர் தேவ சகாயம்... எப்ப வந்தீங்க இந்தியாவுக்கு..?"

"நேத்து ராத்திரி தம்பி... பொழுது விடியணும்னு காத்திட்டிருந்தேன்... தேஜா எப்படியிருக்காப்பல?"

"அவங்களுக்கென்ன... இன்னமும் 'டாப்'லேதான் இருக்கா. அடிக்கிறதுக்கு இன்னொரு ஆள் இதுவரையில வரலே... ஆமா என்ன விஷயமா வந்தீங்க..?"

"என்னப்பா இப்படிக் கேட்கறே... சிங்கப்பூரிலே அத்தனாம் பெரிய ஃபேக்டரி, தோட்டம் எல்லாத்தையும் விட்டுட்டு நான் எதுக்காக இப்படி நினைச்சப்ப எல்லாம் இந்தியா வர்றேன்... தேஜா, இந்த முறையாவது ஒரு நல்ல பதிலைச் சொல்ல மாட்டாளான்னுதான்..."

"எங்கே சார்... ஒரு வாய் சாப்பிடக் கூட நேரமில்லே. அத்தனை பிஸி. 'போதும்... நான் நடிப்புக்கு முழுக்குப் போட்டுட்டு, சிங்கப்பூர் போய் செட்டிலாயிடறேன் விநாயக... மிஸ்டர் விக்டருக்கு போன் போடு'ன்னு சில நாள் 'ஓ'ன்னு அழுவா. எங்கே முடியுது? மேலே மேலே வந்து, மைசூர் பாகை ஈ மொய்க்கறாப்பல மொய்க்கறாங்க. சொன்னா நம்பமாட்டீங்க சார்... கோயம்புத்தூர்லே தேஜாவுக்கு கோவிலே கட்டியிருக்காங்க..."

"இருந்தாலும்... 'அவதான் உன் மனைவி'யின்னு உள்ளுக்குள்ள ஒரு குரல ஒலிச்சிட்டே இருக்கு விநாயக்..."

அவளை சிரித்தபடி, அவரது தோளைத் தட்டிக் கொடுத்துவிட்டு நகர்ந்தாள். பின்னாலேயே மாடியிலிருந்து இறங்கி வந்த தேஜுஸ்ரீ விகடரைப் பார்த்ததும் ஒரு கணம் தயங்கினாள்.. மறுகணமே சின்னப் புன்னகையுடன் கைகுவித்து வணக்கம் தெரிவித்து விட்டு நகர்ந்தாள்...

இந்த 'கண்டு கொள்ள'லிலேயே புல்லரித்துப் போய் நின்றார் விகடர்...

காரில் ஏறும்போது, விநாயக்கிடம் மெதுவாய் கேட்டாள் தேஜா...

''இவர் எத்தனை லட்சம் தண்டம் அழுதிருக்கார் உன்கிட்ட?''

''உம்... இப்ப நீ இருக்கற வீடே அவர் பணத்துல கட்டினதுதான்...''

அவனது பதிலில் அப்படியே உறைந்து போனாள் அவள்.

# 4

''**யா**ரோ, என்னவோ சொல்லிட்டுப் போறாங்க கண்ணு... இதுக்காக எல்லாம் வருத்தப்பட்டு அழுதா முடியுமா...''

காசிம்மா, தனது தளர்ந்த விரல்களால், தடவித் தடவி, பேத்தியின் முகத்தை வருடிக் கொடுத்தாள்.

ஆனாலும் சமித்ராவின் விசும்பல் ஓயவில்லை.

''அது எப்படி பாட்டி, பள்ளிக்கூடத்துல, காலேஜ்லே எல்லாம் கூட என்னை 'அப்படியே நடிகை தேஜுஸ்ரீ மாதிரியே இருக்கே... கொஞ்சம் கூட வித்தியாசமே இல்லை'யின்னுதான் சொல்லுவாங்க. இந்த ராஜபபா இருக்கானே... இவன் ஒரு தேஜுஸ்ரீ வெறியன்... அன்னிக்கு என்கிட்ட சொன்னான். 'நீ, அவளை மாதிரியே இருக்கறதுனாலத்தான், நான் உன்னைக் கட்டிக்கணும்னு ஒத்தைக் காலல நிக்கறே'ன்னு...''

''தாராளமா நிற்கட்டும். அதுக்காக, கிளிய வளர்த்துப் பூனை கையில கொடுக்க முடியுமா?''

''நான் கூட சொல்லிட்டேன், 'உனக்கு அந்த தேஜா மேல அத்தனை ஆசையிருந்தா அவளையே தேடிப் போய் 'என்னைக் கட்டிக்கறியா'ன்னு கேளு. போ'ன்னு...''

''கேட்கட்டும்... முதுகுல டின் கட்டி அனுப்புவா...''

கண் தெரியாத நிலையிலும் காசிம்மா, தன் பேத்தியின் உருவத்தை மனசுக்குள் உருவகப்படுத்திக் கொண்டு சிரித்தாள்.

பத்து வயசிலேயே அவளை, பள்ளிக்கூடத்தில், 'குட்டி தேஜுஸ்ரீ' என்று அழைப்பார்கள். அப்பொழுதெல்லாம் அவள் தினமும் அழுது கொண்டு வருவாள். பாட்டிதான் சமாதானப்படுத்த வேண்டியிருக்கும்.

''ஏன் பாட்டி, நான், அவளைப் போலவா இருக்கேன்?''

''சேச்சே... உனக்கு இன்னும் கண்ணு பெரிசு... ஆமா, யாரவ?''

''என்ன பாட்டி இப்ப, 'அவளை விட உனக்கு கண்ணு பெரிசு'ன்னு சொல்லிட்டு, திடீர்னு 'யாரவ'ன்னு கேட்கறே...''



''வயசாச்சு இல்லேம்மா... பழசாப் போன மதி. நீ அவளை மாதிரி இல்லே. அவதான் உன்னை மாதிரி இருக்கா. போதுமா...''

பத்து வயசு சமித்ரா, இப்படி விளையாட்டுத்தனமாய் காசிம்மா போக்கு காட்டிய போதெல்லாம், அந்த பதிலிலேயே திருப்தியுற்று ஓடுவாள்.

ஆனால் நாளாக ஆக இந்தத் தொல்லை தாங்கவில்லைதான். கல்லூரியில், இவளது சாதனைப் பெறுவதற்கென்றே எப்போதும் ஒரு கூட்டம். நாடகமா? நாட்டியமா? கல்லூரிப் பேராசிரியர்கள் இவளைத்தான் முதலில் அழைப்பார்கள். அதுபோன்ற சமயத்தில் மறக்காமல் ஒரு கேள்வியையும் கேட்பார்கள்.

''கேட்கறேன்னு தப்பா நினைச்சுக்காதே... உனக்கும் நடிகை தேஜுஸ்ரீக்கும் ஏதாவது உறவு இருக்கா?''

''சேச்சே... அதெல்லாம் இல்லே சார்... எங்க குடும்பத்துல யாருமே சினிமா பார்க்கக்கூட அதிகமாப் போக மாட்டாங்க... எங்க அத்தை ரொம்பவும் கண்டிப்பானவங்க... மேலும்... எனக்கு என்னமோ அந்த தேஜுஸ்ரீயைக் கண்டாலே பிடிக்காது...''

''ஏன், உன்னை விட அழகா இருக்கறதுனாலேயா...''

''இல்லே... அழகு இருந்தா உடனே அதை சினிமா மூலமா எக்ஸிபிட் பண்ணணுமா என்ன? பாருங்க, எங்க வீட்டுலகூட ஒரு தேஜுஸ்ரீ பைத்தியம் இருக்கு. ஒரு வேலையும் கிடையாது. மூளை முழுக்க இந்த நடிகைதான்... அவங்களுக்காக இங்கே ரசிகர் மன்றம் ஆரம்பிச்சு, காசைக் கரியாக்கிட்டிருக்கு...''

இப்படி எத்தனை சம்பிரமாய் சொல்வாள் அவள்?

இன்றைய அவளது அழுகைக்குக் காரணமே வரலட்சுமியின் வசை மொழிகள் தான்.

காலையில் குளித்து விட்டு வந்து, பவுடர் கூடப் பூசாமல், நெற்றியில் சின்னதாய் ஒரு சாந்துப் பொட்டை இட்டுக் கொண்டிருந்தாள் சமித்ரா.

''இன்னும் கொஞ்சம் நீளப் பொட்டு வச்சு, தலைமுடியப் பின்னல் போடாம, அப்படியே முதுகு முழுக்கப் பரவ விடு. சமி... அச்சு, அசல் தேஜா மாதிரியே இருப்பே...''

''ஆமா... அவளுக்கு, தான் ரொம்பத்தான் அழகுன்னு ஏற்கனவே தலை கழுத்துல நிற்கலே. நீ வேற இன்னும் கொஞ்சம் விசிறி விடு. கல்யாணம் செஞ்சிட்டு, குடித்தனம் நடத்தப் போற பொண்ணுக்கு எதுக்குடா அழகு? ரொம்பத்தான் வழியாதே... ஆச்சு... நானும், உங்கப்பாவுமாப் போய், நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறிச்சிட்டு வந்தாகணும். நீ பாட்டுக்கு, வீடு வாசலைத் திறந்து போட்டுட்டு, அவளுக்குப் பூ சாத்தி, கற்பூரம் காட்டிட்டிருக்காதே... ஆமா... சொல்லிட்டேன். எதையும் வைக்கற இடத்துல வைக்கணும்...''

இத்தனை நாளும் இல்லாத அளவுக்கு சமித்ராவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''அத்தை, யாரைக் கேட்டுட்டு நிச்சயம் செய்யப் போறீங்க... உங்க பையனுக்கு வேணும்னா நல்லவளா, உங்க சொல்படி நடக்கறவளா ஒரு பொண்ணைப் பார்த்துக் கட்டி வையுங்க. நான் மேல படிக்கப் போறேன்...''

வரலட்சுமி, புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிக் கொண்டு, மருமகளின்

எதிரில் நின்று, இடது உள்ளங்கையில் வலது கை முஷ்டியால் குத்தியபடி ஓர் ஆட்டம் ஆடினாள்...

"யாரும்மா உன் படிப்புக்காகப் பணம் செலவழிக்கப் போறாங்க... இங்கே பாரு... உன்னை காலேஜ்லே சேக்கவே எனக்குப் பிடிக்கலே. 'வேணாம், வேணாம்'னு முட்டிக்கிட்டேன் உங்க பாட்டி'கிட்ட... குருட்டுக் கிழவிக்கு கண்ணுமட்டுமில்லே... காதும் இல்லே. சமயத்துல டமார செவிடாயிடுச்சு... ஏதோ படிச்சே... டிகிரியைக் கையில வச்சிட்டு போட்டோ எடுத்துட்டே. அவ்வளவுதான். இனிமே சொன்ன பேச்சைக் கேட்டுட்டு, மணப்பந்தல்லே உட்காரு..."

"இல்லையின்னா..?"

இதுநாள் வரையில் அடங்கிக் கிடந்த புலி சீறியது. அந்த உக்கிரத்தில் ஒரு கணம் நிலை தடுமாறித்தான் போனாள் வரலட்சுமி. ஆனாலும் உடனே சமாளித்துக் கொண்டாள்.

"என்னடீ... ரொம்பத்தான் மிரட்டறே... இந்த வரலட்சுமிய லேசுபாசா எடை போட்டுடாதே... ஏதோ, சொன்ன பேச்சைக் கேட்டா மனமா இருப்பே. இல்லே, நாலு வீடு தாண்டி இருக்காளே - உன் பள்ளிக்கூட சிநேகிதி சாந்தா... அவளை அவ அப்பன், காலுலயும், கையிலயும் சங்கிலி போட்டுக் கட்டி 'என் மகளுக்கு காத்தோ, கருப்போ அடிச்சிடுச்சு'ன்னு சொல்லி, ஒரு வருசம் போல, தூணோடத் தூணா உட்கார வச்சானே... அதே மாதிரி பண்ணிப்புடுவேன்... என்ன முறைக்கறே... அங்கே வந்த காத்தும், கருப்பும், நாலு வீடு தாண்டி இங்கே வர எத்தனை நேரமாகும்..."

வரலட்சுமி, கம்பீரமாய் மகனைப் பார்த்தாள்.

"நீயேண்டா மிரண்டு போய் நிக்கறே... வாசத் திண்ணையில உங்கப்பா, இடுப்பு வேஷ்டி போன இடம் தெரியாமத் தூங்கிட்டு இருப்பாரு. ஒரு சொம்புத் தண்ணியக் கொண்டு போய், தலையில ஊத்து... பல்லை தேய்ச்சிட்டு வந்தவுடனே காபி, பலகாரத்துக்கு உட்காருவாரு... கிளப்பி விடு. முதல்லே ஜோசியன் வீடு. அப்புறம் தான் எல்லாம்..."

ராஜப்பா, உற்சாகமாய் வாசலுக்கு ஓடினான். வரலட்சுமி, இவளை வெட்டுகிற மாதிரி ஒரு பார்வை பார்த்துவிட்டு, அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள்.

அன்றுதான் காலையில் ஒரு டஜன் இட்லியையும் சம்பார், சட்னியில் புரட்டிப் புரட்டி அமுக்கிவிட்டு, பக்கத்து தியேட்டரில் என்ன படம் என்று பார்க்க ராஜப்பா நகர -

அப்படி நகரும் முன், அவளை எச்சரித்து விட்டுத்தான் போனான்.

"சுமி, நான்தான் இல்லையேன்னு எங்கேயும் ஃப்ரெண்டைப் பார்க்கப் போறேன்னு போயிடக் கூடாது. அப்புறம் அம்மா வந்தா, அதுக்கு வேற திட்டு வாங்குவே... பேசாம, என்னோட சினிமாவுக்கு வர்றியா... மேட்னி ஷோ, அம்மாவும், அப்பாவும் வீடு திரும்பறதுக்குள்ளே நாம வந்து சேர்ந்துடலாம்..."

"அடச்சீ போடா..."

சுமித்ரா அவன் மீது எரிந்து விழுந்தாள்... அவனோ, கெக்கலிக்கிற தோரணையில் சிரித்தான்.

"இரு, இரு... இப்ப நீ நடந்துட்டதுக்கு எல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்



சேர்த்து வச்சுத் தர்றேன்..."

அவனது தலை மறைந்ததும், கதவை இழுத்துப் பூட்டிவிட்டு, ஓடி வந்து காசிம்மாவின் மடியில படுத்து 'ஓ'வென அழத் தொடங்கினாள் சுமித்ரா...

ஏற்கனவே கூடத்தில் நடந்த பேச்சுவார்த்தைகள் ஓரளவுக்காவது கிழவியின் செவிகளில் விழுந்திருக்க வேண்டும். சிறிது நேரம் வரையில் வாய் பேசாமல், கண்ணீர் வடித்தாள்.

"பாட்டி, எங்கம்மா செத்துப் போனவுடனேயே என்னையும் சாகடிச்சிருக்கலாம் இல்லே? எதுக்காக என்னை இத்தனை தூரம் வளர்த்து, ஆளாக்கி, இந்த முரடன்கிட்ட ஒப்படைக்கணும்... இப்படித்தான் என் வாழ்க்கை அமையணும்னு நீ ஆசைப்பட்டிருந்தா எதுக்காக என்னை இந்த அளவுக்குப் படிக்க வைக்கணும்? பத்தாவ கிளாஸோட படிப்பை நிறுத்தி, வறட்டி தட்டச் சொல்லிக் கொடுத்திருக்கலாமில்லே?"

"நீ நல்லாப் படிச்சு, அமைதியா முன்னேறி, உன்னை உள்ளங்கையில வச்சுத் தாங்கற மாதிரி - படிச்ச, நல்ல குணமுள்ள கணவன் வரணுமகறதுதாம்மா உங்கம்மாவோட ஆசை..."

"அவளுக்கென்ன, அவ சொல்லிட்டு செத்துப் போயிட்டா. இப்ப நானில்லே கிடந்து முழிக்கிறேன்... பாவி... அத்தனை ஆசை வச்சிருந்தவ என்னையும் தன்னோடவே அழைச்சிட்டுப் போயிருக்கக் கூடாது..?"

காசிம்மாவுக்கு, உணர்ச்சி வேகத்தில் தொண்டையை அடைத்தது... இத்தனை நாளும் காத்து வந்த பொறுமை எல்லாம் அந்த ஒரு நொடியில் பறந்து போயிற்று. தான் இன்னும் அதிக நாட்கள் உயிருடன் இருக்கப் போவதில்லை என்பது மிகத் தீர்மானமாக அவளுக்குத் தெரிந்து போனதினால், இனியும் எதையும் மறைப்பதில்லை என்கிற முடிவுக்கு வந்தவளாய், பேத்தியின் காதைப் பற்றி, அருகே இழுத்தாள்.

"என்ன பாட்டி?"

"வீட்டுல யார் இருக்காங்க?"

"யாருமில்லே... அத்தையும் மாமாவும் முகூர்த்தம் குறிக்கப் போயிருக்காங்க... ராஜப்பா சினிமாவுக்கு..."

"இங்கே பாரு... உன்னை, தன் தம்பி பொண்ணுங்கற காரணத்துக்காக, முறை விட்டுப் போயிடக் கூடாது என்பதற்காக வரலட்சுமி, தன் பையனுக்கு கட்டி வைக்க ஆசைப்படல்லே..."

"பின்னே?"

"உன் கூட வரப்போற ஏராளமான சொத்துக்காக..."

சுமித்ரா ஒரு கணம் திகைத்து உட்கார்ந்து விட்டாள். பேச்சே எழும்பவில்லை.

"சொத்தா... எனக்கா... என்ன உளர்றே பாட்டி?"

"நான் ஒண்ணும் உளறலேம்மா, நிசம்தான். உங்கம்மா ஒரு கோடீஸ்வரி. இந்த ஹைதராபாதலேயே அவளுக்கு மூணு வீடு - இதையும் சேர்த்து... அதுல ஒரு வீடு மட்டும் அஞ்சு கோடி பெறும்... தவிர பெரிய பண்ணை, திராட்சைத் தோட்டம் எல்லாம் இருக்கு. பட்டணத்து பங்களாவும் ரொம்பப் பெரிசாம், சொல்லிக்கறாங்க. இப்ப ஒவ்வொரு நாளும் உங்க அத்தை கட்டிட்டு மினுக்கற பட்டுப் புடவைங்களும், நகைங்களும் எங்கேயிருந்து வந்ததுங்கறே... எல்லாம்

உங்கம்மாவோட சொத்தும்மா... உங்கம்மாவோட சொத்து...''

''பாட்டி... உனக்கு மூளை கீளை சரியில்லையா... நல்லாத்தானே இருக்கே...''

''அடிப் போடி... எனக்கு இத்தனை வருஷமா பிடிக்காத பைத்தியம், இனிமேதான் பிடிக்கப் போகுதாக்கும்... உன்னை இங்க விட்டுட்டுப் போனா உங்கம்மா. உன்னை பொறுப்பா இத்தனை நாளும் நான்தான் பார்த்துட்டிருக்கேன்... இப்பவும் நான்தான் பார்த்துக்கறேன்... கண்ணு தெரியாட்டி என்ன... நான் பெத்த மகளோட குணாதிசயம் தெரியாதா... இங்கே பாரு... நான் ஒண்ணு சொன்னா கேட்பியா?''

''என்ன...''

ஏற்கனவே மிரண்டு போயிருந்த சுமித்ரா, இன்னமும் பயந்து போனவளாய் கேட்டாள்.

''பேசாம, உங்கம்மாகிட்டேயே போயிடு...''

''என்னது? என்னை சாகச் சொல்றியா?''

சுமித்ரா, நிச்சயமாய் பாட்டிக்கு ஏதோ ஆகிவிட்டது என்றே நினைத்தாள். ஏற்கனவே, பார்வை பறி போனதற்குக் காரணம், கண்ணில் புற்றுநோய் தாக்கியிருப்பதாக டாக்டர்கள் கூறியிருந்தார்கள். அது மட்டுமில்லை... இந்த நோய், எப்பொழுது வேண்டுமானாலும் மூளைப் பகுதியைத் தாக்கும் என்றும், அப்படி ஏதேனும் ஆயிற்றென்றால், கிழவி சில நாட்களுக்கு புத்தி பேதலித்து அவதிப்பட வேண்டிய நிர்பந்தம் வேறு ஏற்படும் என்றும் சொல்லியிருந்தார்.

ஒரு வேளை, அப்படித்தான் ஏதாவது ஆகி விட்டதோ என்று நினைத்தாள் சுமித்ரா. காசிம்மாவையே வெறித்துப் பார்த்தாள்.

இவளது பயமெதுவும் தெரியாத கிழவி பாதி அழுகையும், மீதி பொக்கை வாய் சிரிப்புமாகச் சொன்னாள்.

''நீ எதுக்குடி சாகணும்? ராசாத்தி மாதிரி வாழ வேண்டியவ. மூட்டைப் பூச்சிக்குப் பயந்துட்டு வீட்டைக் கொளுத்தினாப்பல - இந்த தடி தீவட்டிக்குப் பயந்து நீ சாகணுமாவது... நான் என்ன சொல்றேன்னா... பட்டணத்துல உங்கம்மா செல்வாத்தா உசிரோடத்தான் இருக்கா...''

''என்ன பாட்டி சொல்றே?''

சுமித்ரா அலறியே விட்டாள்.

'அம்மா உயிரோடு இருக்கிறாளாமே... அதுவும் வசதியாய், பெரும் பணக்காரியாய்... அப்புறம் ஏன், இங்கே என்னைத் தள்ளி விட்டா... ஏன்...?'

காசிம்மா, பேத்தியின் மௌனத்தை உணர்ந்து, பயந்து போனவளாய், மெல்ல அவளை இழுத்து, தன் மடியில் போட்டுக் கொண்டாள்.

''கண்ணுமா, அந்தக் கடங்காரன் ராஜப்பா சொல்ற மாதிரி... உனக்கு அந்த நடிகை தேஜுஸ்ரீ சாயல் அப்படியே இருக்குன்னா... அதுக்குக் காரணம் அவதான் உன்னைப் பெத்தவ... இருபது வருஷங்களுக்கு முன்னாடி அவ பேரு வெறும் செல்வாத்தாதான்...''

''சீ... இப்படி பெத்த குழந்தை மேல, கொஞ்சம் கூடப் பாசமே இல்லாம, விட்டுட்டு ஓடினவதான் எங்கம்மாவா...? இதைக் கேட்கவே காது கூசறது பாட்டி... இதை விட, எங்கம்மா செத்துப் போயிட்டான்னு சொல்லிக்கறதுல



தப்பேயில்லே... அதுவும், அந்த தேஜுஸ்ரீ... அவளா, என்னைப் பெத்தவ... ச்சீ த்தூ... கொஞ்சம் கூட வெட்கமேயில்லாம கண்டவனோட உருண்டு புரண்டு...''

''சுமித்ரா...''

காசிம்மா, பேத்தியை அடக்கத்தான் நினைத்தாள். ஆனால் அவளது குரல் அழுகையில் தழுதழுத்தது...

''நீ நினைக்கற மாதிரி இல்லேம்மா உங்கம்மா... அன்னிக்கு, உங்கப்பனோட சந்தேக குணத்துக்கு ஈடு கொடுக்க முடியாம, அடி திங்க மாட்டாம கிடந்தவளை நான்தாம்மா 'போ, போய் எங்கேயாவது நாலு வீட்டுல வேலை செஞ்சாவது பிழைச்சுப்போ'ன்னு சொல்லி விரட்டினேன். அவளை ஏமாத்தி விட்டது யாரு தெரியுமா... உன் அத்தை புருஷன் - அதான் என் மருமகன்தான்''

''..........''

''உன் அம்மா, அந்த நாளுலேயே நல்ல அழகி... அதுவேதான் உன் அப்பனுக்கும் அவனுக்கும் ஆக விடாம செஞ்சது. கள்ளமில்லாத குழந்தை மனசு... அவ தலை முடிய அவுத்து விட்டா, தரையத் தொடும். பாவி மகன் முடியப் பிடிச்சு இழுத்தே, தலைய சுவத்துல மோதுவான்...''

''..........''

''உன்னை விட்டுட்டுப் போக மனசேயில்லாம அழுதா. நான்தான் பார்த்துக்கறேன்னு... இன்னிக்குப் பாரு... அவ வாங்கற ஒவ்வொரு சொத்தும் தன் மகளுக்காகன்னு. உன் அத்தை பேராசை பிடிச்சவ... உன்னை, ராஜப்பாவுக்குக் கட்டி வச்சு, அத்தனை சொத்துக்கும் அதிபதியாகலாம்னு...''

மேலே சொல்வதற்கு வழியின்றி, வாசலில் கார் நிற்கும் ஓசை.

''அடியேய்... உங்க அத்தை வந்துட்டா... ஓடு... ஓடு... நான் சொன்னதை எல்லாம் மனசுலே வச்சுக்க. எந்த நிமிஷமும் இந்த வீட்டை விட்டு ஓடத் தயாரா இரு...''

காசிம்மா இதைச் சொல்லி விட்டு, 'சட்'டெனத் திரும்பிப் படுத்து, சுவரோடு ஒட்டிக் கொண்டாள்.

''கதவைத் திறக்க இத்தனை நேரமா...? என், பாட்டியும் பேத்தியும் குலாவிட்டிருந்தீங்களாக்கும்...''

கழுத்தை நொடித்தபடி, கம்பீரமாய் உள்ளே நுழைந்த வரலட்சுமி, தாழ்வாரத்தில் படுத்திருக்கும் தன் தாயாருக்கும் கேட்க வேண்டும் என்கிற மாதிரி, குரலை உயர்த்தி சத்தமாய் சொன்னாள்.

''சித்திரை மாசம் வளர்பிறை வெள்ளிக்கிழமை, அமிர்தயோகம், அன்னிக்கு நாள் நல்லாயிருக்குன்னு ஜோசியர் சொல்லிட்டார். வர்றச்சேயே கல்யாணச் சத்திரத்துக்கு அட்வான்ஸ் கொடுத்தாச்சு... ஆ... சொல்ல மறந்துட்டேன்... வர்ற புதன்கிழமை சாயந்திரம் நிச்சயதார்த்தம்... வீட்டு மட்டோட சிம்பிளா நடத்திடலாம். கல்யாணத்தைத் தடபுடல் பண்ணிடலாம்...''

காசிம்மா, 'விலுக்'கென எழுந்து உட்கார்ந்தாள்.

''அது சரி... வீட்டு மட்டோடன்னா என்ன அர்த்தம்? சொல்ல வேண்டியவங்களுக்கு எல்லாம் சொல்லிட்டியா? உடமைக்காரங்களோட

சம்மதம் வேண்டாமா?''

அவ்வளவுதான்; வரலட்சுமி விசுவரூபமெடுத்து விட்டாள்.

''என் கிழவி... கண்ணுதான் நொள்ளையாயிடுச்சே... போதாதா... நாக்கை வேற அறுத்து நடு வீட்டுல சூலம் செருகி, அதுல குத்தி வைக்கணுமா? நீ யாருக்குச் சொல்லணும்னு சொல்றியோ அவங்களுக்கெல்லாம், மஞ்சள் குங்குமம் தடவின கடுதாசியே எழுதிப் போட்டப் போறேன்.''

இத்தனைக்கும் நடுவில் அருணகிரி, மனைவியை கீழ்கண்ணால் அளந்தபடியே மெதுவாய் திண்ணையை நோக்கி நகர, வரலட்சுமி அதட்டி நிறுத்தினாள்.

''எங்கே பதுங்கறீங்க? இன்னிக்கு என்ன... வெள்ளிக்கிழமை... இப்பவே ஒரு காகிதம் எடுத்து எழுதுங்க... மஞ்சள் தடவித் தர்றேன்... கேரியர்லே அனுப்புங்க... அப்பத்தான் சீக்கிரமாப் போய் சேரும்...''

''அது... கேரியா இல்லே வரலட்சுமி... கூரியர்...''

''ஆமா... இவரு பெரிய கலெக்டரு... எனக்கு சொல்ல வந்துட்டாரு... சொன்னதைச் செய்யுங்க... அப்புறம் என்னைத் திருத்தலாம்... கடுதாசிய எழுதி முடிக்கற மட்டும் பிராந்தி பக்கம் போகக் கூடாது...''

அடுத்த கணம், அவனையும் இழுத்துக் கொண்டு, தன் அறைக்குள் போய், கதவைச் சாத்திக் கொண்டாள் அவள்.

சுமித்ரா, பிரமித்து நின்றாள்.

ராஜப்பாவுக்கும் தனக்கும் கல்யாணம் என்பதையே அவளால் இன்னும் ஜீரணிக்க முடியவில்லை.

போதாக் குறைக்கு புதுச் செய்தி...

'நடிகை தேஜஸ்ரீதான் உன் அம்மா என்று...'

வரலட்சுமி, இப்பொழுது தன் தாய்க்குத்தான் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறாள் என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்தது அவளுக்கு.

இல்லாவிட்டால் 'உடமைக்காரர்கள்' என்கிற சொல்லுக்கு இங்கே வேறு யார் இருக்கிறார்கள்? வரலட்சுமி, அது மாதிரி யாரையுமே வீட்டுக்குள் நுழைய விட்டதில்லையே...

சுமித்ரா, அவசரமாய் ஓடி வந்து, பாட்டியின் கையைப் பிடித்தாள்.

''யாரு...''

''பாட்டி... நான்தான்... நிஜம்மாவே எனக்கு பயம்மா இருக்கு...''

''கவலையேபடாதே... கடைத்தெருப் பக்கம் போறப்ப ஒரு கறுப்பு பர்தா வாங்கி, உங்க அத்தை கண்ணுல படாம மறைச்சு வச்சுக்க. பொட்டி, படுக்கை எதுவும் வேண்டாம். நான் சமயம் பார்த்துக் கிளப்பி விடறேன். நீயும், உங்க அம்மா மாதிரி ஓடு. அவ விலாசம் கூட அருணகிரிகிட்ட இருக்கு...''

அவ்வளவுதான். காசிம்மா சொன்ன அந்த 'சமயம்' மறுநாள் சனிக்கிழமை இரவுதான் வாய்த்தது. வரலட்சுமி, வண்டி வரவழைத்து, மாலையே கிளம்பி, ஜவுளிக்கடைக்கும், நகைக்கடைக்கும் கிளம்பி விட்டாள். கூடவே, ஒட்டுப்புல் மாதிரி ராஜப்பா.

''வாடா கண்ணா. சனிக்கிழமை ஸ்திர வாரம். வெங்கடேச பெருமாளை வேண்டிட்டு, மஞ்சத் துணியில ஒரு ரூபா காசை எடுத்து முடிஞ்சு வச்சிட்டு வந்திருக்கேன். இந்தக் கல்யாணம் நல்லபடியா நடந்து முடியட்டும்.



முடிகாணிக்கை செலுத்த சொல்றேன்னு...''

''அய்யோ, அம்மா எனக்கா மொட்டை?''

''அசடே... உனக்கு வேண்டிப்போனா... உங்க அப்பா எதுக்கு இருக்காரு... மாசத்துக்கு ஒரு தடவை சலூனுக்குப் போற செலவாவது மிச்சம்...''

அவர்கள் கிளம்பும்போது அருணகிரி, திண்ணையிலேயே அரை மயக்கத்தில் கிடந்தார்.

''அம்மா... அப்பாவும் வர வேணாமா...''

ராஜப்பா, தயங்கியபடி கேட்க, வரலட்சுமி 'பட்'டென பதிலளித்தாள்.

''அவருக்கு உன் கல்யாணத்துக்குக் கூட பட்டு வேஷ்டி கிடையாதுடா. தண்டச் செலவு. ஒரு முழு பாட்டில் நாட்டு சாராயம், தொட்டுக்க கருவாடு... போதும்... கிளம்பு...''

கார், தெரு முனையில் சென்று மறையும் வரையில் 'மப்பும், மந்தாரமுமாய்' திண்ணையில் கிடந்த அருணகிரி சாவி கொடுத்த பொம்மை போல உள்ளே ஓடினான்.

''சுமி... இதுதான் நேரம்... புறப்படு... உங்க பாட்டிகிட்ட சொல்லிக்க... இந்தா உங்கம்மா விலாசம்...''

அவள் கண்ணீர் ததும்ப, கையெடுத்துக் கும்பிட்டாள்.

பர்தா அணிந்து, இவள் ரயிலில் ஏறி அமர்ந்த அதே நேரத்தில் சென்னையிலிருந்து தேஜஸ் புயலாய் - தன்னந்தனியாய் காரில் ஸ்ரீராமபுரத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

## 5

இப்படியொரு முடிவை வரலட்சுமி எடுப்பாள் என்று விநாயக் கூட கற்பனை செய்து பார்த்ததில்லை...

கொஞ்சம் மூளையை செலவிட்டிருந்தால் இந்த கூரியரை தேஜஸ்ரீயின் பார்வையில் படாமலேயே ஒதுக்கியிருக்கலாம் அவன்.

நேரம் சரியில்லை என்பார்களே... அது இதுதான்... விநாயக், 'அன்று யார் முகத்தில் விழித்தோம்' என்று நினைவுபடுத்திப் பார்த்தான்.

இதோ இந்த விக்டர் தேவசகாயத்தின் முகத்தில்தான்...

இரவு முழுக்க படப்பிடிப்பு... விடிகாலையில் தேஜாவுடன் வீடு வந்து சேர்ந்த விநாயக் அந்த அகாலத்தில வீட்டுக்குப் போய் மனைவியை எழுப்புவானேன் என்கிற பாச உணர்வுடன் தேஜாவின் வீட்டு ஹாலில் போடப்பட்டிருந்த பிரம்மாண்டமான சோபாவிலேயே தூங்கிப் போக...

கண் விழித்தபோது காலை மணி ஏழு முப்பது... தேஜா இன்னமும் எழுந்திருக்கவில்லை... இப்போது எழுந்திருக்க மாட்டாள். எப்படியும் பத்து பதினொன்று ஆகி விடும்...

'அதுக்குள்ள ஒரு காபிய உள்ளே இறக்கிட்டு, அப்படியே வீட்டுக்கும் ஒரு

நடை போய் பார்த்துட்டு வந்துடலாமா...''

மனசுக்குள் கூட்டி, கழித்து, என்னென்னவோ கணக்கு போட்டபடி, கண்களைத் திறக்கப் பிரியப்படாமல் அவன் அப்படியே சிறிது நேரம் படுத்திருக்க

''குட் மார்னிங்...''

காகாத்த - சற்றேறக் குறைய நாலு கட்டை கருதியில் குரல் வந்த திசையில் கண்களை மலர்த்தியவனுக்கு விக்டரின் முகம்தான் தரிசனத்துக்குக் கிடைத்தது...

அவர், காபி கோப்பையை கையில் வைத்தபடி நைந்த சிரிப்பொன்றை உதிர்த்தார்...

''என்ன, காலையிலேயே வந்துட்டேனேன்னு பார்த்தியா... ராத்திரி கனவு முழுக்க தேஜா தாம்பா... 'என்னை எப்ப உங்க கூட அழைச்சிட்டுப் போகப் போறீங்க'ன்னு ஒரே அழுகை... பூ தோ... அவ மனசுல ஏதோ வெளில சொல்ல முடியாத அவஸ்தை இருக்குதுன்னு என்னோட மனசுக்குப் பட்டது. அதான் ஓடி வந்துட்டேன். என் விநாயக்... தேஜா நல்லாத்தானே இருக்கா..?''

அந்தக் கணத்தில் விநாயக்குக்கு, அவரது கழுத்தை அப்படியே முறித்துப் போட்டு விட வேண்டும் போலத் தோன்றினாலும், மிகச் சிரமப்பட்டு, தன்னை அடக்கிக் கொண்டான்.

சும்மாவா... கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கும் மேலாக தேஜாவுக்காக இவர், பணத்தைத் தண்ணீராக வாரி இறைத்துக் கொண்டு காத்திருக்கிறாரே...

ஒவ்வொருத்தரைப் போல கொஞ்ச நாள் நாயாய் அலைந்துவிட்டு, கைக்காசு காலியானவுடன் காணாமல் போகிற ரகமில்லை இவர்.

கோடீஸ்வரர். சிங்கப்பூர், மலேயாவில் மிகப் பெரிய தொழிலதிபர். சுமார் பதினைந்து, இருபது வருடங்களுக்கு முன்பு இவரது அன்பிற்குரிய மனைவி இறந்து விட்டாள்... அவள், அசப்பில் தேஜாவைப் போல இருப்பாள் என்றும், தனக்குப் பதில் தனது இடத்துக்கு இவள்தான் சரி என்று செத்துப்போன மனைவி கனவில் வந்து சொன்னாள் என்றும் புலம்பிக் கொண்டே இருப்பார்.

சிங்கப்பூருக்கு, தேஜஸ்ரீயுடன் விநாயக் போன போது விக்டரின் மனைவியுடைய புகைப்படத்தைப் பார்த்தான். சாயல் அப்படியொன்றுமில்லை... கட்டையாய், குட்டையாய், தலைக்கும் தோள் பட்டைக்கும் நடுவே கழுத்து என்கிற ஒன்றே இல்லாதவளாய் உடம்பு நிறைய நகைகளுடன் கேமராவுக்காக சிரித்துக் கொண்டிருந்தாள் அவள்.

''எந்த விதத்துல இந்த மனுஷன், இவர் பொண்டாட்டியும் நானும் ஒரே மாதிரி இருக்கறதாச் சொல்றார்? விநாயக்... எனக்கென்னவோ, இவர் சைக்யாட்ரிஸ்ட்கிட்ட போக வேண்டிய கேஸ் போல இருக்கு. என் பக்கம் கையைக்காட்டி விடாதே...''

தேஜஸ்ரீ, அப்போதே சொல்லி விட்டாள். விநாயக்தான் ஏற்கவில்லை.

''அதெல்லாம் நாம சொல்ல முடியாது தேஜா. எங்க வீட்டுகிட்ட சிலேட்டுப் பலகை மாதிரி மூஞ்சியோட சிவராம கிருஷ்ணன்னு ஒருத்தன் இருப்பான். அவனை எல்லாரும் ஜூனியர் ஜெமினி கணேசன்னு சொல்லிச் சொல்லி ஏத்திவிடுவாங்க... ஜெமினிக்கும் இவனுக்கும் ஸ்நானப் பிராப்தி கூட கிடையாது.



என்ன, கொஞ்சம் சிவப்புத் தோலாயிருப்பான். கிராப் மட்டும் ஸ்டைலாச வச்சிருப்பான். சட்டுன்னு பார்த்தா அவன் கண்ணுல மெலிசான 'ரொமான்டிக் லுக்' இருக்கும். அவ்வளவுதான்... அவனைப் பிடிச்சவங்க இதையே பெரிசு பண்ணி, காதல் மன்னனுக்கு நேர் வாரிசு இவன்தான்னு பட்டம் கட்டாத குறையா...''

''..............''

''ஒரு சின்ன பார்வை, சிரிப்பு, பேசறப்ப தலைய ஆட்டற விதம் - இல்லே நெஞ்சை நிமிர்த்திட்டு, கால் ரெண்டையும் நேர்கோட்டுல மாத்தி, மாத்தி வச்சு நீ நடக்கறது... இதுல ஏதாவது ஒன்னு அவருக்கு, அவர் பெண்டாட்டிய ஞாபகப்படுத்தற விதமா அமைஞ்சிருக்கலாம். இதையெல்லாம் பெரிசா எடுத்துக்காதே... மகாலிங்கபுரத்துல வாங்கிப் போட்டிருக்கற கிரவுண்டை எப்படிடா உன் அந்தஸ்துக்கு ஏத்த மாதிரி கட்டி முடிக்கிறதுன்னு கவலைப்பட்டுட்டிருந்தேன். வெங்கடாஜலபதி விக்டர் உருவத்துல வந்திருக்கார். ஜாதி, ஜாதின்னு அடிச்சுக்கறோமே... கவர்மெண்டுல அச்சடிக்கற காசுலயில ஜாதியா இருக்கு. நாமமோ இருக்கா... விக்டர்கிட்ட இருக்கறப்ப அவர் பணம், நம்ம கைக்கு வந்ததும் நம்ம பணம்... சிலாக்கலை...''

இப்படிச் சொல்லிச் சொல்லியே அவளை, விக்டரின் கண்களில் காட்டி, காட்டி எத்தனை லட்சங்களை வாங்கி இருக்கிறான் இந்த விநாயக்!

ஒவ்வொரு முறையும் இவன் கேட்கிற போதெல்லாம், என்ன, எதற்கு என்று எதிர் கேள்வி கேட்காமலேயே பணத்தை அள்ளிக் கொடுப்பாரே விக்டரும்.

'சந்தடி சாக்கில் சந்தப் பொடி காற்பனம்' என்பதுபோல அதே மகாலிங்கபுரத்தில் தேஜாவின் வீட்டுக்குப் பக்கத்துத் தெருவில் மூன்று கிரவுண்டில் சுற்றி வரத் தோட்டம், போர்டிகோவில் முயல் குட்டி போல ஒரு 'ஜென்', பெரிய கல்யாணக் கூடம், மூன்று விஸ்தாரமான படுக்கையறைகள், ஒரு ஆபீஸ் ரூம், டைனிங் கிச்சன் என்று அமர்க்களமான பங்களா... புழக்கடையில் லட்சுமிகரமாய் இரண்டு ஜெர்ஸி பசு, கூப்பிட்டவுடன் ஓடி வந்து மடியில் ஏறிப் படுத்துக்கொள்ள ஒரு பொமரேனியன் நாய் குட்டி...

இத்தனையையும் தனக்காக - இந்த மனிதர், தேஜாவுக்காக செலவழித்த பணத்தை - தன் பக்கமும் வாய்க்கால் வெட்டி இழுத்துக் கொண்டிருக்கிறானே...

இவரிடம் போய் கோபப்பட்டால் முடியுமா?

''அடடா... வாங்க... தேஜா இன்னும் எழுந்திருச்சிருக்க மாட்டாளே... நான் வேணாப் போய் பார்த்து, ஒரு குரல் கொடுத்துட்டு வரட்டுமா...''

''அய்யய்யோ... வீணா தொந்தரவு செய்யாதே. பாவம் தூங்கட்டும். இப்ப என்ன... நான், இங்கே உட்கார்ந்திருக்கேன். எனக்கு ஒரு அவசரமும் இல்லே...''

மனிதர் அழுந்த உட்கார்ந்திருப்பதைக் கண்டதும், இப்போதைக்கு இவரை நகர்த்த முடியாது என்பதைப் புரிந்து கொண்டு விட்டான் விநாயக்.

'இருந்துட்டுப் போகட்டுமே, யாருக்கு என்ன நஷ்டம்? எப்படியும் தேஜா எழுந்திருக்க இன்னும் மூணு நாலு மணி நேரமாகும். அதுக்குள்ள வீட்டுக்கு ஒரு நடை போய் பார்த்துட்டே வந்துடலாம்...''

அவன் சோம்பல் முறித்தான். அவரைப் பார்த்து சிநேகம் ததும்பச் சிரித்தான்.

''சார், நீங்க இருங்க. இது உங்க வீடு. தேஜா உங்களுடையவ. டிபன் கொண்டு

வரச் சொல்றேன்... சாப்பிட்டுட்டு, பேப்பரைப் புரட்டிட்டு இருங்க. இதோ நான், என் வீடு வரைக்கும் போயிட்டு அஞ்சு நிமிஷத்துல வந்துடறேன்...''

''ஆகா... தாராளமாச் செய். ஒண்ணும் அவசரமே இல்லே...''

விக்டர் புன்னகைத்தார். சட்டைப் பையிலிருந்து புகை பிடிக்கும் குழாயை எடுத்து வாயில் பொருத்தி சிகரெட் பாக்கெட்டைத் தேடினார்...

அவரது தேடல் அறிந்து, விநாயக், தன் பையிலிருந்த 'டிரிபிள் ஃபைவ்' பாக்கெட்டை எடுத்து டீபாயில் போட்டான்.

''அட, நீ சிகரெட் பிடிப்பியா?''

''நீங்க வேற... நமக்கு அதுக்கெல்லாம் எங்கே சார் நேரம்... தேஜா கூப்பிட்டா, ஓடத்தான் சரியா இருக்கு இது. உங்களை மாதிரிப்பட்ட சில ஃப்ரெண்ட்ஸுக்காக...''

அதற்கு மேல் அங்கே காத்திராமல் ஓடினான் விநாயக். இவனது பரபரப்புக்குக் காரணம் இல்லாமல் இல்லை.

பாதி ராத்திரி படப்பிடிப்பின் போது - கையில் தர வேண்டிய, கணக்கில் வராத பணம், வந்தால்தான் தேஜா, மேக்கப்பே போடுவாள் என்று அடம் பிடித்து, பட அதிபரிடம் வாங்கிய பணம் இன்னமும் அவன் கையில் இருக்கிறது.

அதிக நேரம் இங்கே வைத்திருப்பது ஆபத்து..

இந்தப் பதட்டத்தில்தான் அவன் கிளம்பினான். வீட்டுக்குப் போய், மனைவியின் தங்கையை வரவழைத்து, அவளுடன் வங்கிக்குப் போய் அவளது கணக்கில் இந்தப் பணத்தைப் போட வேண்டும்... கேட்கும் போது எடுப்பதற்கு வசதியாக...

'பாவி மனுசன்... பணத்தைப் பைசல் பண்ணின விஷயத்தை மனசோட வச்சிட்டிருக்கலாம். அதை விட்டுட்டு தேஜாகிட்ட ஒரு தரம் ஒப்பாரி வச்சிட்டான். இல்லையின்னா இதுக்கு கணக்கு காட்ட வேண்டிய அவசியமே வந்திருக்காது...'

பத்து ரூபாய்க்கும், நூறு ரூபாய்க்கும் வித்தியாசம் தெரியாமல் இவனிடம் சரண் புகுந்த செல்லாத்தா இல்லை இப்பொழுது...

இன்றைய தேஜாவுக்கு குதிரையேற்றம், கார் ஓட்டுதல், கராத்தே, பரத நாட்டியம், கதக், குச்சுப்புடி முதல் கணக்கில் எத்தனை பணம் - கையில் எத்தனை பணம் என்பது வரையில் தெரியும். அவளே, தனது பணத்தில் ஒரு பங்கை விநாயக் கேட்காமலேயே தூக்கிக் கொடுப்பாள்...

'எல்லாம் இவனால் வந்ததுதானே...' என்கிற நன்றியுணர்வும் அவளுக்கு உண்டு.

ஆனால், அதையும் தவிர விநாயக் தன்னால் முடிந்த வரையில் சுருட்டுவதும் உண்டு...

இந்த அளவுக்கு கேள்வி கேட்கத் தெரியாமல் முழு அசடாக இல்லையே என்பதுதான் விநாயக்கின் வருத்தம்.

''பரவாயில்லே செல்லாத்தா... வந்து சேர்ந்த ரெண்டு வருசத்துக்குள்ளே சினிமா உலகத்துல இருக்கற நெளிவு சுளுவு எல்லாத்தையும் கத்துக்கிட்டே...''

இப்படித்தான் அடிக்கடி கிண்டலடிப்பான்...

இவன் பணத்தை பங்கீடு செய்துவிட்டு, மறுபடியும் தேஜாவின்



பங்களாவுக்குள் நுழைந்தபோது அவன் நினைத்ததை விடவும் ஒரு மணி நேரம் தாமதமாகியிருந்தது.

நினைத்தால் நினைத்தபடி எல்லாம் முடிகிறதா...

விடியல், ஊரிலிருந்து மாமனார், தன் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வந்து டேரா போட்டிருந்தார்.

என்னவோ வயிற்றில் வலியாம். முதலில் தண்டு வடம் நகர்ந்திருக்கிறதாம். அந்த ஊர் டாக்டர் சொன்னாராம். 'உங்க மாப்பிள்ளைதான் மெட்ராஸ்லே நடிகை தேஜாவோட பி.ஏ.வா கொடி கட்டிப் பறக்கறாரே அங்கே போங்க' என்று...

எழுபது வயசு அப்பாவுக்கு என்னவோ, வரக் கூடாத வியாதி வந்து விட்டதைப் போல அவன் மனைவி, தனது ஸ்தூல சரீரத்தையும் பொருட்படுத்தாமல் குலுங்கி அழ, அவளை சமாதானப்படுத்திவிட்டு, டாக்டருக்கு போன் செய்து, அவரிடம் நேரம் வாங்கிக் கொண்டு... மாமனாரை விழுந்து சேவித்து,

''ஒண்ணுமில்லே. பயப்படாதீங்க. ஊர்லே இருக்கற அத்தனை டாக்டர்களும் நம்ம பாக்கெட்லேதான்... இதோ, போயிட்டு, மதியானம் மூணு மணிக்கு 'டாண்'னு வந்துடறேன். நீங்க ஒரு பிடி சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுங்க. நான் இருக்கறப்போ எதுக்குக் கவலை...''

இப்படி பரிவாய், பணிவாய் பேசி, விடை பெற்று மறுபடியும் தேஜா வீட்டுக்குப் பறந்தான் அவன்...

அங்கே-

அவன் இல்லாத சமயத்தில் ஒரு புயலே உருவாகியிருந்தது.

விக்டர், கையைப் பிசைந்து கொண்டு உட்கார்ந்திருந்தார். இவனைக் கண்டதும் அழமாட்டாத குறை...

''விநாயக்... எங்கேப்பா போயிட்டே... இத்தனை நேரம் நானும், தேஜாவும் தவிச்சுப் போயிட்டோம். உன் வீட்டுக்கு போன் செஞ்சா ஒரே எங்கேஜ்டு டோன்...''

விநாயக்குக்கு அப்பொழுதுதான் ஞாபகம் வந்தது. தன் வீட்டுக்குள் நுழைந்த போதே மூத்த மச்சினன், தொலைபேசியும் கையுமாய் அலைந்து கொண்டிருந்தது.

''செல்லுலார் இருந்ததே... அதையும் ஆஃப் பண்ணி வச்சிட்டியாப்பா?''

எரிகிற தீயில எண்ணெயை ஊற்றுகிற மாதிரி விக்டரின் கேள்வி.

''என்ன சார் நடந்தது..?''

''ஏதோ ஒரு கூரியர் வந்துச்சப்பா. நான்தான் கையெழுத்துப் போட்டு வாங்கினேன். அதுக்கு அரை மணி நேரம் முந்திதான் தேஜாவே இறங்கி, கீழே வந்தா, 'நீ எங்கே'யின்னு கேட்டா. இப்ப வந்துருவாருன்னு...''

இந்த இடத்தில் சற்று நிறுத்தி, ஏக்கப் பெருமூச்சுடன் தொடர்ந்தார் விக்டர்.

''இத்தனை வருசத்துக்கு அப்புறமா இன்னிக்குத்தாம்பா தேஜாவோட அரைமணி நேரம் போல மனசு விட்டுப் பேசற சந்தர்ப்பம் கிடைச்சது. எல்லாத்தையும் கொட்டிட்டேன். அத்தனையையும் பொறுமையா சிரிச்சிட்டே கேட்டுகிட்டா...''

"........"

"'நீங்க சொல்றது எல்லாம் சரிதான். ஆனா, எனக்கு ஏற்கனவே கல்யாணமாகி, வளர்ந்த குழந்தையும் இருக்குன்னு வச்சுக்குங்க. என்ன செய்வீங்க'ன்னு கேட்டா, ஒரு நிமிஷம் ஆடிப் போயிட்டேம்மா. அப்புறம்தான் இது சும்மாவாச்சும் நம்மை ஆழம் பார்க்கறதுன்னு புரிஞ்சுகிட்டு, 'இருந்தாத்தான் என்ன... புருஷன்கிட்ட இருந்து சட்டப்பூர்வமா விலகியிருந்தியானா உன் குழந்தையோட உன்னை ஏத்துக்கத் தயார்'னு சொன்னேன். வாய் விட்டு சிரிச்சாப்பா... என் கண்ணே பட்டுடுச்சு போல... பாழாப் போன கூரியர் வந்து, அத்தனையும் கெடுத்துடுச்சு. பிரிச்சு, படிச்சுப் பார்த்தா... உனக்கு போன் போட்டுப் பேச முயற்சி செஞ்சா... முடியலே... அழுதுட்டே மாடிக்குப் ஓடிட்டா..."

விநாயக், அதற்கு மேலும் அங்கே நிற்காமல் மேலே ஓடினான். அதே சமயத்தில் விக்டரின் தோளிலும் தட்டி, சொல்லி விட்டே போனான்.

"சார்! அவளே ஒரு குழந்தை. அவளுக்கு ஒரு குழந்தையாமா..? இதையெல்லாம் நம்பாதீங்க... என்ன..."

"சேச்சே..."

"இங்கே என்கிட்ட சொன்ன மாதிரி வெளிலே யார்கிட்டேயும் மூச்சு விடாதீங்க. பத்திரிகைக்காரன் காதுல செய்தி விழுந்தது... அவ்வளவுதான். நாஸ்தி பண்ணிடுவானுங்க..."

"யூ ஆர் கரெக்ட். பாவம் என்னவோ என்கிட்ட விளையாட்டாப் பேசினா... எல்லார்கிட்டேயும் அவளாலே இப்படிப் பேச முடியுமா... ஆனா... அந்த கூரியர் லெட்டராலே என்ன செய்தி இருக்கும்னு நினைக்கறே விநாயக்...? ஏன் கேட்கறேன்னா, என் மனசு 'படபட'ன்னு அடிச்சுக்குது..."

"கவலைப்படாதீங்க. லண்டன்லே அவங்க அம்மா இருக்காங்கன்னு சொன்னேனில்ல? அவங்களுக்கு உடம்பு சரியில்லாமப் போயிருக்கும்..."

சமாளிக்க முயன்றான் அவன். விடுவதாயில்லை விக்டர்.

"இல்லே விநாயக்... கூரியர் ஹைதராபாத்லே இருந்து வந்திருக்கு..."

"அப்படியா... யாராவது தெலுங்கு ஹீரோ மணமேடையைப் போட்டுட்டாங்களோ என்னவோ... யாரு... என்.டி.ஆர். கூட எப்பவோ போயாச்சே... மிஸ்டர் விக்டர்... நீங்க என்ன பண்றீங்க... இதுக்கு மேல தலையைப் பிச்சுக்காம நேரே நீங்க தங்கியிருக்கற ஓட்டலுக்குப் போய் ஒரு பெக் விஸ்கி அடிச்சிட்டுப் படுங்க. நானே உங்களுக்கு சாயந்திரம் போன் செய்யறேன்."

விநாயக், நிற்காமல் மாடிப் படிகளில் தாவி ஏறியபடியேதான் சொன்னான். விக்டர், மனசே இல்லாமல் நகர்ந்தார்.

மாடியில்–

தேஜாவின் அறை அலங்கோலமாகக் கிடந்தது. கைக்குக் கிடைத்த துணிகளை ஒரு சூட்கேஸில் திணித்துக் கொண்டிருந்தாள் அவள்.

"என்ன தேஜா இது..."

அவள் திமிர்ந்து பார்த்தாள். விழிகள் அனலாய் சிவந்திருந்தது. கண்ணில் கண்ணீர், வற்றாமல் வழிந்து கொண்டே இருந்தது.

"இதப் பாரு..."

அவள், தன் கையிலிருந்த கடிதத்தை விநாயக்கின் முகத்தின் மீதே



விட்டெறிந்தாள்.

இவள் இப்படி கையில் கிடைப்பதை விட்டெறிவதும், அவன் லாவகமாய் கையை உயர்த்திப் பிடிப்பதும் வழக்கமாய் நடப்பதுதான்.

"என்னது.. உங்க மாமியார் பூட்டாங்களா?"

அவன், தனக்குள் கேட்டுக் கொண்டே, கடிதத்தைப் பிரித்துப் படித்தான். பின்பு, 'கடகட' வென்று சிரித்தான்.

"என் தேஜா, உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? பொண்ணுக்கு கல்யாணம். அதுவும் உன் நாத்தனார் தன் பையனுக்கே கட்டி வைக்கறாங்க. நிச்சயதாம்பூலம் புதன்கிழமை. பொண்ணுக்கு அம்மாவா, லட்சணமா சீர் செனத்தி அனுப்பி வையின்னு எழுதியிருக்காங்க. இதுல என்ன தப்பு? நிச்சயதார்த்தம் எத்தனைநாள்? ஆடம்பரமாச் செய்யட்டுமே... ரெண்டுலட்சம் போதுமா... 'செக்'கை வெட்டு. நான் அவங்க பேருக்கு அனுப்பி வச்சுடறேன்... இதுக்காகவா அழுதே... நல்ல பொம்பிளை போ... விக்டர் வேற... பயந்தே போயிட்டாரு..."

அவனது வார்த்தைகளைக் கேட்டபடி, தனது பெட்டியை இழுத்து மூடிய தேஜா, உடை அலமாரியிலிருந்து ஒரு கறுப்பு பர்தா உடையை எடுத்து மாட்டிக் கொண்டாள்.

"விநாயக், உனக்கு இது பெரிய விஷயமா இல்லாம இருக்கலாம். ஆனா, எனக்கு அப்படியில்லே. என் பொண்ணோட எதிர்காலம் என்னை மாதிரி சீரழியக் கூடாது... இப்பவே போய் இதைத் தடுத்து நிறுத்தணும்..."

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?"

விநாயக் அதட்டினான்.

"இன்னிக்கு சாயந்திரமே விஜயவாடா ஷூட்டிங் இருக்கு. நாளைக்கும், நாளை மறுநாளும் தென்காசிப் பக்கம்... நேத்திக்கு சண்டை போட்டு, மிச்ச பணத்தை வாங்கியிருக்கோம். இப்ப நம்ம குடுமி, அவங்க கையிலே... தெரியுமில்லே?"

"எல்லாத்தையும் தூக்கிக் கடாசு விநாயக். எனக்கு என் பொண்ணுதான் முக்கியம். வேணும்னா, நேத்து வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுத்துடு. 'குளோசப்' இல்லாத ஃபிரேமுக்கு எல்லாம் 'டூப்' போடச் சொல்லு."

"நோ... நான் உன்னை இப்ப விடமாட்டேன் தேஜா. இப்ப நீ அங்கே போய் செய்யப் போற கலாட்டாவுல உன் இமேஜ் அத்தனையும் சரியப் போறது... மேலும் கத்தி, அழுது டாக்டர் பாவனா சொன்ன அட்வைஸ் எல்லாத்தையும் காத்துல பறக்க விடப்போறே நீ..."

"வேணாம்... எனக்கு இந்த முகமே வேணாம்... ஒரு பிளேடு கொண்டா... கிழிச்சுக்கறேன்... இந்த முகம் இருக்கறதொட்டுத்தானே என் வாழ்க்கையே வீணாப் போச்சு... போடா... நீயும் உன் சினிமாவும்.. என் குழந்தை அங்கே எப்படி தவிக்கிறாளோ..."

அவள் சீறிப் பாய்ந்தாள். கையில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு, காற்றை விடவும் வேகமாய் படியில் இறங்கினாள். ஷெட்டில் வரிசையாய் நின்று கொண்டிருந்த காரில் ஒன்றை சாவி போட்டுத் திறந்து உட்கார்ந்தாள். விநாயக் ஓடி வருவதற்குள் – வாசல் கூர்க்கா சல்யூட் அடிப்பதற்குள் காணாமலேயே போனாள்.

இரவு பத்து மணி வரையில் படப்பிடிப்பு குழுவினருக்கு பதில் சொல்வதே வேலையாகிப் போய்விட்டது விநாயகுக்கு.

''என்ன சார் செய்ய... அவசரமா ட்ராங்கால் வந்து...''

ஒரே பல்லவியை அவன் பாடிக் கொண்டிருக்கும் போதே வாசல் கூர்க்கா உள்ளே ஓடி வந்து, அந்த மகிழ்ச்சிகரமான தகவலைச் சொன்னான்.

''மேடம் வந்துட்டாங்க... ஆனா ஆட்டோவிலேயே உட்கார்ந்துட்டிருக்காங்க சாப்...''

விநாயக், கூர்க்காவைத் தள்ளிக் கொண்டு வாசலுக்கு ஓடினான்.

---

# 6

---

''நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டுல வச்சா அது வாலைக் குழைச்சிட்டு எச்சி இலை திங்கத்தான் போகும்னு பெரியவங்க தெரியாமயா சொல்லியிருக்காங்க... உன் பொண்ணை, நான் வயித்துல சுமக்காத குறையா வளர்த்தாலும், அவளுக்கு கடைசியில் உன்னோட ஓடு காலி புத்திதான் வந்திருக்கு. 'பொண்ணு எங்கே'யின்னு என்னை வந்து கேட்டா... நான் எங்கே தலைப்புலயா முடிஞ்சு வச்சிருக்கேன்...''

வரலட்சுமி, வானத்துக்கும் பூமிக்குமாய் குதிக்க, தேஜஸ்ரீ அப்படியே மலைத்து உட்கார்ந்து விட்டாள்.

அவள் மட்டுமல்ல, ராஜப்பாவும் தான்...

இது நாள் வரையில் எனது கனவுக் கன்னியாக விளங்கிய, தேஜஸ்ரீயின் மகளா சுமித்ரா?''

'அய்யோ.... இது முன்னாலேயே தெரியாமப் போச்சே... தெரிஞ்சிருந்தா சுமிகிட்ட அத்தனை முரட்டுத்தனமா நடந்துட்டிருக்க மாட்டேனே... தேஜஸ்ரீ என் மாமியாராக கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணுமே... இந்த சந்தோஷத்துக்கு முன்னாலே பணமாவது, பங்களாவாவது...'

அவன் வைத்த கண் வாங்காமல் தேஜாவையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் கணமே ஓடிப்போய் தனது நண்பர்களிடமெல்லாம் சொல்லி விட வேண்டும் என்று பரபரத்துப் போனான்.

இத்தகைய தனது பக்திக்குரிய தேஜஸ்ரீயை தன் அம்மா, கொஞ்சமும் மதிக்காமல் கத்துவது அவனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அதை, அந்தக் கணமே, தன் தாயிடம் காட்டவும் தயங்கவில்லை அவன்.

''அம்மா, எதுக்காக கத்தறே? இப்ப என்ன நடந்து போச்சு? என்னைக் கட்டிக்க பிடிக்காம அவ ஒண்ணும் ஓடிப் போகலே. உன்னோட பிடுங்கல் தாங்காமத் தான் அவ ஓடிப் போனா... அவளுக்கு மேலே படிக்கணும்னு ஆசை. எனக்கும் அதுல ஆட்சேபணையே இல்லே. எனக்கு வராத படிப்பு, என் பொண்டாட்டிக்காவது வந்தா சந்தோஷம்தானே... நீதான் அவளோட படிப்பை நிறுத்தி, வீட்டோட உட்கார வச்சே...''



வரலட்சுமி திடுக்கிட்டாள். தனது பிரியமான நடிகையைப் பார்த்ததும், அவள்தான், தான் மணக்கப்போகும் சுமித்ராவைப் பெற்ற தாய் என்பது தெரிந்ததும், அவன் இப்படி அந்தர் பல்டி அடித்ததைக் கல் நெஞ்சக்காரியான அவளாலேயே தாங்க முடியவில்லை.

அரசியல்வாதியை விடவும் மோசமாக அல்லவா கட்சி மாறுகிறான் இவன்...

வரலட்சுமி, அப்படியே தரையில் உட்கார்ந்து விஸ்தாரமாய் அழத்தொடங்கினாள்.

''ஏய் கிழவி... உன் பேரன் சொல்றதைக் கேட்டியா... அன்னிக்கே நான் உன்கிட்ட என்ன சொன்னேன்... ஆத்தா, நாய் வித்த காசு குரைக்காதுன்னு ஒரு பேச்சுக்கு சொல்லுவாங்க. ஆனா, உன் மருமக, சினிமாவுல உடம்பைக் காட்டிப் பொழைக்கற காசு... எனக்கு வேண்டாம்... இப்பவே, என் மகனையும், புருஷனையும் அழைச்சிட்டு தனியா போய் கஞ்சியோ, கூழோ அட, சாயமோ காய்ச்சிக் குடிக்கிறோம்னு சொன்னேனில்லே... அப்ப, நீ என்ன சொன்னே... 'குழந்தையைப் பார்த்து வளர்க்கத் துணை வேணும். நாளைக்கு அவளுக்குன்னு எனக்கப்புறம் வேற யார் இருக்காங்க'ன்னு கேட்டே இல்லே? இப்பப் பார்த்தியா... புதுசா ஒரு பட்டர் போட்ட மூஞ்சியப் பார்த்தவுடனே இந்தத் தடியன் பல்டியடிப் பேசறான்...''

தேஜஸ்ரீ, வரலட்சுமியின் அழுகையை எல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவே இல்லை. அவளது கண்கள், மகளின் புகைப்படத்தையாவது பார்க்க மாட்டோமா என, நாலாபுறமும் சுழன்றன...

இத்தனை நாளும் விநாயக்குக்கும், மற்றவர்களுக்கும் கட்டளை பிறப்பித்தே பழக்கமான சுபாவம் இங்கேயும் தொடர்ந்தது.

''என் தம்பி, போலீஸ்லே சொல்லியாச்சா?''

தேஜஸ்ரீ, ராஜப்பாவைக் கேட்க, அதையே பெரிய பாக்கியமாக நினைத்த அவனும், 'இதோ' என்று காலில் செருப்பை மாட்டிக் கொள்ள -

இது நேரம் வரையில் இருட்டு மூலையோடு கிடந்த காசிம்மா, தனது பலத்தையெல்லாம் ஒன்று திரட்டிக் கத்தினாள்.

''செல்லாத்தா, உனக்கு மூளையிருக்கா?''

தேஜஸ்ரீ மட்டுமில்லை, அந்த வீட்டிலிருந்த மற்ற மூவருமே கிழவியின் இந்த அதட்டலை, கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

''வயசுப் பொண்ணைக் காணோம்னு போலீஸ்லே சொல்றது அவமானமில்லையா? அதுவும் உன் பொண்ணுன்னு தெரிஞ்சா ஊரும், உலகமும் சும்மா இருக்குமா? உனக்கு ஒரு குழந்தை இருக்கறதே யாருக்கும் தெரியாது. அது இப்ப குமரியாகி கல்யாண சமயத்துல வீட்டை விட்டு ஓடிச்சுன்னா... கேட்கறவங்க சும்மா கூட சிரிக்க மாட்டாங்க...''

தேஜா, ஓடிப் போய் தன் மாமியாரைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

அதைக் காணச் சகியாத வரலட்சுமி, உட்கார்ந்த இடத்திலிருந்தே கத்தினாள்.

''எல்லாம் இந்தக் கிழவியால வந்தது செல்லாத்தா... வயசுக்கு வந்த பொண்ணை அடக்கவொடுக்கமா வளர்க்காம, காட்டாறு மாதிரி வளர்த்தா... இப்ப, உனக்கு உபதேசம் செய்யறா...''

காசிம்மா, மருமகளை உச்சந்தலையிலிருந்து ஒருமுறை தடவி கண்ணீர்

சொரிந்தாள்.

''பாவி நான்... இத்தனை வருசத்துக்கு அப்புறம் வந்திருக்கே. உன்னை, கண்ணாரப் பார்க்கக் கொடுத்து வைக்கலையே...''

''ஆனா, சும்மா சொல்லக்கூடாது... சுமித்ரா அப்படியே உங்களை மாதிரிதான் இருப்பா...''

தேஜாவின் பின்னாலேயே ஓட்டிக் கொண்டு வந்த ராஜப்பாவின் குரல், காசிம்மாவை கடுப்படையச் செய்கிறது.

''செல்லாத்தா, உன்கிட்ட நான் எவ்வளவோ பேச வேண்டியிருக்கு... எல்லாரையும் வெளில தள்ளி, கதவைத் தாழ்ப்பாள் போடு...''

''ஏய் கிழவி, இந்தக் கொழுப்புதானே வேணாங்கறது...''

ராஜப்பா, காசிம்மாவைத் திட்டிக் கொண்டே வெளியேறினான். தேஜஸ்ரீ, கதவை இறுகத் தாழிட்டு விட்டு வந்தாள். மாமியாரைப் பார்க்கையிலேயே அழுகை பொங்கிப் பொங்கி வந்தது.

''அத்தை.. இத்தனை தூரம் வளர்த்து, கடைசில கோட்டை விட்டுட்டீங்களே...''

''இந்தா, இப்படி பக்கத்துல வா... சொல்றேன்...''

கிழவி, மருமகளின் கையைப் பிடித்து இழுத்தாள்...

கூடுமான வரையில் குரலைத் தாழ்த்துக் கொண்டுதான் பேசினாள்:

''சுமித்ரா எங்கேயும் போயிடலே செல்லாத்தா... இந்தக் கல்யாணத்துல இருந்து அவளைக் காப்பாத்த, நான் தான் அவளைப் பட்டணத்துக்கு அனுப்பி வச்சேன்...''

''என்னது?''

அயர்ந்து போய் விட்டாள் தேஜஸ்ரீ

''மெட்ராசுக்கா... தனியாப் போய், அவ அங்கே என்ன செய்வா அத்தை... பட்டணம் பொல்லாதது. அதுவும் வயசுப் பொண்ணு தன்னந்தனியாப் போய் நின்னா... அய்யய்யோ.... இப்படி செய்வீங்களா...''

தேஜஸ்ரீ, மார்பில் அறைந்து கொண்டு கதறினாள். காசிம்மாவின் அதட்டல், அந்த வயசுக்கும் அவளைக் கட்டிப் போட்டது.

''கத்தி ஊரைக் கூட்டாதே செல்லாத்தா. உன்னை எப்படி அருணகிரி ரயிலேத்தி விட்டானோ, அப்படித்தான்... இவளையும் அவன்தான்... உன்னை மாதிரி... நீ, வெளில வர்றப்ப எல்லாம் கறுப்பு பர்தா போட்டுப்பேன்னு கேள்விப்பட்டிருக்கேன்... அது மாதிரி, ஒரு பர்தாவை வாங்கிப் போட்டுக்கிட்டுத்தான் கிளம்பச் சொல்லியிருக்கேன், கையில தேவையான பணம்... உன் விலாசம்.... எல்லாம் கொடுத்துத்தான் அனுப்பியிருக்கேன். இந் நேரம் அவ உன் வீட்டுல இருப்பா. எப்படிங்கறியா? முந்தாநாள் சாயந்திரமே ரயிலேத்தி விட்டாச்சு. நேத்து சாயந்திரம் இல்லாட்டி ராத்திரி உன் வீட்டுல... அதெல்லாம் அவ புத்திசாலி. படிச்சவ.. என்ன, உன் சாயலாவே இருக்கறதா எல்லாரும் சொல்றாங்கன்னு நான்தான் பர்தா போட்டுட்டு கிளம்பச் சொன்னேன்.... நீ இங்கே பேசிட்டிருக்கறதை விட உடனே கிளம்பறது நல்லது...''

வார்த்தை வராமல் வைத்த கண் வாங்காமல், காசிம்மாவையே பார்த்துக்



கொண்டிருந்த தேஜா, இரு கைகளாலும் அவளது சுருக்கம் படர்ந்த முகத்தைப் பற்றி, இரு கன்னங்களிலும் மாறி, மாறி முத்தமிட்டாள்.

''அத்தை... நீங்கதான் எனக்கு தெய்வம்...''

''அதெல்லாம் அப்புறம். முதல்லே நீ கிளம்பு...''

தேஜஸ்ரீ புது தெம்பு வந்தவளாய் எழுந்து கதவைத் திறந்தாள். அது நேரம் வரையில கதவருகில காதை வைத்து, ஒட்டுக் கேட்க மாபெரும் முயற்சி செய்தும் தோல்வியே கண்ட ராஜப்பா, அசட்டுச் சிரிப்புடன் பின் வாங்கினான்.

''சரி... சரி... சுமித்ரா எங்கே இருந்தாலும் நல்லாயிருக்கணும். அதுதான் எனக்கு வேண்டியது...''

தேஜஸ்ரீ, அவனது வார்த்தைகளைக் காதில் வாங்காமலேயே வாசல் சுமியின் எதிரில் வந்து நின்றாள்.

''நான் கிளம்பறேன்...''

''என் வயித்துல பொறந்த பொண்ணை விடவும் ஒசத்தியா வளர்த்தேன்...''

அவள் இன்னும் என்னென்னவோ சொல்லி அழுதாள்... தேஜா, வாசலுக்குப் போக, அங்கே திண்ணையில் பட்டுநூம் கையுமாய அருணகிரி.

தேஜா, அழுகையில் துடிக்கும் உதடுகளை மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, கை குவித்தாள்...

அவன், 'இதெல்லாம் எதற்கு,' என்பது போல கை வீசினான்.

அவள் காரில் ஏறி அமர, பின்னாலேயே ஓடி வந்த ராஜப்பா மட்டும், காரை கதவைப் பிடித்தபடி கெஞ்சினான்.

''நான்... சுமி மேல உயிரையே வச்சிருக்கேன்... அவ நிச்சயம் பட்டணத்துக்குத்தான் போயிருப்பா... நானும் உங்க கூட வந்து... ப்ளீஸ்.... அவ இல்லாம நான் உயிர் வாழவே முடியாது...''

''நகர்ந்து நில்லுப்பா. என் பொண்ணும், நீயில்லாம உயிர் வாழ முடியாதுன்னு சொன்னா கண்டிப்பா உனக்குத் தகவல் தெரிவிக்கறேன். அப்ப, நான் வரட்டுமா?''

அவ்வளவுதான்.

கார், புழுதி பறக்கக் கிளம்பியது.

என்னவோ பேசி விட்டு கிளம்பி விட்டாளே தவிர, தேஜா மிகவும் சோர்ந்து போயிருந்தாள்.

சென்னையிலிருந்து ஹைதராபாத்... அதுவும் காரிலேயே...

ஏதோ, வீட்டிலிருந்து மாம்பலம், மெரீனா கடற்கரை இப்படி வண்டி ஓட்டித்தான் பழக்கம் அவளுக்கு... மகளின் திருமணத்தை நிறுத்தியே தீர வேண்டும் என்கிற வெறியில், பசி, தாகம் பாராது வண்டியை ஓட்டி வந்து விட்டாள்.

முழுசாய் ஒன்றரை நாள்...

இதற்குள் சுமித்ரா, வீட்டுக்கு வந்து சேர்ந்திருக்க வேண்டுமே...

இந்தக் கவலையும், இது வரையில் இல்லாத அளவுக்கு சிரமம் மேற்கொண்டு காரைச் செலுத்தியதால் ஏற்பட்ட சோர்வும் அவளைப் பெரிதும் பாதித்தன.

எப்படி வந்து சேர்ந்தாள்... அதை நினைத்தால் இன்னுமுமே அவளுக்கு நம்ப

முடியாததாகத்தான் இருந்தது.

கார் உள்ளே நுழையும் போதே கூர்க்கா, குடும்பமாய் சல்யூட் அடித்தான்...

'இது என்ன... ரெண்டு நாள் முந்தி சமைஸ்லியம்மா, பாதி ராத்திரியில ஆட்டோவுல வந்து இறங்கினாங்க. அப்புறம் விநாயக் சாப கூட வண்டியில ரெண்டு நாளா வெளியில போயிட்டு வர்றாங்க... இப்ப காரை எடுத்திட்டு திரும்பி வர்றாங்களே...'

அவன் நினைத்தது சரிதான்.

தேஜா வீட்டுக்குள் நுழைந்தபோது, விநாயக்கோ, சுமித்ராவோ அங்கே இல்லை...

அவள் நேராக மாடிக்குப் போய், களைப்பு தீரக் குளித்து விட்டு, அறையிலிருந்த இண்டர்காம் வழியே சமையலறைக்கு போன் போட்டுப் பேசினாள்.

''அய்யர், விநாயக் எங்கே?''

''விடிகாலையில உங்க கூடத்தானேம்மா ஷூட்டிங்குக்கு வந்தாங்க...''

''ஷூட்டிங்கா... நான் இப்பத்தானே...''

ஏதோ சொல்ல வந்தவளை, எதுவும் பேச விடாமல் தடுத்தது அறிவு...

'இரு... அவசரப்படாதே. ஒரு வேளை, சுமித்ரா இங்கே வந்து, என்னை சந்திக்க விரும்பாம, வேற எங்கேயாவது தங்கியிருந்தாளா?'

அவள் நாசூக்காய், சமையல்காரரையே விசாரித்தாள்.

''அப்புறம்... வீட்டுல என்ன விசேஷம்?''

''என்னம்மா... காலையில எட்டு மணிக்கு பார்த்திருக்கீங்க... இப்ப பகல் ரெண்டாகுது... அதுக்குள்ள என்னத்த விசேஷம்... காலம்பற ஏழு மணிக்கு அந்த சிங்கப்பூர் அய்யா வந்திருக்கார்... நீங்க பார்த்தீங்க இல்லே... நீங்களும், விநாயக் சாரும் காருல ஏறிப் போறதைப் பார்த்துட்டே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தார். அப்புறம் போயிட்டார்...''

தேஜாவுக்கு நெருப்பில் குதித்தாற்போல உடம்பும், மனசும் சேர்ந்து எரிந்தது.

'பாவி... படுபாவி... ஏற்கனவே ஷூட்டிங் மீதி இருக்குன்னு அடிச்சிட்டிருந்தான்... இந்த நேரத்துல எனக்குப் பதிலா சுமியை...'

'அவன் எது வேணுமானாலும் செய்வான்... கடங்காரன்...'

தனது அறைக் கதவைத் தாழிட்டுக் கொண்டு, ஆத்திரம் தீர, கையில் கிடைத்த பொருளை எல்லாம் தூக்கிப் போட்டு உடைத்தாள். வெகு நேரம் வாய் விட்டு அழுதாள்.

இண்டர்காம் ஒலிக்கும் வரையில் பித்துப் பிடித்தாற்போல உட்கார்ந்திருந்தாள்...

வெகு நேரம் வரையில் டெலிபோன் ரிசீவரை எடுக்கவே இல்லை அவள்... பிறகு என்ன தோன்றியதோ... சாவி கொடுத்த பொம்மை போல செயல்பட்டாள்... விநாயக்தான்...

''ஹலோ... எப்ப வந்தே... நான் சொன்ன மாதிரி அநாவசிய அலைச்சல்தானே?''

''சுமி எங்கே?''



''பத்திரமா இருக்கா... ஃபர்ஸ்ட் கிளாஸ் ஃபர்ஃபார்மென்ஸ். தாய் எட்டடி பாய்ஞ்சா, குட்டி பதினாறடி பாயும்னு தெரியாமலா சொல்லியிருக்காங்க பெரியவங்க...''

''இப்ப அவ எங்கே?''

''இதோ, மாடிக்கு வந்துட்டே இருக்கா... தாயும், மகளும் முதல் முறையாப் பார்க்கப் போறீங்க... நடுவுல நான் எதுக்கு? நான் கொஞ்சம் நிதானமா வர்றேன். அப்பப்பா... என்ன டென்ஷன்... என்ன டென்ஷன்...''

தேஜா, அவனது வார்த்தைகளோடு சேர்த்து ரிசீவரைத் தூக்கியடித்தாள். ஓடிப் போய் கதவைத் திறந்தாள்.

கறுப்பு பார்டருடன் உள்ளே நுழைந்தவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'என் குழந்தை... என் குழந்தை...'

நெஞ்சு அடித்துக் கொண்டது. இன்னமும் கூட மார்பு தன் குழந்தையின் செப்பு வாய்க்காக ஏங்கியது.

''சுமித்ரா...''

அவள் நெகிழ்ச்சியுடன் அழைக்க சுமித்ரா, முகத்திரையைச் 'சட்'டென விலக்கினாள். அதே சமயம் அறைக் கதவை முன் ஜாக்கிரதையாய்த் தாழிட்டு, கதவின் மீதே சாய்ந்தபடி தாயை உறுத்துப் பார்த்தாள்.

தேஜஸ்ரீ ஒரு கணம் அப்படியே மலைத்து நின்று விட்டாள்.

'இது என்ன... இத்தனை அழகு ஆபத்தாச்சே...'

'அதனாலத்தான், வந்தவுடனே கோழிச் குஞ்சை அமுக்கறாப்பல அமுக்கிட்டான் அந்த விநாயக்...'

மனசு கதறியது. ஆனால் மௌனம்தான் அங்கே ஆட்சி செய்தது.

சுமித்ராதான் அந்த நிசப்தத்தைக் கலைத்தாள்.

''நீதான் என்னைப் பெத்தவளா?''

''.........''

''கேட்கறேனில்லே? நீதான் என்னை நிசமாவே பத்து மாசம் வயித்துல சுமந்து பெத்தியா...''

''என் கண்ணம்மா... உன் கோபம் எனக்குப் புரியுதுடா... நிச்சயமா உன் வெறுப்பும், எரிச்சலும் நியாயமானதுதான்... ஆனா... ஆனா... அதை நான் வேணும்னு செய்யலைம்மா... பாட்டி எல்லாம் சொல்லியிருப்பாங்களே...''

இதைச் சொல்லும் போதே தேஜாவுக்கு மறுபடியும் அழுகை பொங்கிக் கொண்டு வந்தது.

ஆனால் சுமித்ரா இதையெல்லாம் கண்டு கொள்ளாமலேயே வார்த்தைகளை வீசினாள்.

''அந்த சமயத்துல நீ உன்னை மட்டும் தான் நினைச்சுப் பார்த்தே இல்லே... சம்பாதிச்ச காசை - நாய்க்கு எலும்புத் துண்டைப் போடற மாதிரி, வீசிஎறிஞ்சு போதும்னு அப்புறம் ஒரு முடிவுக்கு வந்துட்டே... இல்லே? எப்பவும் பதினெட்டு வயசு சின்னப் பொண்ணா சினிமா உலகத்துல வலம் வர்றதுக்கு, குழந்தை ஒரு முட்டுக்கட்டைதானே... இந்த இருபது வருசத்துல என் நிலைமை என்னன்னு

உனக்குத் தெரியுமா?''

''..................''

''உன்னை சினிமாவுல, காசை வாங்கிட்டு, வெறும் நடிப்புக்காக இல்லை தூக்கறான், கற்பழிக்கிறான்... அங்கே அத்தை மகன் என்னை தினமும் தூக்குறான். வார்த்தையாலேயே மானபங்கப்படுத்தறான். தினம் செத்து செத்துப் பிழைச்சிட்டிருந்தேன்...''

''என் கண்ணே... மேற்கொண்டு எதுவும் பேசாதே... என்னால தாங்க முடியாது...''

தேஜா, தன் தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

''அப்பவே உன்னையும் நான் என் கூட அழைச்சிட்டு வந்திருக்கணும். அத்தைதான் 'சின்னக் குழந்தையும் உன்கூட சேர்ந்து பட்டினி கிடக்கணுமா, நான் பார்த்துக்கறேன்'னாங்க... இந்த முடிவு நானா எடுத்ததில்லே தாயே. நான் தலையில கட்டுன நடிக்கணும்னு ஒரு நாள் கூட ஆசைப்பட்டதில்லே. என் தலையில இப்படி எழுதிட்டாம்மா. நான் செஞ்ச தப்பை நினைச்சு அழுதா நானில்லே...''

தேஜா, மகளைக் கட்டியணைத்தாள். அவள் திமிறத் திமிற அவளது கன்னங்களில் முத்தமிட்டாள்.

சுமித்ரா-

தாயைச் சந்திக்கும் முன்பு கையில் சூலம் ஏந்தாத பத்ரகாளியாகத்தான் இருந்தாள். ஆனால் அம்மா - நாடே கொண்டாடிக் கொண்டிருக்கிற திரையுலகத் தாரகை தேஜஸ்ரீ - ஓர் அப்பாவிப் பெண்ணாய் 'ஓ' வென அழுத போது -

அதில் நடிப்பில்லை என்பது மிகத் தெளிவாகப் புரிந்தது. புரிந்த பின், தாயின் மடியில் தலையைப் பதித்தபடியே, தழுதழுத்த குரலில் சொன்னாள்.

''நீ பாட்டுக்கு கிளம்பிட்டியாம். உன் செகரட்டரி, புரடியூசருக்கும், டைரக்டருக்கும் என்ன பதிலைச் சொல்றதுன்னு தெரியாம முழிச்சிட்டிருந்தார். அந்த சமயம் பார்த்துத்தான் நான் வந்தேன்... எப்படியாவது இந்த நிலைமையில இருந்து அம்மாவையும் என்னையும் நீதான் காப்பாத்தணும்னு காலுல விழுந்து கும்பிட்டு...''

தேஜஸ்ரீ, மகளின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

எத்தனை படித்துத்தான் என்ன... இந்த வயசுக்கே உரிய குழந்தைத்தனம், அவளிடமும் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு கவலையுடன் பெருமூச்செறிந்தாள்.

''சுமித்ரா, இந்த இருபது வருசமும், நீ அத்தைகிட்டயும், அத்தைமகன்கிட்டயும் வாங்கிக் கட்டிக் கொண்ட வசவும், தொல்லையும் ஒண்ணுமே இல்லே. இந்த விநாயக் உன்னை ஒரு வழி பண்ணிடுவான். நீதான் ஜாக்கிரதையா இருக்கணும்... உன்னை என்னன்னு சொல்லி, புரடியூசர்கிட்ட அறிமுகப்படுத்தினான்?''

''என்னை எதுவுமே பேசாதேன்னு சொல்லிட்டாரு. டைரக்டர் சொன்னபடி கேளுன்னாரு. 'நீதான் இப்ப தேஜா... யாரும் கண்டுபிடிக்க முடியாது. நீயா வாயைத் திறந்து, எதையாவது பேசி, வம்புல மாட்டி விட்டுடாதே'ன்னாரு...''

''..........''



''முதல்லே எனக்குப் பிடிக்கத்தான் இல்லே. சின்ன வயசுல இருந்து, எனக்கு சினிமாவைப் பிடிக்காது. முக்கியமா உன்னைப் பிடிக்காது. காரணம், என்னைப் பார்க்கறவங்க எல்லாரும் அசல், அசுக, நான் தேஜஸ்ரீ போல இருக்கேன்னு சொன்னதுதான். விநாயக் சொன்னப்ப, நான் காறித் துப்பினேன். ஆனா... இன்னிக்கு மட்டும் ஷூட்டிங் நடக்கலைன்னா உங்கம்மாவை ஆளு வச்சு கொன்னுடுவேன் அந்த டைரக்டர்னு சொன்னப்ப... என்னால தாங்க முடியலே...''

சுமித்ராவை இறுக்க கட்டிக் கொண்ட அதே சமயம் அறைக் கதவு தட்டப்பட்டது.

சுமித்ரா குளியலறைக்குள் பாய, தேஜா கதவைத் திறந்தாள்.

விநாயக், முகத்தில வெற்றிக் களிப்புடன் நின்றிருந்தான்.

## 7

தேஜஸ்ரீ, படப்பிடிப்புக்காக வெளியே வரும்போது, அவள் புறப்பட்டுச் செல்லும் அந்தக் காரையாவது தரிசனம் செய்யும் பாக்கியம் கிடைக்காதா என்று ஒரு கூட்டம் பங்களா வாசலிலேயே காத்துக் கிடக்கும். ஓரிரண்டு டூரிஸ்ட் பஸ்கள் வேறு... ஆண், பெண் பேதமின்றி மொட்டைத் தலையுடன்...

''அக்கட சூடு... தேஜஸ்ரீகாரு... ரண்டி... ரண்டி...''

கூர்க்காவும், வேலையாட்களும் நயந்தும், மிரட்டியும் அவர்களைக் கலைந்து போகச் சொல்லி, ஓயாமல் கத்திக் கொண்டிருப்பார்கள்.

ஏ.சி. கார் வெளியில் போவதைப் பார்த்தவுடன்தான் அவர்களது ஜென்மமே சாபல்யமானது போல...

ஆனால், இன்று இந்தக் கூட்டத்தின் நடுவே ஒரு வாலிபன் மட்டும், வித்தியாசமாய் கூர்க்காவிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தான்...

அது வேறு யாருமில்லை; ராஜப்பாவேதான்!

எப்பொழுது சுமித்ரா தேஜஸ்ரீயின் மகள் என்பது தெரிந்ததோ - அடுத்த கணமே தீர்மானித்து விட்டான்... ''இனிமே இவளை விடறதில்லே... தேஜஸ்ரீக்கு மாப்பிள்ளைன்னா சும்மாவா... பாவி அம்மா... இதை முன்னாடியே என் சொல்லாம விட்டே...''

அவன் மூர்க்கமாய், தன்னை மறித்த கூர்க்காவிடமும், வேலைக்காரரிடமும் சண்டை போட்டான், வாசல் கேட்டில், குறுக்கே கை வைத்து மறித்து நின்றவனை பிடித்துத் தள்ளி விட்டான்.

''யாருய்யா நீ? என் வீட்டுக்குள்ள என்னை விட மாட்டேன்னு சொல்றது? நான் யார் தெரியுமா... தேஜஸ்ரீயோட நாத்தி மகன்... அவங்க மகளைக் கட்டிக்கப் போற மாப்பிள்ளை... இப்ப விடப் போறியா... இல்லே, அத்தை கிட்ட சொல்லி, உன் சீட்டைக் கிழிக்கட்டுமா?''

வெளியே நின்று வேடிக்கை பார்த்த கூட்டம் 'கொல்'லெனச் சிரித்தது.

''தேஜஸ்ரீ, இவனுக்கு அத்தையாமில்லே?''

''நல்ல வேளை... சித்தப்பான்னு சொல்லலே?''

''ஆசையப் பாரேன்... நானெல்லாம் தேஜூ நமக்குக் கிடைக்க மாட்டாளான்னு ஏங்கிக்கிட்டிருக்கேன்... இந்த ஆளுக்கு அவளோட பொண்ணு வேணுமாமே... டேய்... ஒரு பதினெட்டு வருசம் வெயிட் பண்ணு... எனக்கும் தேஜூவுக்கும் கல்யாணம் முடிஞ்ச கையோட உனக்கு ஒரு பொண்ணைப் பெத்துத் தந்துட்டுத்தான் மறு வேலை...''

''டாய்... எவன்டா அவன்...''

''நீ எவன்டா...''

இந்த அமர்க்களத்தின் நடுவில் ஒரேயொரு நிமிஷம் விநாயக் எட்டிப் பார்த்தான்.

''என்ன இங்கே கலாட்டா?''

''சார்... எவனோ ஒருத்தன்... பைத்தியம்போல... 'தேஜூ எனக்கு அத்தை முறை... அவ பொண்ணைக் கட்டிக்கப் போற மாப்பிள்ளை நான்தான்'னு... காலங்கார்த்தாலே டென்ஷன் பண்ணிட்டிருக்கான்...''

கார் டிரைவர் கழுத்து நரம்பு புடைக்கக் கத்த விநாயக், ராஜப்பாவைப் பார்த்து சிரித்தான்.

''தம்பிக்கு எந்த ஊரு?''

''ஐதராபாத் சார். நான் தேஜஸ்ரீயோட நாத்தனார் மகன். சுமித்ரா இல்லே சுமித்ரா... அவ வந்து எனக்கு...''

''த்சொ... த்சொ... பையன் பார்க்க பிமேசேனை மாதிரி இருக்கான். எந்த ஜென்மத்துப் பாவமோ... மூளை கலங்கிப் போயிருக்கு... அப்பா... சித்த அப்படி நகர்ந்து நில்லு. உன் வருங்கால மாமியார் ஷூட்டிங்குக்குக் கிளம்ப நேரமாச்சு... காரை எடுக்கணும். நகரு... நகரு...''

ராஜப்பா கூட்டத்தோடு பின்னுக்குத் தள்ளப்பட்டான். பங்களாவின் மிகப் பெரிய இரும்பு கேட் திறக்கப்பட - உள்ளிருந்து மெருன் வண்ணத்தில் பென்ஸ் கார்...

ஒரு கணம்... ஒரேயொரு கணம்... காரின் பின் ஸீட் கண்ணாடியை இறக்கி அந்த அழகு தேவதை கூட்டத்தைத் தனது பெரிய விழிகளால் அளந்தாள்.

''அதோ தேஜூ... தேஜஸ்ரீ...''

''தேஜ்... ஐ லவ்யூ...''

மொத்தமான தேஜஸ்ரீ அலைகளிலிருந்து ஒற்றையாய் ராஜப்பாவின் குரல்...

''சுமித்ரா... சுமி...''

காரின் கண்ணாடிக் கதவுகள் சட்டென ஏற்றப்பட்டது.

உள்ளே, பின் ஸீட்டிலேயே அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த விநாயக் மெதுவாக, தெலுங்கில் கேட்டான்.

''உனக்கு தெலுங்கு தெரியுமா?''

''தெரியும்.''

''அப்ப தெலுங்குலேயே பேசு. என்னா, இந்தக் காரை ஓட்டறவனுக்கு தமிழும் இங்கிலீஷும் சரளமாத் தெரியும்.''

அவள், அவனைத் திரும்பிப் பார்த்தாள். விழிகளில் சமுத்திரமாய் கண்ணீர்.



இப்போதும் அவன் தெலுங்கிலேயே கேட்டான்.

''என்ன அழுகை... முறைப் பையனை வாசலிலேயே கதற விட்டுட்டு வர்றோமேன்னா...''

''இல்லே... இன்னும் எத்தனை நாளைக்கு எனக்கு இந்த தண்டனை... நான், என் அம்மாவைப் பார்க்க வந்தேன். எனக்குப் பிடிக்காத கல்யாணத்துல இருந்து தப்பிச்சு வந்தேன். இங்கே... சச், நீயும் ஒரு மனுஷனா...''

''நோ பேபி... உங்கம்மா மாதிரியே இருக்கேன்னுதான் நினைச்சேன். ஆனா, ஆத்திரத்திலேயும், அவசர புத்தியிலேயும் நீ அசல் அப்படியே அவதான். அவளும் இப்படித்தான் குதிப்பா... அப்புறம், என்கிட்ட மன்னிப்பு கேட்டுப்பா...''

''இந்தக் கதையெல்லாம் வேண்டாம். எனக்கு இந்த தொழில் பிடிக்கலே... பிடிக்கலே...''

''இதப்பாரு. உனக்குப் பிடிக்கறதா இல்லையாங்கறது இப்ப கேள்வி இல்லே. சினிமாத் தொழிலுக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. அது ஒண்ணுதான் முக்கியம். உங்கம்மா கிடக்கற நிலைமையைப் பார்த்தே இல்லே? இப்போதைக்கு எழுந்து வர முடியாது. இன்னும் முடிச்சுத் தர வேண்டிய படமே ஆறு இருக்கு. தெலுங்கு. ஒரு மலையாளத்துக்கு அட்வான்ஸ் வாங்கியிருக்கு. இப்ப காலை நீட்டிப் படுத்துட்டா. உனக்காக உங்க அம்மா எத்தனை செஞ்சிருக்கா? அவளுக்காக நீ இதைக் கூட செய்யக் கூடாதா?''

சுமித்ரா, அப்படியே இருக்கையில் சாய்ந்து, கண்களை மூடிக் கொண்டாள். அவளையும் மீறி, கண்ணீர் முத்துக்கள் அவசரமாய் - சரம் சரமாய் கன்னத்தில் இறங்கின.

''அசடு... துக்கமோ, சந்தோஷமோ... நாலு பேர் எதிர்லே காட்டிக்கவே கூடாது. இது சினிமா உலகத்து பால பாடம். நடிப்புக்காக மட்டும் நூறு பேர் சுத்தியிருந்தாலும் டைரக்டர் சொல்றதை வேத வாக்கா எடுத்துட்டு, ஹீரோவோட கொஞ்சலாம், விளையாடலாம்... புரியுதா... இப்ப அழாதே. லோகேஷன்ல டைரக்டர் 'அழு'ன்னு சொல்வார் பாரு. அப்ப அழு. அழுகை வரலைன்னா உங்கம்மாவை நினைச்சுக்க... இல்லே, உன் எதிர்காலத்தை நினைச்சுக்க. அழுகை தானா வரும். உங்க அம்மா கூட, அழற சீன்லே எல்லாம் கிளிசரினுக்கு வேலையே வைக்காம அழுவா. கேட்டா, 'என் குழந்தைய நினைச்சுட்டேன். அழுகை தானா வந்தது'ன்னு சொல்வா...''

விநாயக் தெலுங்கில் சரளமாக உரையாடினான். தெலுங்கில் மட்டுமல்ல... இந்தி, மலையாளம், கன்னடம் என்று அவனுக்கு பல்வேறு மொழிகள் தெரிந்திருந்தது.

சுமித்ரா வந்து சேர்ந்த அன்றே, என்னவோ பெரிய புதையல் கிடைத்து விட்ட மாதிரிதான் குதித்தான் அவன்.

''இங்கே தேஜூவைப் பார்க்க... நான் அவங்க...''

''பொண்ணு... பேரு சுமித்ரா. ஐதராபாத்லே உன் அத்தை வீட்டுல இருக்கே. அத்தை பேரு வரலட்சுமி. மாமா பேரு அருணகிரி. உனக்கும், அத்தை பையன் ராஜப்பாவுக்கும் கல்யாணம் நிச்சயமாகி இருக்கு. நீ இங்கே வந்து நிக்கறே... உங்க அம்மா, அங்கே போயிருக்கா - வீராவேசமா...''

அவள், அப்படியே அடித்து வைத்த சிலை மாதிரி நின்று விட்டாள்.

"ஐய்யயோ... இப்ப நான் என்ன செய்யறது?"

பயமும், தவிப்பும் ஒன்றுசேர, அவள் மிரண்டு போய் கேட்ட போது, விநாயக் அகலமாய் சிரித்தான்.

"முதலாவது இங்கே நின்று பேசக் கூடாது. மாடிக்கு வா..."

அவன், அவளைக் கையைப் பிடித்து இழுக்காத குறையாக இழுத்துப் போனான்.

தேஜஸ்ரீயின் அறையில் அவளை உட்கார வைத்து விட்டு இண்டர்காம் மூலம் அய்யரை அழைத்து, சூடாய் இட்லியும், கத்தரிக்காய் கொத்சும் கொண்டு வரச் சொன்னான்.

"அம்மா ரொம்ப பசியோட இருக்காங்க அய்யர். நாலு இட்லியா கொண்டாங்க. அப்படியே எனக்கும் கூட ரெண்டு தம்ளர் பால்... என் பாலுல சர்க்கரை... அம்மாவோ... வழக்கம் போல எதுவும் போட வேண்டாம்."

இதைச் சொல்லி விட்டு, சுமித்ராவைப் பார்த்து, பாசமாய் சிரித்தான்.

"அப்பப்பா... இத்தனை நேரம், ஒவ்வொரு புரொடியூசருக்கும் பதில் சொல்லிச் சொல்லி, என் தொண்டை வறண்டு போச்சம்மா... இதப்பாரு... கிட்டத்தட்ட பதினொம்பது - இருபது வருஷமா உங்கம்மாவுக்கு நான்தான் பி.ஏ... மேனேஜர்... பி.ஆர்.ஓ... நல்ல நண்பன்... முதல் எதிரி எல்லாம்... உனக்கும் அப்படியே வச்சுக்கலாம். பயப்படாதே. எனக்கும் பொண்ணு குழந்தைங்க உண்டு."

"அம்மா வர்ற வரைக்கும் நான்..."

"எங்கேயும் போக வேண்டாம். இங்கேயே இருக்கலாம். இது உன் வீடு. புரியறதா... ஆனா ஒரு சின்ன ஹெல்ப் பண்ணணும்!"

"என்னது?"

"இருக்கட்டும். முதல்லே டிபனை சாப்பிடு. பால்... சர்க்கரை போட்டதை எடுத்துக்க. திமானு ரெண்டு பால், சர்க்கரை போட்டுன்னு சொன்னா - அய்யர் அரண்டுடுவார். என்னா இத்தனை சம்பாதிக்கிறாளே தவிர உங்கம்மாவுக்கு ராத்திரிக்கு ரெண்டு இட்லிதான். சர்க்கரை போடாத பால்தான்... இப்போதைக்கு தேஜாவுக்கு ஒரு பொண்ணு அதுவும் கல்யாண வயசுல இருக்கறதா தெரிய வேண்டாம்னு பார்க்கறேன்..."

"எப்படியும் அம்மா வந்தா தெரிஞ்சுடத்தானே போறது?"

சுமித்ரா, அப்பாவியாய் கேட்டாள். விநாயக், அவளுக்கு விலாவாரியாக விளக்கினான்...

"ஆறு படம் முடிச்சுத் தர வேண்டியிருக்கு சுமித்ரா. புதுசா வர்ற ஹீரோயின் எல்லாம் - எந்த நிமிஷம் எவனைக் கல்யாணம் செஞ்சிட்டு, பத்திரிகையில நியூஸ் வருமோன்னு அவங்களை ஒப்பந்தம் செஞ்ச பட முதலாளிங்க எல்லாம், வயித்துல நெருப்பைக் கட்டிட்டு இருப்பாங்க."

"...."

"இந்த ஃபீல்டுலேயே என்ன ஒரு பிரச்சினைன்னா ஹீரோவோ, ஹீரோயினோ தினமும் யாரையாவது காதலிச்சிட்டே இருக்கணும். கல்யாணம் செஞ்சுக்கப் போறோம்னு பேட்டி கொடுத்துட்டே இருக்கணும். அதுதான் கவர்ச்சி. அதை விட்டுட்டு, அசட்டுத்தனமா கல்யாணம் செஞ்சிட்டாங்க...



அவ்வளவுதான்... திரும்பிப் பார்க்க நாதியிருக்காது..."

"...."

"உங்கம்மாவும் இது நாள் வரைக்கும் ரசிகர்களோட கனவுக் கன்னியாவே இருந்துட்டா. தினமும் ஒரு பிரபலத்தோட பேசப்படுவா. அதெல்லாம் என் பிரச்சினை. தினமும் உட்கார்ந்து இன்னிக்குப் பரபரப்பா பேசப்படற ஆசாமி யாருன்னு நான் மூளையைப் போட்டு உடைச்சுப்பேன். அஃப்கோர்ஸ்... இது என் கடமைன்னு வச்சுக்க. இப்பப்பாரு... கூரியர் கிடைச்சதும் கிளம்பிப் போயிட்டா... இத்தனை பேருக்கும் பதில் சொல்றது யாரு? அதுவும் இன்னிக்கு பல லட்சம் செலவுல ஷெட்யூல். இவ வரல்லைன்னா டைரக்டர் ஆள் வச்சு அடிப்பான்... தேவையா நமக்கு..."

நீள நெடுகப் பேசி, மெதுவாய் விஷயத்துக்கு வந்தான் விநாயக்.

"அம்மா வர்ற வரைக்கும் நீதான் அம்மா. என்ன அப்படி பார்க்கறே? உங்க ரெண்டு பேரையும், பக்கத்துப் பக்கத்துல நிறுத்தி வச்சா பார்க்கறவங்க, உங்க ரெண்டு பேரையும் அக்கா, தங்கைன்னு கூடச் சொல்ல மாட்டாங்க. ரெட்டைப் பிறவியான்னு கேப்பாங்க. இல்லே, மலையாள மாந்திரீகமா, சித்து வேலையான்னு கேப்பாங்க. எனக்கே இன்னும் மலைப்பா இருக்குன்னா பார்த்துக்கோ."

இப்படித்தான் கெஞ்சி, கெஞ்சி அவளை மசிய வைத்தான்.

"உங்கம்மா முடிச்சுக் கொடுக்க வேண்டியது எல்லாம் முடிச்சாச்சு. ரெண்டு குளோசப் ஷாட்... அப்புறம் நாலு டிராலி ஷாட். அவ்வளவுதான். ரெண்டே நியாயமாப் பார்க்கப் போனா டிராலி ஷாட்டுக்கு டூப் போட்டுடப் போயிடலாம். நேத்து அவனோட பணத் தகராறு. இப்ப அவன் நேரம், சதாய்க்கறான். ப்ளீஸ்... நீ வாயேன். உங்கம்மா பாவம்... ஹைதராபாத் வரைக்கும் சொல்லச் சொல்லக் கேட்காம, தானே காரை ஓட்டிட்டுப் போயிருக்கா. பிடிவாதம்... வர்றச்சே அடிச்சுப் போட்டாப்பல வருவா... இவனுங்களுக்கு இதெல்லாம் புரியுமா... நடுவுல கிடந்து முழிக்கறது யாரு... நான்தான்!"

சுமித்ரா, பயந்தபடிதான் ஒத்துக் கொண்டாள். உள்ளூற ஒருவித பதட்டம் இருந்தாலும் அம்மாவுக்காக செய்கிறோம் என்கிற திருப்தியும் ஒருபுறம் இல்லாமல் இல்லை.

"நீ எதுவுமே பேசாதே. எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன். நீ, உன் பாதானவைத் தூக்கியெறி... தேஜா மாதிரி உன்னை ரெண்டே நிமிஷத்துல மாத்தறேன்."

சொன்னது மட்டுமில்லை, சொன்னபடி செய்யவே செய்தான்.

"கொஞ்சம் அழுத்தமா லிப்ஸ்டிக் போடும்மா. கண்ணுல அடர்த்தியா ஐலைனரால தீட்டு... வகிடு எடுத்துப் பின்னாதே. அப்படியே தூக்கிச் சீவு... ஒரு குதிரைவாலை எடுத்து மாட்டு... அட அட... இப்படியொரு உருவ ஒற்றுமையா... யாரும் கையடிச்சு சத்தியம் செஞ்சாக் கூட நம்ப மாட்டாங்க..."

அன்றைய படப்பிடிப்பில் சுமித்ராவுக்கு அதிக வேலையில்லை. ஆனாலும், அவளது பால் வழியும் முகம், புரொடியூசரின் வயிற்றில் பாலை வார்த்தாற்போல...

"தேஜம்மாவுக்கு இருக்கற இளமைக்கும், அழகுக்கும் முன்னாடி இன்னிக்கு

வர்ற ஒரு ஃபிகர் நிற்க முடியாது அண்ணே... பாருங்களேன் புது ஹீரோ கூட வச்ச கண்ணை எடுக்கலே...''

அன்றைக்கு சுமித்ராவுக்கு எல்லாமே புது அனுபவமாக இருந்தது. இரவு முடிந்து பகல் வந்ததே தெரியவில்லை.

இதோ... அதோ என்று வேலை முடியவே மாலை ஆறு மணியாகி விட்டது. அரக்கப் பரக்க வீடு வந்தால் மாடியில் அம்மா...

சல்யூட் அடித்த கூர்க்கா பந்தலில் இருந்த சுமித்ராவையும், விநாயக்கையும் பார்த்து, பேந்தப் பேந்த விழித்தான்.

''சாப்...''

''என்ன பாக்கறே... கார் நிக்குதே. அம்மா வந்தாச்சா... இது அம்மாவோட அம்மா. லண்டன்லே இருந்து வந்திருக்காங்க. வயசானவங்க... முடியலே... இரு... மாடியில கொண்டு போய் விட்டுட்டு வாரேன்.''

விநாயக், சுமித்ராவின் காதோடு சொன்னான்.

''உங்கம்மா ஊருலேருந்து வந்தாச்சு. உன்னைக் கைப்பிடியா மாடியில கொண்டு விடறேன். தேஜாவோட ரூம்லே போய் கொஞ்ச நேரம் பேசிட்டுரு... பின்னாடியே நான் வாரேன். ஒரு வீட்டுல ரெண்டு நடிகைங்கள அதுவும் ஒரே பேருல வச்சு சமாளிக்கறதுல எகப்பட்ட கஷ்டம் இருக்கு...''

அவன், அவளது கையைப் பிடித்து, தாங்கியபடி மாடிக்கு அழைத்துப் போனான். அவள், தேஜாவின் அறைக்குள் போய் கதவைத் தாழிட்டுக் கொண்டதும், சமையற்காரர்கள், டிரைவர்கள், வேலைக்காரர்கள் என்று சகலமானவர்களையும் அழைத்து வைத்து விஷயத்தைச் சொன்னான்.

''தேஜாம்மாவோட அம்மா, லண்டன்லேயிருந்து வந்திருக்காங்க. இப்பத்தான் ஏர்போர்ட் போய் அழைச்சிட்டு வந்தேன்.''

''அப்படியா... நாங்க பாக்கலே இல்லையே...''

''எப்படி சார் இருக்காங்க?''

''உடம்பு சரியில்லேன்னு சொல்லிங்களே... இப்ப தேவலையா சார்...?''

தலைக்குத் தலை கேள்விகள்...

''உடம்பு சரியில்லேதான். என்னவோ, மகள் கூடவே இருந்தா கொஞ்சம் நிம்மதியா இருக்கும்னுதான் வந்திருக்காங்க. அனேகமா, அவங்க மாடியிலேயே தான் தங்குவாங்க. பூரண ஓய்வு தேவை. அவங்களுக்கு வசதியா ஒரு ரூமை ஏற்பாடு செய்யுங்க. 'டயட்' எல்லாம் கேட்டு சொல்றேன். அதுப்படி செய்யுங்க. மொத்தமாப் போய் பார்த்து, தொந்தரவு செய்யக் கூடாது... நான் சொல்றப்ப போய் பார்க்கலாம்...''

இதைச் சொல்லி விட்டுத்தான் அவன் மாடியேறினான். தேஜாவின் அறைக் கதவை கம்பீரமாய் தட்டினான்.

தேஜாதான் கதவைத் திறந்தாள்.

அவன், உள்ளே வந்து, மறுபடியும் கதவைத் தாழிட்டுக் கொண்டே கேட்டான்.

''எங்கே உன் பொண்ணு?''

''டேய், நீ செஞ்சது ரொம்பவும் அநியாயம்டா... நான் ஒருத்திதான் லட்சம் லட்சமா சம்பாதிச்சுக் கொட்டறேனே... போதாதா? பாவம், குழந்தை... அம்மாவைத் தேடி வந்திருக்கா... அவளை நீ, தேஜாவா கொண்டு போய் நிறுத்தி... அடேய்... அடேய்... நீ நாசமாத்தான் போவே...''

விநாயக் புன்னகை மாறாமல், அங்கிருந்த சோபாவில் சாய்ந்தான். குளியலறையைப் பார்த்து, குரல் கொடுத்தான்.

''அம்மா சுமி... வெளில வா. நான்தான் வந்திருக்கேன்.''

அவள், மெதுவாக முயல் குட்டிபோல எட்டிப் பார்த்தாள். அவனைப் பார்த்தபடியே தாயை ஒட்டி நின்றாள்.

''கிட்ட பார்க்கறப்பதான் ஒரிஜினல் இளமைக்கும் டூப்ளிகேட் இளமைக்கும் வித்தியாசமே தெரியுது... என்னதான் டாக்டர் பாவனா ஒரு சிற்பியை விடவும் நேர்த்தியா உன்னைச் செதுக்கி இருந்தாலும் ஒரிஜினல், ஒரிஜினல்தான்... இது அதனால, இப்போதைக்கு ஒத்துக்கிட்டிருக்கற படங்களை சுமித்ராவே முடிச்சுத் தந்துட்டும்... நீதான் எப்பவும் கேட்பியே... 'எனக்கு ஓய்வே இல்லையா'ன்னு... இனிமே உனக்கு முழு ஓய்வு...''

தேஜுஸ்ரீ சீறிப் பாய்ந்தாள்.

''இந்தா, அத்தனைப் படங்களையும் முடிச்சுத் தர வேண்டிய பொறுப்பு என்னோடது. அநாவசியமா அவளை இதுல இழுக்காதே... நான் பட்டதெல்லாம் போதும்...''

விநாயக், எதற்கும் மசியவில்லை. அவன் மனசுக்குள் ஏற்கனவே ஒரு திட்டம் உருவாகி விட்டது.

அது சுமித்ராவை தேஜாவாக்கி, தேஜாவை லண்டனிலிருந்து வந்துள்ள அவளது தாயாராக்கி, கட்டிலோடு படுக்கப் போட வேண்டியதுதான்.

இன்னும் இரண்டு வருட காலத்துக்காவது இது அவசியம். இதற்கு தேஜா ஒத்துக் கொண்டே ஆக வேண்டும்.

ஏனெனில், படங்களுக்கு ஒப்பந்தம் செய்கிற சமயத்தில், எதற்கும் இருக்கட்டும் என வேறு சில வெற்றுப் பேப்பர்களிலும் அவள் கையெழுத்து வாங்கி வைத்திருக்கிறான்.

''எதுக்கு விநாயக்?''

''பார்த்தியா... இதானே உன்கிட்ட... உனக்கென்ன, ஷூட்டிங்னு போய் உட்கார்ந்துருவே... நாளைக்கு இந்த புரடியூசரே நம்பர் ரீ மணிக்கு உன் கையெழுத்தோட ஒரு லெட்டர் கேட்பான். கொடுக்கலையின்னா சிக்கல்லே மாட்டி வைப்பான். நம்ம வக்கீலுக்கு, ஆடிட்டருக்கு உன் கைப்பட லெட்டர் போனாத்தானே அவங்க, மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பார்ப்பாங்க.''

இப்படி எத்தனையோ விவகாரங்கள் இருக்கின்றன. சேர்ந்து வாங்கிய நிலம்... வங்கி கணக்கு ஓரிரண்டு... லாக்கருக்கு நாமினேஷன்... இப்படி பலப்பல.

தேஜா வாயடைத்து உட்கார்ந்து விட்டாள். சுமித்ராவுக்கு தாயைப் பார்ப்பதற்கு முன் இருந்த கோபமெல்லாம் பறந்தே விட்டது. இப்போது அவள் மீது பரிதாபம்தான்.

"இப்ப என்ன... நீ ஒத்துகிட்டதை நான் முடிச்சுட்டேம்மா. நிஜமாவே யாரும் என்னை அடையாளம் கண்டுபிடிக்கலே."

முதல் இரண்டு நாட்கள் வரையில், சுமித்ரா தேஜஸ்ரீயாகப் படப்பிடிப்புக்குப் போய் வந்தாள்.

மூன்றாம் நாள் விக்டர் தேவ சகாயம் வந்திருந்த போது அந்த விடிகாலை நேரத்தில் சுமித்ரா, 'தடதட'வென மாடியிலிருந்து ஓடி வந்தாள்.

"சார்... சார்... விநாயக் எங்கே?"

"இன்னும் வரல்லையே... என்ன ஆச்சு தேஜா...?"

"தேஜாவா... நான்... நான்..."

ஒருகணம் திகைத்த சுமித்ரா, உடனேயே சமாளித்துக் கொண்டு, அழுகையூடே சொன்னாள்.

"அம்மா... அம்மா... இறந்துட்டாங்க..."

"அம்மாவா?"

விக்டர் திகைத்து நிற்க, சமையற்காரரும், வேலையாட்களும் ஓடி வந்தனர்.

"ஆமா சார்... தேஜம்மாவோட அம்மா உடம்பு சரியில்லைன்னு இங்கே வந்து... மூணு நாள்தான் ஆகுது... நாங்க சரியாகக் கூடப் பார்க்கலே... அதுக்குள்ளே போயிட்டாங்களே!"

ஒருகணம் ஸ்தம்பித்து நின்ற விக்டர் மாடிக்கு ஓடினார்.

## 8

தேஜாவின் மரணம், விநாயக்கையுமே ஒரு கலக்கு கலக்கித்தான் விட்டது. எதிர்பாராத அனாயாச மரணம்...

தன் மகளை நல்ல படியாக வாழ வைத்துப் பார்க்க முடியாத அந்தத் தாய் தனக்குள்ளேயே துக்கத்தைச் சுமந்து, இதயத்தின் செயல்பாடு 'பொசுக்'கென நிற்க, போயே போய் விட்டாள்.

'அம்மா... அம்மா...' என்று மகள் கதறும் குரலைக் கேட்காத் தொலைவிற்கு... சுமித்ரா இப்படி தன்னை ஒரு நாளாவது வாய் நிறைய அழைத்து, அதைத் தான் செவி நிறையக் கேட்டு அனுபவிக்க வேண்டுமென எத்தனை நாள் ஏங்கியிருக்கிறாள் இவள்...

விநாயக், நடந்த சம்பவத்தினால் அதிர்ந்து போயிருந்தாலும், உடனேயே சுமித்ராவை தனியே அழைத்துப் போய் அதட்டும் தொனியில் சொன்னான்.

"என்ன சுமி இது... நீயே உன்னைக் காட்டிக் கொடுத்திடுவே போல இருக்கே... இதப்பாரு... நீ தேஜா. செத்துப் போயிருக்கிறது லண்டன்லேயிருந்து வந்த உங்க அம்மா..."

"இனிமேயும் எதுக்கு இந்த ஆட்டம் விநாயக். நான் யாரைத் தேடி வந்தேனோ அவளே போயாச்சு..."

"இதை லட்சம் லட்சமா பணத்தைக் கொட்டி, படம் பண்ணற



முதலாளிங்ககிட்ட சொல்ல முடியாது சுமி... அட்வான்ஸா மொத்த தொகையையே உங்கம்மா காலடியில வச்சவன் எத்தனை பேர்? பணத்தைத் திருப்பிக் கொடுக்கவும் முடியாதபடி எல்லாத்தையும் நிலமாகவும், வீடாகவும் மாத்திட்டா உங்கம்மா. இனிமே அதையெல்லாம் வித்து... இவங்க கடனை அடைச்சு... அதுக்குள்ள படத்துல நடிச்சிட்டிருக்கற ஹீரோ அப்பா ரோல் பண்ண வந்திருவான். இங்கே - இந்த சினிமா உலகத்துல மட்டும் - ஒவ்வொரு நிமிஷமும் வாங்கற கடனுக்கான வட்டி ராக்கெட் மாதிரி எகிறிட்டே போகும். கஜானியக் கொட்டி சில்லறைய எண்ணி எடுக்கற தொழிலை... உங்கம்மாவுக்காக நல்லா அழு. ஆனா, நீ தேஜா. செத்துப் போனது உன் லண்டன் அம்மா. இதை மட்டும் கவனத்துல வச்சுக்க போதும்..."

சுமித்ரா, தாயின் உடலத்துக்குப் பக்கத்தில் அமர்ந்து, மௌனமாய் அழ, விக்டர்தான் அவளைச் சுற்றி வந்து கொண்டிருந்தார். விநாயக் கூட நாசூக்காய் சொல்லிப் பார்த்து விட்டான்.

"சார், பாவம் தேஜா... அவ அம்மாவுக்காக ரொம்பவும் மனசு உடைஞ்சு போய் அழறா... அவளைத் தனியா கொஞ்ச நேரம் விட்டுடலாமே... வாங்க, கீழே வேலை இருக்கு. நீங்க வேணா ஒண்ணு செய்யுங்களேன்!"

"சொல்லு விநாயக், நான் என்ன செய்யணும்?"

குழந்தை மாதிரி கேட்டார் விக்டர், கண்களில் அவரையும் மீறிக் கண்ணீர்.

"அந்தம்மாவைப் பார்த்தா அப்படியே தேஜா மாதிரியே இருக்குது விநாயக். அப்படியொண்ணும் ரொம்ப நாள் வியாதியில படுத்திருந்த மாதிரியும் தெரியல்லே... [illegible]..."

விநாயக், அவரை ஒரு கணம் உற்றுப் பார்த்தான். மனசுக்குள் மெல்லிசு குற்ற உணர்வு இல்லாமல் இல்லை.

பாவம்... இறந்தது அவரது உயிருக்குயிரான தேஜா தான் என்பது மட்டும் தெரிந்தால்...

மனிதர், அந்தக் கணத்திலேயே பிராணனை விட்டிருப்பார்.

"நான் என்ன செய்யணும்... சொல்லு விநாயக்..."

"விஷயம் வெளியே பரவி, கூட்டம் வர்றதுக்குள்ளே தேஜாவோட அம்மாவை ஒரு சந்தனப் பெட்டியில வச்சுடணும். அதுக்கு நீங்கதான் ஏற்பாடு செய்யணும் மிஸ்டர் விக்டர்..."

"இதோ... இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துரும் விநாயக்..."

விக்டர், தொலைபேசியை நோக்கிப் பறந்தார். விநாயக், நிம்மதியாய் மூச்சு விட்டான்.

அன்றைய மாலை தினசரிகளிலேயே செய்தி, கொட்டை எழுத்தில் வந்து விட்டது. விடாது தொலைபேசிகள் ஒலித்துக் கொண்டே இருக்க, பூமாலைகளும், வளையங்களும் கையில் ஏந்தியபடி கோடம்பாக்கமே பெயர்ந்து வந்து விட்டாற்போல - நேரமாக ஆக, கூட்டம் நெரிக்கத் தொடங்கியது.

"தேஜாவுக்கு ஒரு அம்மா இருக்கறதே எங்களுக்குத் தெரியாது."

"இத்தனை நாளும் லண்டன்லேயா இருந்தாங்க... அங்கே யார் இருந்தாங்க?"

''அப்படியே தேஜா மாதிரியே இருக்காங்க... வயசு கூடத் தெரியலே... பாவம்...''

''ரொம்ப அழறாங்களே... யாராவது கொஞ்சம் பக்கத்துல போய் ஆறுதல் சொல்லுங்கம்மா. இங்கேயே நிற்காதீங்க...''

பிறப்பு என்றால் இத்தனை பேர் பக்கத்தில் இருக்கிறார்களோ என்னவோ 'இறப்பு' என்றதும் எனமாய்க் கூட்டம் கூடி விடுகிறது? இந்த சாக்கில் சுமித்ராவைக் கட்டி அணைத்து ஆறுதல் சொன்ன பட முதலாளிகளும், பிரமுகர்களும் தான் எத்தனையெத்தனை...

தேஜா பயணப்பட்டு விட்டாள் - தனது அருமை மகளை அத்தனை பெரிய பங்களாவில் தனியே விட்டுவிட்டு...

விக்டர் மட்டும் காலையும் மாலையும் அங்கேதான் வாசம். தேஜாவின் பதின்மூன்று நாள் சடங்கு முடிந்த கையோடு விநாயக், சுமித்ராவை, படப்பிடிப்புக்குக் கிளப்பி விட்டான்.

''என்னாலே முடியாதுங்க...''

''சேச்சே... அப்படி சொல்லக் கூடாதும்மா... உங்கம்மாவைக் கொஞ்சம் நினைச்சுப்பாரு... அவ ஒரு கடனாளியாத்தான் போகணுமா..?''

''இந்த வீடு, இந்த சொத்து எல்லாத்தையும் வித்து கடனை அடைச்சிடுங்களேன்.''

''எல்லாமே உன் பேருல... சில சொத்துக்கள் மட்டும் அவ பேருல. எங்க ரெண்டு பேர் மேலயும் கொஞ்சம்... யோசிச்சுப் பாரு... முதல்லே நீதான் அவ மகளங்கறதை நிரூபிக்கணும். ரெண்டாவது அவளோட 'டெத் சர்டிபிகேட்' வாங்கணும். 'இந்த சொத்துக்களை விற்க எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை'யின்னு அவளோட பொண்ணு எழுதித் தாணும். சுரபசம் வச்சுக்க. 'அவளோட பொண்ணு...' அதுக்கு எங்கே ஆதாரம்... முதல்லே 'பர்த் சர்டிபிகேட்' இருக்கா... அப்படியே இருந்தாலும் அப்பன் பேரு துணை... ஆத்தா பேரு செல்லாதது! செல்லாததான் தேஜாஸ்ரீங்கறதுக்கு ஒரு அட்டஸ்டேஷன்...''

''ஐயோ... போதும்...''

சுமித்ரா, தனது இரு செவிகளையும் பொத்திக் கொண்டு அலறினாள்.

''இதுதான் உலகம் சுமி. என் மாமனாருக்கு மாசா மாசம் பென்ஷன் மூவாயிரம் ரூபாய். இப்ப அவர் காலமாயிட்டார்னு வச்சுக்க, எங்க மாமியார் தான்தான் அவரோட பெண்டாட்டிங்கறதுக்கு சாட்சியா அம்பது வருஷத்துக்கு முன்னாலேயே நடந்த கல்யாணப் பத்திரிக்கை, போட்டோ, ரேஷன் கார்டு, நாமினேஷன், ஆதாரசேஷன்னு ஆயிரம் சாட்சிங்களைத் தேடணும். ஒரு மூவாயிரம் ரூபாய்க்கு...! தேஜாவோட சொத்துக்களுக்கு எத்தனை சாட்சி வேண்டியிருக்கும். பேசாம நீயே தேஜாவாயிடுங்கறேன். பிரச்சினையே இல்லே. என்ன, இந்த விக்டரை விரட்டணும். அதை நான் பாத்துக்கறேன். உன் கறுப்புக்கு நான் உத்தரவாதம்...''

சுமித்ரா மலைத்துப் போய் உட்கார்ந்திருந்தாள். ஒவ்வொரு முறையும், படப்பிடிப்புக்காக அவள், விநாயக்குடன் கிளம்பும் போது பரிவாய், பாசமாய், பார்வையாலேயே வருடிக் கொடுத்தபடி விக்டர் அந்த வீட்டு விசாலமான ஹாலில்...



''என்ன சார், இன்னுமா ஊருக்குப் போகலே?''

இது விநாயக்.

''எப்படிப்பா... தேஜாவை இந்த நிலையில விட்டுட்டு... ப்ச்... மனசே வர மாட்டேங்குதுப்பா...''

இது விக்டர்.

அந்த பங்களாவின் மிகப் பெரிய இரும்பு கேட் திறந்து மூடும்போதெல்லாம் வாசலில் ஊஞ்சல்... முனைடந்த முகூ நடன...

''சுமி... சுமி... செத்துப் போனது தேஜாதானே..?''

''...''

''சுமி... நீ சுமியா, தேஜாவா... ஏய், கேட்கறேனில்லே... உன் பொண்ணையே கொன்னுட்டியா... உனக்கு ஏதுடி அம்மா... பாவி... படுபாவி...''

சுமித்ரா சிலையாய் உட்கார்ந்திருப்பாள். சில சமயங்களில், கார் ஜன்னல் கறுப்புக் கண்ணாடியில் முகத்தைப் பதித்துக் கொண்டு உள்ளே ஊடுருவிப் பார்ப்பான். சுமி கண்களை இறுக மூடிக் கொள்வாள். சில நாட்களாக அவனையும் காணவில்லை. அவனது தடம் புரிந்து கொண்டு, விநாயக் தான் சொன்னான்.

''அந்த ஆளை மெண்டல் ஹாஸ்பிடலுக்கு அனுப்பியாச்சு... கவலைப்படாதே... அவனுக்குத் தேவையான வசதிகளை செஞ்சு தரச் சொல்லியிருக்கேன். அவனோட ஊருக்கும் சொல்லி அனுப்பியாச்சு...''

''...''

''என்ன பார்க்கறே? இதெல்லாம் என் கடமை...''

சுமித்ரா மௌனமாக இருந்தாள். என்னதான் அவள் தேஜாவின் மறுபதிப்பாக இருந்தாலும், நடிப்பு என்பது அத்தனை சுலபமாக வாய்க்கவில்லை... டைரக்டர்கள் கூட சில நேரங்களில் வியந்து போனார்கள்.

''என்ன தேஜா... இதெல்லாம் உனக்கு சொடுக்கு போடற மாதிரி... என்ன ஆச்சு உனக்கு?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே சார்... அவங்க அம்மா இறந்த துக்கம் இன்னும் தீரலே...''

விநாயக் பூசி மெழுகுவான். சுமித்ராவை தனியே அழைத்துப் போய், அவளது அம்மாவின் நடிப்புத் திறமையைப் பற்றிச் சொல்லிச் சொல்லி, பாலாடையில் புகட்டுவது போல நடிப்பைப் புகட்டுவான்.

''மீன் குஞ்சுக்கு நீச்சல் சொல்லித் தரணுமா... சுமி, இது ஒண்ணும் உனக்குப் பெரிய சமாச்சாரமே இல்லே...''

அவளுடன் இதுநாள் வரையில் தொடர்ந்து நடித்து வந்த நடிகர்களோ அவளிடமே பிரமிப்பு கலையாமல் சொன்னார்கள்.

''மேடம்... சின்னப் பொண்ணு மாதிரி 'சிக்'குன்னு இருக்கீங்க...''

''தேஜா... பேசாம நாம ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சுக்கலாமே... ஏற்கனவே பத்திரிகைகளிலே ஒண்ணு விடாம கிசுகிசுத்துட்டாங்க...''

இதுமாதிரியான தொந்தரவும் இப்போது அதிகமாகி விட்டது...

ஒரு பிரபலமான புது ஹீரோ அத்தனை பேர் மத்தியிலும் சொன்னான்.

''டாக்டர் சார், இந்த வயசுக்கும் தேஜாவைத் தொட்டா ஷாக் அடிச்ச மாதிரி ஒரு 'ஃபீலிங்' இருக்கு. அண்ணியின்னு சொல்லி, தோளுல சாய்ஞ்சு அழ

முடியல்லே... ஸாரி..."

"என்னமோ காயகல்பம் சாப்பிட்டு அப்படியே ஃப்ரிஜுலே வச்ச மாதிரி இருக்காடா..."

இத்தனையையும் கேட்டபடி சுமித்ரா நடிக்க வேண்டிய அவசியம்.

அன்று அவள் ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

அன்றைய படப்பிடிப்பில் ஒரு தீப்பிடித்த குடிசைக்குள்ளிருந்து கதாநாயகன் அவளை மீட்டு வர வேண்டிய காட்சி...

கதாநாயகன் உடம்பு முழுக்க ரப்பர் சொல்யூஷனைப் பூசிக் கொண்டு தயாராக இருந்தான். மேக்கப் - மேன் இவளுடைய உடைகளிலும் அந்த திரவத்தை தடவ முனைய, அவள், அந்த டியூபைப் பிடுங்கிக் கொண்டாள்.

"நானே போட்டுக்கறேன். நீ போ..."

தேஜாவின் வார்த்தைக்கு மறுப்பு சொல்ல யாருக்கு தைரியமிருக்கிறது?

இதுவரையில் எத்தனை நெருப்புக் காட்சிகளில் தத்ரூபமாக நடித்து ரசிகர்களைப் பிழியப் பிழிய அழ வைத்திருக்கிறாள் அவள்.

'காதலிக்க ஏற்ற காதலன்' என்கிற படத்தின் க்ளைமாக்ஸ் பற்றி, இன்னமும் சினிமா வட்டாரம் பேசுமே...

"டூப் போடாம, ஒரிஜினலா அந்த தேஜா ஓடி வந்தா பாரு... உடம்பு முழுக்க 'திகுதிகு'ன்னு எரிய... அது க்ளைமாக்ஸ்டா... அந்த ஒரு ஸீனுக்காகவே படம் நூறு நாள் தாண்டி ஓடிச்சுடா... படம் பண்ணினா அந்த மாதிரி பண்ணணும்."

இத்தனை புகழ் பெற்ற தேஜாவுக்குத் தெரியாததா...

மேக்கப் மேன் அறையை விட்டு வெளியேறினார்.

நெருப்புப் பிடித்த வீடு... 'திகு திகு'வென எரிய... பக்கத்திலேயே தீயணைப்பு வண்டிகள் தயாராகக் காத்திருக்க -

கதாநாயகனுக்கு செய்தி போய் அவன் வெறி பிடித்தாற் போல ஓடி வருகிறான். அவளது அம்மாவாக நடிக்கும் நடிகை வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுகிறாள்.

"தம்பி... மோசம் போயிட்டோமேடா... வீட்டுக்குள்ற உன்ற பொஞ்சாதி வள்ளி... என்ற மகனே... பறி கொடுத்திட்டோமடா."

"வள்ளீ... இ... இ... ஈ... ஈ..."

கதாநாயகன் நெருப்பிற்குள் பாய்ந்தான். திரும்பி வரும் போது அவனது கைகளில் துவண்ட மலராய் சுமித்ரா.

"அய்யய்யோ என்னங்க... முகமெல்லாம் வெந்து கிடக்கு..."

"யாருய்யா மேக்கப் மேன்..? முகத்துக்கு ரப்பர் சொல்யூஷன் பூசலையா..."

"சார்... அது வந்து... தேஜாம்மா, தானே போட்டுக்கறதா சொல்லி.... என்னை வெளில போகச் சொல்லிட்டாங்க..."

விநாயக் விக்கித்து நின்றான். இதற்குப்பிறகு ஆம்புலன்ஸ் வந்ததும், அவளை மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றதும் மின்னல் வேகத்தில் நடைபெற்ற சம்பவங்கள்.

"எப்படி சார், இத்தனைப் பழக்கப்பட்டவங்க, இந்த மாதிரி அஜாக்கிரதையா



இருந்துட்டாங்க?"

"முகம் மட்டும் கருகிப் போச்சப்பா... அந்த முகம்... ப்ச்.... இனிமே பார்க்க முடியுமா..."

மருத்துவமனையின் வாசலில் காத்திருக்கும் ரசிகர் கூட்டம்.

தேஜா உயிர் பிழைத்து எழுந்தாலும், இனி தொடர்ந்து நடிக்க முடியாது என்றும், இல்லை... பிளாஸ்டிக் சர்ஜரி செய்த பின் தேஜா மீண்டும் பழையபடி நடிக்க வருவாள் என்றும் ரசிகர்களும், பத்திரிகைகளும் கட்சி கட்டிக் கொண்டு பேசின...

தேஜாவின் - இல்லை... சுமித்ராவின் அருகிலேயே இரவும் பகலும் தூங்காமல் விழித்தவாறு விக்டர் தேவசகாயம்.

"நீ கவலைப்படாதே தேஜா... உன்னை உலகத்துல எந்த மூலையில இருக்கிற ஆஸ்பிட்டலுக்கு வேணுமானாலும் நான் அழைச்சிட்டுப் போய், எத்தனை லட்சம் செலவானாலும் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யறேன். டாக்டர் பாவனா கூட நேத்து வந்து பார்க்கறேன்னு சொன்னாங்க... ஏதோ அவசர கேஸாம்... இன்னிக்கு கூட்டிட்டு வர்றதுக்காக விநாயக் போயிருப்பான்..."

"வேண்டாம்... எனக்கு பழைய முகமே வேண்டாம்... என்னை விட்டுடுங்க. ப்ளீஸ்..."

சுமித்ரா அலறினாள்... விக்டர் அவளது துயரத்துக்குக் காரணம் தெரியாவிட்டாலும் கூடச் சேர்ந்து அழுதார்...

அன்று மாலை -

சுமித்ரா, டாக்டர் பாவனாவின் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டாள்.

விநாயக் கூட வே குட்டி போட்ட பூனை மாதிரி பாவனாவின் பின்னாலேயே ஓடி வந்தான்.

"டாக்டர்... தேஜாவோட பழைய முகத்தைப் பார்க்க மாட்டோமான்னு தமிழ்நாடே காத்துட்டிருக்கு..."

"புரியுது. ஒரு அரை மணி நேரம் வெளில வெயிட் பண்ணுங்க. நான் அவங்களை 'செக் - அப்' செஞ்சிட்டுத்தான் சொல்ல முடியும்..."

"அவ ரொம்பவும் பயந்து போயிருக்கா டாக்டர். நானும் அவ கூட..."

"நோ..."

டாக்டர் பாவனா 'ப்ளீஸ்' எனச் சொல்லி விட்டு அறைக்குள் புகுந்து தாளிட-

விநாயக், மூடிய கதவை வெறித்தபடி உட்கார்ந்து விட்டான். உண்மையான கவலையுடன், உட்காராமல் - குறுக்கும், நெடுக்குமாய் நடை போட்டவர் விக்டர் மட்டும் தான்.

கண் மூடிப் படுத்திருந்த சுமித்ராவின், அரை குறையாய் ஆறிக் கொண்டு வரும் தழும்புகளை தொட்டுப் பார்த்த டாக்டர் பாவனாவின் விரல்கள், ஒரு கணம் திகைத்து நின்றன... 'சட்'டெனப் புரட்டி, காதுகளுக்குப் பின்னேயும், பின் கழுத்திலேயும் ஏற்கனவே தான் செய்த அறுவை சிகிச்சைகளின் அடையாளங்கள் இருக்கிறதா எனத் தேடின....

"ஏய்.... நீ யாரு..?"

"நான்.... நான்.... தேஜா...."

"இல்லை... தேஜாவுக்கு வழக்கமா சிகிச்சை தர்றவ நான்... எத்தனை தான் இளமையா அவ காட்சி தந்தாலும், அவ உடம்பு அறுபதை நெருங்கிக்கிட்டிருந்தது என் விரலுக்குத் தெரியும். கண்ணைக் கட்டிட்டு ஒருத்தரைத் தொட்டுப் பார்த்தே அவங்களோட வயசைத் துல்லியமாச் சொல்றவ நான்... இது நிஜமாவே இருபது வயசுப் பொண்ணோட தோல்... நீ தேஜா இல்ல... யாரு...?"

முதலில் விநாயக்குக்காகப் பயந்தாலும் டாக்டர் பாவனாவின் உதவியிலாவது, தான் இந்த சுழலிலிருந்து மீள முடியாதா என்கிற தவிப்புடன் நடந்ததை எல்லாம் சொல்லி முடித்தாள் சுமித்ரா...

"தேஜா செத்துப் போயிட்டாளா.....?"

"எஸ்..."

"அன்னிக்கு தேஜாவோட அம்மா செத்துட்டாங்கன்னு நியூஸ் வந்து, நான் கூட ஒரு மலர் வளையம் வாங்கிட்டு வந்து வச்சேனே... உன் பக்கத்துல ஒரு நிமிஷம் நின்னு ஆறுதல் சொன்னேனே..."

"நினைவிருக்கு டாக்டர்... அப்பக் கூட விநாயக்தான் 'டாக்டர் பாவனா வந்திருக்காங்க பார் தேஜா'ன்னு என்கிட்ட சொன்னான். நீங்க கூட நகர்ந்து போறப்ப கால் தடுக்கி விழ இருந்தீங்க... விநாயக்தான் தாங்கிப் பிடிச்சாரு..."

"அடிப்பாவி... அப்படியே தேஜா மாதிரியே இருந்தியே..."

டாக்டர் பாவனா வியந்து போய் நிற்க சுமித்ரா, அவளது இருகரங்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"டாக்டர்... நான் சுமித்ரா. தேஜாவோட பொண்ணு. அம்மாகூட இருக்கக் கொடுத்து வைக்காத துரதிருஷ்டக் கட்டை. என்னை மறுபடியும் அழகான தேஜாவா மாத்தாதீங்க. முடிஞ்சா ஓரளவுக்குப் பார்க்க சகிக்கிற மாதிரி என் முகத்தை மாத்துங்க. நான் தேஜாவாவே கடைசி வரைக்கும் இருந்துட்டுப் போறேன். வாசல்லே விநாயக் கூட இருக்காரே விக்டர்... அவர் எங்கம்மாவை உயிருக்குயிராய் நேசிச்சாரு. அவருக்குக்கூட அம்மா செத்துப் போனது தெரியாது. என்னைத்தான் தேஜான்னு நினைக்கிறாரு... இப்பவும் என்னை, தன் கூட அழைச்சிட்டுப் போகத் தயாரா இருக்காரு. நான் அவர் கூடப் போயிடறேன். வயசு வித்தியாசம் அதிகம்தான். ஆனாலும், நல்ல துணை இதை விட்டா வேற இல்லே..."

டாக்டர் பாவனா, அவளது கண்ணீரைத் துடைத்து தனது மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

வெளியே வந்து, விநாயக்கை மட்டும் தனது அறைக்கு அழைத்துச் சொன்னாள். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம்... பாவனா அவனை வார்த்தைகளாலேயே காய்ச்சி எடுத்து விட்டாள்.

"அவளோட சொத்துக்களை அவகிட்டயே ஒப்படைச்சிடு. அவளை தேஜாவாகவே நினைக்கிற மிஸ்டர் விக்டரா... யார் அவர்? அவர் கூட அனுப்பி வை. இல்லையின்னா நான் அனாவசியமா போலீஸ் அது இதுன்னு போக வேண்டியிருக்கும். நாளைய பேப்பர்லேயே நியூஸ் கொடு. 'சினிமாவுலே இருந்து தேஜுஸ்ரீ விலகல்... சிகிச்சைக்காக வெளிநாடு செல்கிறார்'ன்னும் கொடு."



அன்று -

சுமித்ரா கவலை ததும்ப விமானத்தின் ஓர் சீட்டில்... தான் தேஜா இல்லை என்பது தெரிந்தால் - அவளது பாஸ்போர்ட்டையும், விசாவையும் தான் உபயோகிப்பது தெரிந்தால்...

எத்தனை... எத்தனை கஷ்டம்?

விக்டர் தேவசகாயம், விமானம் புறப்படும் வரையில் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார்.

கடைசியில் அவள் பக்கத்தில் வந்தமர்ந்தார்.

"சுமித்ரா... ரிலாக்ஸ் ப்ளீஸ்..."

அவரது வார்த்தைகளில் குலுங்கி நிமிர்ந்தாள் அவள்.

"சார்..."

"ஒண்ணும் பேசாதே. இந்தா உன் பாஸ்போர்ட் எல்லாம் உன் பேருலேயே... நீ ஆஸ்பத்திரியில படுத்திட்டிருந்த சமயத்துல நான் என்ன செஞ்சேன்னு நினைக்கறே? ஹைதராபாத்துக்குப் போய், உன்னோட ஸ்கூல் சர்டிபிகேட், காலேஜ் சர்டிபிகேட் எல்லாத்தையும் வாங்கிட்டு வந்து... விநாயக் மூலமா உன்கிட்ட தேஜாவோட கையெழுத்தை வாங்கினப்பவே, சுமித்ரா தேஜுஸ்ரீங்கற உன் பேர் மாற்றத்துக்கும் ஏற்பாடு செஞ்சு... தமிழ்நாட்டுல இருந்தா மட்டும்தான் நீ தேஜா... இப்ப நீ தேஜாவோட பொண்ணு... அவ என்கிட்ட கொடுத்துட்டுப் போன கடமை. நான்... உன்னை என் மகளா அழைச்சிட்டுப் போறேம்மா..."

விக்டர் இப்பொழுதுதான் குலுங்கிக் குலுங்கி அழுதார். சுமித்ரா, அவரையே கண் கொட்டாமல் பார்த்தபடி...

அம்மா பாவம்... ஒரு நல்ல கணவருடன் வாழும் வாய்ப்பையும் அல்லவா இழந்து விட்டாள்?

சுமித்ரா, அவரது தோளை ஆதரவுடன் தொட்டுத் தேற்ற முயற்சித்தாள். குரல் சிக்கியது. ஒரேயொரு வார்த்தைதான் வந்தது.

"அப்பா..."

முற்றும்.